தர்மசக்கரம்



பிங்கள ௵ சித்திரை ௴ சக்கரம் 26 ஆரம் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை – 639 115 திருச்சி ஜில்லா

குருகுலத்தில் மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான அறிக்கை

விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளியில் ஸ்டாண்டர்டுகள் IV முதல் XI வரையிலும் உள்ளன. எட்டாம் ஸ்டாண்டர்டிலும், அதற்கு மேலான ஸ்டாண்டர்டுகளிலும் புதிய மாணவரைச் சேர்த்துக்கொள்வதில்லை. IV, V, VI, VII ஸ்டாண்டர்டுகளில் புதிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். போதனுமொழி தமிழ்.

குருகுலத்தில் மாணவரைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30 ஆம் தேதி காலையில் 9 மணிக்குள் பையன்களுடன் இங்கு வரவேண்டும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்பவேண்டிய அவசியமில்லை. பையன்களை நேரில் பார்த்து அவர்களது உடல் நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றைச் சோதித்தறிந்துகொண்டு அவர்களுக்கு இடமளிக்கப்படும். பரீட்சைகள் மே 30 முற்பகலிலும் பிற்பகலிலும் நடைபெறும். மாணவரைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமான முடிவுகள் IV ஸ்டாண்டர்டுக்கு மே மாதம் 30 ஆம் தேதி மாலையிலும், V, VI, VII ஸ்டாண்டர்டுகளுக்கு அன்று இரவிலும் அறிவிக்கப்படும். இங்குஇடம் பெற்ற பிறகு, முன்பு படித்த பள்ளிக்கூடத்திலிருந்து பள்ளிக்கூட மாற்ற சர்ட்டிபிகேட் வாங்கினல் போதுமானது. வருஷ இடையில் மாணவர் யாரையும் சேர்ப்பதில்லை.

ஒரு மாதத்திற்கு மாணவன் ஒருவனுக்கு உணவுச் செலவு சராசரி ரூ. 110 ஆகும். முட்டுவழிச் செலவு, வாடகை, விடுதியில் போதனைக் கட்டணம், கல்வி அபிவிருத்தி நிதிக்கட்டணம் ஆகியவைகள் மாதத்திற்கு நான்காம் வகுப்பிற்கு ரூ. 25 ஆகிறது. வகுப்புக்கு ஏற்ப இத் தொகை அதிகரிக்கும். பதினென்றும் வகுப்பில் ரூ. 35 ஆகிறது. இவற்றுடன் புத்தகச்செலவும், துணி, சலவை முதலிய இதரசெலவுகளும் சேர்ந்து வகுப்பிற்கேற்ப சராசரி ரூ. 140 முதல் ரூ. 160 வரை மாதச் செலவு அடங்கும். வருஷத்தினிடையில் மாணவன் குருகுலத்தைவிட்டு நீங்கினல் ஜூன் முதல் மே மாதம் முடிய ஒருவருஷத்துக்குக் குருகுலத்திற்கான கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தியாகவேண்டும். மாணவர்கள் சேரும்பொழுது பொறுப்புத்தொகை ரூ. 200ம் சாமான்கள் பொருட்டு ரூ. 150ம் ஆக ரூ. 350 முன்பணமாகச்செலுத்திவிடவேண்டும். இலவசமாகவோ குறைந்த செலவிலோ மாணவரைச் சேர்த்துக்கொள்வதில்லை.

இன்னமும் விரிவான முறையில் விவரம்வேண்டுவோர் ஐம்பது பைசா ஸ்டாம்பு அனுப்பி 'வித்யாவனச் சட்டதிட்டங்கள்' என்ற சிறு புத்தகத்தைப் பெற்றுப் பார்த்துக்கொள்ளலாம்.

V. சோமசுந்தரம்	***சித்பவானந்த***
தலைமை ஆசிரியர்	*தலைவர்*

மாணவிகளைக் குருகுலத்தில் சேர்க்க விவரம்

பெண் குழந்தைகளை உயர்நிலைப்பள்ளி குருகுலத்தில் சேர்ப்பதற்கு ஸ்ரீ சாரதா வித்யாலயம், அளகாபுரம், சேலம்-4 என்ற விலாசத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

கல்லூரியில் பெண்களைச் சேர்க்கவிரும்புவோர் ஸ்ரீ சாரதா கல்லூரி, அளகாபுரம், சேலம்-4 என்ற விலாசத்திற்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

முதற்தமிழ்ப்பணி ... 13.4.77

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 26	பிங்கள ஹூ சித்திரை மீ	ஆரம் 4

பொருளடக்கம் — பக்கம்

சந்தா விவரம்

1. ஆண்டு சந்தா ரூ. 10

ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

2. சகாய சந்தா ரூ. 5

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்து செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்து செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

3. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-00 வெளி நாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 17—4—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

தூத்துக்குடியில் 17—4—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சிவன்கோவில் தெரு முனிசிபல் கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் இரவு 8-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

பெங்களூரில் 1—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கன்டோன்மென்ட் அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் [சுவாமிகள் மடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—மேச்சேரியில் 6—5—77 வெள்ளிக்கிழமை

இடம்: சன்மார்க்க சங்க கட்டடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வட ஆற்காடு ஜில்லா—குடியாத்தத்தில் 7—5—77 சனிக்கிழமை

இடம்: வேதாந்த பாடசாலை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வட ஆற்காடு ஜில்லா ஆம்பூரில் 8—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: இந்து உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: நேரில் ரூ. 1-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தூத்துக்குடியில் 8—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காரப்பேட்டை வடக்கு எலிமென்டரி பாடசாலை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

தர்மபுரி ஜில்லா—காவேரிப்பட்டணத்தில் 9—5—77 திங்கட்கிழமை

இடம்: தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-45 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: நேரில் உணவுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 26 | பிங்கள ௵ சித்திரை ௴ | ஆரம் 4

பிரார்த்தனை

श्रद्धया देयम् । अश्रद्धयाऽदेयम् ।
श्रिया देयम् । ह्रिया देयम् ।
भिया देयम् । संविदा देयम् ।

— तैत्तिरीयोपनिषत्

ச்ரத்தயா தேயம் | அச்ரத்தயா அதேயம் |
ச்ரியா தேயம் | ஹ்ரியா தேயம் |
பியா தேயம் | ஸம்விதா தேயம் |

— தைத்திரீயோபநிஷதம்

மனமுவந்து கொடு. மனம் சலித்துக் கொடாதே. தாராளமாய்க் கொடு. அடக்கத்தோடு கொடு. அச்சத்தோடு கொடு. பாத்திரமறிந்து கொடு.

**ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந்துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங்காலம் அறிமினே.**

— திருமந்திரம்

அருள் விருந்து

மனிதனுக்குச் சாந்தியை உண்டுபண்ணுவது நல்லறிவு.

தூய உள்ளம் படைத்திருப்பவன் யாண்டும் இன்புற்றிருக்கிறான்.

மனசாட்சி சொல்லுவதும், பரமன் அருள்புரிவதும் ஒன்றேயாம்.

அகந்தையின் கண்கொண்டு பார்ப்பவனுக்கு உண்மை விளங்காது.

உள்ளன்போடு நேசிக்கிறவன் எல்லா இடுக்கண்களையும் மீளுகிறான்.

பரநாட்டம் கொண்டிருப்பவனை உலக நிகழ்ச்சிகள் அல்லல் படுத்த மாட்டா.

மனிதன் இன்புற்றிருக்க முயலுவதே அவன் ஆத்மசொரூபம் என்பதற்கு அத்தாட்சி ஆகிறது.

நேராக நடந்து கொள்ளுகிற ஒருவனுடைய நல்ல நிலையைக் கலைக்க யாருக்குமே இயலாது.

ஆத்மபோதம் காலதேச வர்த்தமானத்தில் கட்டுண்டிருப்பதில்லை. ஆதலால் அது அழிவற்றது.

எளிதில் பெற்ற ஒன்றை மானுடன் விரைவில் இழப்பான். முறையாகப் பாடுபட்டுப் பெற்ற ஒன்றை அவன் யாண்டும் வைத்திருப்பான்.

வறுமை ஒருகாலத்தில் உன்னை வாட்டுகிறது. உடைமை இன்னொரு காலத்தில் உன்னை மயக்குகிறது. இரண்டிலும் கட்டுப்படாதே.

வீண்காலம் போக்காதே. இந்திரிய சுகங்களைப்பற்றி ஆசைகொள்ளாதே. விழித்திருந்து தியானம் பண்ணிப் பழகுபவன் பேரின்பம் பெறுகிறான்.

உள்ளத்தினுள் இறைவன் மறைந்திருந்து இரகசியமாக நம்மோடு உரையாடுகிறான். மௌனமுற்றிருந்து அவனுடைய மொழியைக் கேட்பாயாக.

உன்னை நீ ஒன்றுக்கும் உதவாதவன் என்று எண்ணினால் நீ உதவாதவன் ஆவாய். உன்னால் ஒரு காரியம் சாதிக்க முடியும் என்று தன்னம்பிக்கை கொண்டால் உன்னிடத்து ஆற்றல் வளருகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

"நாம ரூப சொரூபமாகப் பிரபஞ்சம் தோற்றத்திலிருக்கிறது. இத்தகைய தோற்றம் பிரகிருதித் தாயின் மகிமையாம். ஹனுமானிடம் சீதாப்பிராட்டி சொல்லியதாவது: 'குழந்தாய் ஒரு வடிவத்தில் நான் சீதை. மற்றொரு வடிவத்தில் நான் ராமன். ஒரு வடிவத்தில் நான் தேவேந்திரனாக இருக்கிறேன். மற்றொரு வடிவத்தில் நான் இந்த்ராணியாக இருக்கின்றேன். ஒரு வடிவத்தில் நான் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவாக இருக்கிறேன். மற்றொரு வடிவத்தில் பிராம்மணீயாக இருக்கிறேன். ஒரு வடிவத்தில் நான் ருத்ரனாக இருக்கிறேன். மற்றொரு வடிவத்தில் நான் ருத்ராணியாக இருக்கிறேன்.' இங்ஙனம் நாம ரூபங்களை எடுத்துக் கொள்ளுகின்ற பொழுது புருஷ பிரகிருதி தத்துவங்கள் பலவாகத் தென்படுகின்றன. ஆனால் அவை யாவும் நாம ரூபத்தைத் தாண்டிய நிலையில் சித் சக்தியாம். சித் சக்தியில் அனைத்தும் அடங்கியிருக்கின்றன. அந்த சித் சக்தியே தியானமாகவும், தியானம் பண்ணுகிற மூர்த்தியாகவும் அமைந்திருக்கிறது. நான் தியானம் பண்ணுகிறேன் என்னும் உணர்ச்சியில் நிலைத்திருக்கிறபொழுது பிரகிருதியின் ஆதிக்கத்தில் உட்பட்டவனாக நான் இருக்கிறேன்."

பண்டிதரிடம் பரமஹம்சதேவர் பகர்கிறார்: "இடையிடையே சான்றோர்களோடு கூடி வாழ்ந்திருப்பது மிகநன்று. உலகப் பற்று என்னும் நோய் தீராத நோயாக மனிதனைப் பிடித்திருக்கிறது. நல்லார்களோடு இணக்கம் பூணுவதால் இந்த நோய் ஒரு சிறிதளவு குணமடைகிறது.

"யான் எனது என்னும் செருக்கு அக்ஞானத்தில் பிறந்தது. சாதகன் ஒருவனிடம் உண்மையான விவேகம் உதிக்கும்பொழுது அவனுக்கு மெய்யுணர்வு உண்டாகிறது. 'இறைவா, யாவையும் நிகழ்த்துபவன் நீயே. யாண்டும் நீயே எனக்குச் சொந்தம். வீடு வாசல் என்பனவும், சொத்துச் சுகங்கள் என்பனவும், குடும்பம் என்பதுவும், சுற்றத்தார் என்பதும், நண்பர்கள் என்பதும் உனக்கே சொந்தம். உலகம் முழுதும் உனக்கு உரியதாகிறது. நிகழ்வன யாவும் உன் செயல்களே.' ஆனால் அக்ஞானத்தில் உழல்பவன் உணர்வதாவது: நான் இதையும் அதையும் செய்து சாதிக்கிறேன். நான் சாதித்தவைகளெல்லாம் என் முயற்சியால் வந்து வாய்த்தவைகள். வீடு, பூஸ்திதி, குடும்பம், குழந்தைகள், நண்பர்கள், சொத்து, சுகம் ஆகிய யாவும் எனக்குரியவைகளே.'

"ஒரு தடவை ஆச்சாரியர் ஒருவர் சிஷ்யன் ஒருவனுக்கு விஷயம் ஒன்றை விளக்கிக் கொண்டிருந்தார். அவர் பகர்ந்ததாவது: 'கடவுள் ஒருவரே உனக்குச் சொந்தம். ஏனைய யாவும் உனக்குச் சொந்தமாகமாட்டா.' அதற்குச் சிஷ்யன்கூறிய மறுமொழியாவது: 'ஆனால் ஐயனே என்தாய், என்மனைவி, என்சுற்றத்தார் ஆகிய எல்லாரும் என்னை நன்கு கவனித்துக்கொள்ளுகின்றனர். என்மீது அன்பு மிக வைத்திருக்கின்றனர். தாற்காலிகமாக நான் அவர்களை விட்டுப்பிரிய நேர்ந்தால் அவர்கள் பெரும் வேதனைக்கு ஆளாகிறார்கள். என்னை விட்டுப் பிரிந்திருப்பது அவர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. அப்பொழுது உலகமே இருள் சூழ்ந்திருப்பது போன்று அவர்கள் உணருகின்றனர். அவர்கள் என்மீது வைத்திருக்கும் அன்பை என்னால் அளக்கமுடியாது.' அப்பொழுது ஆச்சாரியர் பகர்ந்ததாவது: 'தவறுதலாக நீ எண்ணிக்கொண்டிருக்கிறாய். இவ்வுலகில் யாருமே உனக்குச் சொந்தமல்ல என்னும் உண்மையை இப்பொழுதே நான் உனக்குக் காட்டித்தர முடியும். அதற்கு ஒரு உபாயம் சொல்கிறேன் கேள். இந்த மாத்திரைகளில் சிலவற்றை உன்னோடு எடுத்துச் செல். வீட்டுக்குப் போனவுடன் அவைகளை அருந்து. பிறகு உன் படுக்கையின் மீது படுத்துக்கொள். சிறிது நேரத்துக்குள் செத்துப் போனவன் போன்று நீ அவர்களுக்குத் தென்படுவாய். ஆனால் புறஉலகில் என்ன நிகழ்ந்து வருகிறது என்பதைத் தெளிவுற நீ உணர்ந்து

வருவாய். செத்தவன்போன்று தென்படுவதற் கிடையில் உனக்கு எல்லாரையும் பார்க்கவும் அவர்கள் பேசுவதைக் கேட்கவும் முடியும். நீ அங்கிலேயிலிருக்கிற பொழுது உங்கள் வீட்டுக்கு நான் வருகிறேன்.'

''ஆச்சாரியர் இயம்பியபடியே சிஷ்யன் செய்து முடித்தான். மாத்திரைகளை யாருக் கும் தெரியாது அவன் விழுங்கினுன். பிறகு அவன் படுக்கையின்மீது படுத்துக்கொண் டான். சிறிது நேரத்துக்குள் அவன் செத்துப் போனவன் போன்று தென்பட்டான். ஆனல் தெளிந்த உணர்ச்சி அவனிடத்தில் இருந்தது. அது மற்றவர்களுக்கு விளங்கவில்லே. அவ னுடைய தாயும், மனைவியும் மற்ற சுற்றத்தா ரும் கூக்குரலிட்டு அழுதனர். சிறிது நேரத் துக்குள் ஆச்சாரியர் அங்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது அவர் ஒரு வைத்தியனைப் போன்று தம்மைத் தோற்றுவித்துக் கொண் டார். வந்தவர் வீட்டிலிருப்பவர்கள் துயரப்படு வதற்குக் காரணம் என்னவென்று கேட்டார். தங்கள் அருமைச் செல்வன் யாது காரணத் தாலோ மாண்டுபோனுன் என்று அவர்கள் முறையிட்டு அழுதனர். அப்பொழுது வைத் தியனுக வந்திருந்தவர் இயம்பியதாவது: 'இதோ என்னிடம் மருந்து இருக்கிறது. இதை அவனுடைய வயிற்றில் செலுத்தினல் அவனுக்கு உயிர் திரும்பி வந்துவிடும். ஆனல் நிபந்தனை ஒன்றை நான் இயம்புகிறேன் கேளுங்கள். இந்த மருந்தின் ஒரு பகுதியை அவனுடைய சுற்றத்தார்களுள் யாராவது ஒரு வர் அருந்த வேண்டும். அதன் பிறகே அவ னுள் இதைச் செலுத்த வேண்டும். அப்படிச் செய்தால் இந்த மருந்தைச் சாப்பிட்டவன் மாண்டுபோவான். செத்துப்போன இளைஞன் உயிர் பெற்று எழுந்திருப்பான். அவனுடைய தாயாரிடம் இந்த நிபந்தனையை வைத்தியர் முதலில் தெரிவித்தார். அடுத்தபடி அவ னுடைய மனைவியிடம் இயம்பினர். அடுத்த படியாக அவனுடைய சொந்தக்காரர்களையும் கேட்டார். அவர்கள் தயங்கி நின்றனர். உங்களுள் யாராவது ஒருவர் இம்மருந்தைப் புசிக்க முன் வந்தால் அவனுக்காக அன்னவர் உயிர் கொடுத்தவர் ஆவார். இவ் இளைஞனும் உயிர்பெற்று எழுந்திருப்பான்.'

''நிகழ்ந்ததையெல்லாம்செத்தவன்போன்று தென்பட்ட சிஷ்யன் தெளிவுறக் கேட்டுக் கொண்டிருந்தான். தரையில் படுத்து உருண்டு அழுதுகொண்டிருந்ததாயிடம்வைத்தியன் இவ் வேண்டுகோளைச் செய்தான். அவளிடம் வைத் தியன் சொன்னதாவது: 'அம்மா நீ அழுது புலம்பவேண்டியதவசியமில்லே. இந்தமருந்தை அருந்து. உன் மகன் உயிர்பெற்று எழுந்திருப் பான். ஆனல் நீ மாண்டு போவாய். மருந் தைத் தா வெனக் கையில் வாங்கிக்கொண்டு எண்ணிப் பார்த்தாள். சிந்தனை செய்தான பிறகு வைத்தியனிடம்அவள் இயம்பியதாவது: 'வைத்தியரே, எனக்குக் குழந்தைகள் இன் னும் சிலர் இருக்கின்றனர். அவர்களுடைய நலனைப்பற்றி நான் எண்ண வேண்டியிருக் கிறது. நான் மாண்டுபோனல் அவர் களுடைய கதி என்னுவது என்று தயங்கு கிறேன். அவர்களைப் போஷித்துப் பாதுகாப்ப தற்கு வேறு யார் இருக்கிறூர்கள்?'

அடுத்தபடியாக வைத்தியன் அந்த இளை னுடைய மனைவியைக் கூப்பிட்டு அவள் கையில் மருந்தை வைத்தான். கூக்குரலிட்டு அழுதுகொண்டிருந்த அம்மாதும் மருந்தைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டு சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தாள். அந்த மருந்தை அருந்தியதின் விளைவாக அவள் செத்துப் போவாள் என்னும் செய்தியைக் கேட்டாள். கண்ணீரும் கம்பலேயுமாக அவள் இயம்பியதா வது: 'விதிவசத்தால் என் கணவன் மாண்டு போனுன். நானும் மாண்டு போனல் என் சிசுக்கள் இரண்டை யார் காப்பாற்றுவார்கள்? அவர்களின் கதி என்னுவது? அவர்கள் உயிர் பிழைத்திருக்க பணிவிடை செய்வதற்கு வேறு யார் இருக்கிறூர்கள்? இத்தகைய சங்கட மான நிலேயில் நான் இந்த மருந்தை அருந்து வது எப்படி?' இதற்குள்ளாக மாத்திரை களை அருந்தி செத்துப்போனவன் போன்று தென்பட்ட இளைஞனுக்கு அருந்திய மாத்திரை யின் வேகம் தணிந்து போயிற்று. உயிர் பெற்றவன் போன்று அவன் எழுந்து உட் கார்ந்தான். அப்படி உட்கார்ந்தவனுக்கு உண்மை ஒன்று தெளிவுற விளங்கிற்று. இவ் வுலகில் யாருமே தனக்கு உற்றூர் அல்லர். படுக்கையினின்று அவன் குதித்தெழுந்தான்.

பிறகு ஒன்றும் பேசாதவனாய் தன் ஆச்சாரிய னோடு அவன் வெளியேகலாயினன். ஆச்சாரி யன் அவனுக்கு இயம்பியதாவது : ' உனக்குச் சொந்தம் என்று இயம்புவதற்கு ஒருவர்தான் இருக்கிறார். அப்படி யாண்டும் உனக்குச் சொந்தமாயிருப்பவர் கடவுள் ஒருவரே.'

''ஆகவே மானுடன் ஒருவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்னும் கேள்வி எழு கிறது. இறைவன்பால் பக்தி பூணுவது ஒன்றே உற்ற உபாயமாகும். யாண்டும் மனி தனுக்குச் சொந்தமாயிருப்பவர் கடவுள் ஒரு வரே. அவரிடம் அன்பு பூணுதல் முற்றிலும் அவசியமாகிறது. இப் பரந்த உலகம் உன் னைச் சூழ்ந்திருக்கிறது. அது சில காலத் துக்கு மட்டும் காட்சியிலிருக்கிறது. மனிதன் மரணமடையும் பொழுது இவ்வுலகுக்கும் அவ னுக்கும் யாதொரு தொடர்புமில்லை.''

பண்டிதர்: (புன்னகை பூத்தவராக): ''போற்றுதற்குரிய ஐயனே, நான் இங்கு தங் கள் சந்நிதியிலிருக்கிறபொழுது உலகப்பற்று அறவே என்னைவிட்டு அகன்றுபோகிறது. உல கைத் துறந்துவிட்டுவெளியேகிவிடலாம் என எனக்குத் தோன்றுகிறது''.

பரமஹம்சதேவர்: ''அப்படியல்ல, அப்படி யல்ல. நீ ஏன் வெளியேகிப் போகவேண்டும்? மனப்பற்றை ஒழித்திடுக. பற்றற்று இவ்வுல கில் வாழ்ந்திரு.

''இடையிடையே இரவு நேரத்தை இங்குக் கழிக்க வேண்டுமென்று சுரேந்திரன் விரும்பி னான். அவன் தன்னோடு படுக்கை ஒன்றைக் கொண்டுவந்தான். இரண்டொரு நாள் இங் குத் தங்கியிருக்கவும் செய்தான். அப்பொழுது அவனுடைய மனைவி இங்கே வந்து இயம்பிய தாவது: 'பகல்நேரத்தில் தாம் எங்குவேண்டு மானாலும் போகலாம். ஆனால் இரவில் தாம் நிச்சயமாக வீட்டை விட்டு வெளியே போக லாகாது.' சுரேந்திரன் வேறு என்னதான் செய்யக்கூடும்? அவனுக்கு மனைவியின் ஆணை பிறந்த பிறகு அவன் இரவில் எங்குமே செல்லு வதில்லை. மனைவியின் சொல்படி நடக்க அவன் கடமைப்பட்டிருக்கிறான்.

''வெறும் விசாரமார்க்கத்தில் மானுடனொரு வன் எவ்வளவு தூரம் மேல்நோக்கிப் போக முடியும். கடவுளைக் குறித்து அருள்தாகம் பிடித்தவனாக மனிதன் ஆகவேண்டும். கடவுள் பக்தியை வளர்க்க அவன் கடமைப்பட்டிருக் கிறான். ஆடவன் ஒருவனுடைய நிலையில் விசாரமார்க்கம் இருக்கிறது. பிறர் வீட்டிற்குச் சென்றால் ஆடவன் ஒருவன் வீட்டின் முகப்பில் மட்டும் செல்லமுடியும். வீட்டுக்குள்ளே அவன் போகலாகாது. ஆனால் பெண்ணொருத்தி தாராளமாக வீட்டின் அந்தப்புரத்துக்குச் செல்லமுடியும். விசாரமார்க்கம் ஆடவனைப் போன்றும் பக்திமார்க்கம் மகளிரைப் போன் றும் இருக்கின்றன. பக்திமார்க்கத்தில் ஆழ்ந்து செல்லுவது போன்று ஞானவிசாரமார்க்கத் தில் சாதகன் ஒருவன் செல்லமுடியாது. ஆத லால் பக்தியைப் புறக்கணிக்கலாகாது.

'சாதகனொருவன்கடவுளிடத்துக் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு மனப்பான்மையை எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான். அங்ஙனம் அவனுடைய மனப்பான்மை உறுதி பெற்றால் தான் அவன் சாதனத்தில் முன்னேறிச் செல்ல முடியும். கடவுளோடு வைக்கின்ற இணக்கங் கள் ஐந்து விதமானவைகளாகப் பாகுபடுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளுள் சாந்தபாவம் ஒன்று. போற்றுதற்குரிய பொருள் பரமன் ஒருவனே ஆதலால் அவனிடத்து மாறாத அன்பு பூண்டிருக்கவேண்டும். இந்த மனநிலை சாந்த பாவம் என்று அழைக்கப்படுகிறது. சனகர் போன்ற ரிஷிகள் இத்தகைய மனப்பான் மையை வளர்த்து வந்தார்கள். அடுத்தபடி யாக வருவது தாஸ்யபாவனை; அதாவது பக்த னொருவன் தெய்வத்தின் தொண்டனாகத் தன் னைக் கருதிக் கொள்ளவேண்டும். இந்தப் பாவ னைக்கு ஆண்டான் அடிமை உணர்வு என்பது மற்றொரு பெயர். ஹனுமான் ஸ்ரீ ராமனுடைய தொண்டனாகவே தன்னை வைத்துக்கொண் டான். அத்தகைய இணக்கத்தின் வாயிலாகப் பெறுதற்கரிய அருட்பேறு அதனை ஹனுமான் பெறலாயினன். பிருந்தாவனத்தில் அக்காலத் தில் வசித்துவந்த ஸ்ரீ தாமன், சுதாமன் ஆகிய சிறுவர்கள் ஆடு, மாடு மேய்க்கும் இடையர் களாக இருந்தார்கள். அவர்களிருவரும் ஸ்ரீகிருஷ்ணனுடைய நெருங்கிய தோழர்களாக அவனுடன் இணக்கம் பூண்டனர். தோழமை பூணுகிற பாங்கில் தெய்வத்தோடு இணக் கம் கொள்ளலாம்.

பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

310. நீட்சி குறுகல்இல்லா
நித்யசுகா ரம்பசக
சாட்சியாம் உன்னைவந்து
சார்ந்தேன் பராபரமே.

சுகாரம்பசக-சுகாரம்பத்தோடு இணைந்திருக்கிறது.

நீட்டுதல், குறுக்குதல் சில பொருள்களில் அமைகின்றன. நீட்டுதல் குறுக்குதல் பேசுகிற பேச்சிலும் அமைகிறது. நீட்டுதல், குறுக்குதல் காலத்தைப் பயன்படுத்துவதில் அமைகிறது. நீட்டுதல், குறுக்குதல் நாம் வசித்துவரும் நில உலகில் செய்து கொள்ளலாம். ஆனல் நீட்டுதல், குறுக்குதல் வெட்ட வெளியாகிய ஆகாசத்தின் கண் செய்ய முடியாது. அது யாண்டும் அகண்டமாகவே இருந்து வருகிறது. பஞ்ச பூதங்களில் ஆகாசம் ஒன்றே பரதத்துவத்துக்கு ஏகதேசம் விளக்கமாகிறது. ஆகாசத்துக்கு எப்படி எல்லை கட்ட முடியாதோ அங்ஙனம் பரமாத்மனுக்குரிய நித்திய சுகத்தை அல்லது அகண்டமாயுள்ள ஆனந்தத்தை நீட்டவோ குறுக்கவோ முடியாது. அக்ஞானத்திலிருக்கும் ஜீவாத்மன் பிரபஞ்சத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு இடையிடையே சிறு சிறு இன்பங்களை அனுபவிப்பதில் திருப்தி அடைந்திருக்கின்ருன். ஆத்ம சாதனத்துக்கு அது போதாது. அதை மறந்திருக்கும் ஜீவாத்மன் அதை ஞாபகத்துக்கு கொண்டு வருகிறபொழுது சுக ஆரம்பத்தோடு இணைதல் எனப் பொருள்படுகிறது. தோற்றம் ஒடுக்கத்துக்கு அது சாட்சியாயிருப்பதால் சாட்சியாம் உன்னைவந்து சார்ந்தேன் எனத் தாயுமானவர் பகர்கிருர். அகண்டாகார சித்சொருபத்தில் திளைத்திருப்பது வாழ்க்கையின் குறிக்கோள் என்பது இக்கண்ணியின்கருத்து.

311. வாஞதி தத்துவமாய்
மன்னி நின்ற காரண நீ
நாஞகி நிற்பதெந்த
நாளோ பராபரமே.

வான்–ஆகாயம்; தத்துவம்–மெய்ப்பொருள்; மன்னிநிற்பது–நிலைபெற்றிருப்பது ;

பரவஸ்துவே ஜகத்தாகவும், ஜீவகோடிகளாகவும் தன்னைத் தோற்றுவித்துக்கொண்டு மாயப் பிரபஞ்சமாக விளையாடுகின்ருர். ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி ஆகிய பஞ்ச பூதங்களாய் பரிணமித்திருப்பது பரமன். சாங்கிய தர்சனத்தில் பகர்ந்துள்ள இருபத்து நான்கு தத்துவங்கள் சமயங்களுள் முப்பத்தாறு தத்துவங்களாகவும், தொண்ணூற்ருறு தத்துவங்களாகவும் கருதப்பட்டிருக்கின்றன. இந்தத் தத்துவங்கள் யாவும் ஜடவஸ்துவாயுள்ள ஜகத்தாகக் கருதப்படுகிறது. அதற்கு மூலகாரணமாயிருப்பவர் பரமாத்மன். அதே பரமாத்மன் ஜீவகோடிகளாகவும் பரிணமித்துள்ளார். ஒவ்வோர் ஜீவனும், தனக்குத் தனி வியக்தியுண்டு எனக்கருதி வருகிருன். அத்தகைய எண்ணமே ஜீவ வியக்தியை நிலைத்திருக்கச் செய்வதற்குக் காரணமாகிறது. தனக்குத் தனி வியக்தி உண்டு என்னும் மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் அனந்தங்கோடி ஜீவர்களுக்கிடையில் நானும் ஒருவன். என்னை விட்டு ஜீவ வியக்தி என்றைக்கு அகலுமோ நான் என்னும் தன்மைக்கு மாருக தான் என்னும் தெய்வப் பெற்றி முன்னணியில் வந்து நிற்குமாகில் ஜீவ வியக்திக்குள்ள குறைபாடுகளெல்லாம் தாமாக அகன்று போகின்றன. இப்பொழுது நான் என்னும் ஜீவபோதம் என்னிடத்துத் தடித்திருக்கிறது. அதை ஒதுக்கித் தள்ளிவிடவும் யதார்த்தமாயுள்ள பரபோதத்தை நிலைநாட்டுவதும் செயற்கரிய செயலாகும். அச்செயலில் நிலைபெற்றிருக்கிற பொழுதே ஜீவன் முக்தி நிலை எனக்குச் சொந்தமாகும். அத்தகைய அரிய நிலையை காலங்கடத்தாது அதி விரைவில் நான் பெறுவதற்குக் கருணைபுரிய மாட்டாயா என்பது இக்கண்ணியின் கருத்து.

312. காட்டத்தில் அங்கி
கடையவந்தால் என்னவுன்னும்
நாட்டத்தி னூடுவந்த
நட்பே பராபரமே.

காட்டம்-காஷ்டம் விறகுக்கட்டை; உன்னுதல்–நினைத்தல்.

பழங்காலத்தில் அரணி என்னும் ஒரு மரக்

கட்டையை ஒரு பீடத்தின் மீது வைத்து விரைந்து கடைவார்கள். அப்படிக் கடைவ தால் அந்த அரணிக்கட்டையில் உஷ்ணம் கிளம்பி தீப்பற்றிக்கொள்ளும். அப்படி உண்டு பண்ணிய நெருப்பை வேள்விக்கும் ஏனைய வீட்டுக் காரியங்களுக்கும் பயன்படுத்தினர் கள். விறகுக்கட்டையில் அக்னி தோன்ரு நிலையில் புதைந்திருக்கிறது என்னும் கோட் பாடு இதனின்று வெளியாகிறது. அதே விதத் தில் ஜடசொரூபமாயுள்ள மனேதத்துவத்தில் சேதனம், மறைந்திருக்கிறது என்னும் கோட் பாட்டை அக்ஞானத்திலிருக்கும் ஜீவாத்மன் அறிந்துகொள்வதில்லை. விறகுக்கட்டையில் அக்னி மறைந்திருப்பதற்கொப்ப மனத்தினுள் பரமன் மறைந்திருக்கிருன் என்னும் உண்மை யைக் கேள்வியின் மூலமாக அறிந்து அப்பரம னைப்பற்றியே ஆழ்ந்து எண்ணவும் மனதின் நாட்டமனைத்தையும் அவன்பால் திருப்பினல் கிருபை கூர்ந்து அவன் தன்னுடைய சாந்நித் யத்தை வெளிப்படுத்துகிருன். அப்படி வெளிப்படுத்தும் பொழுது அவன் ஜீவாத்மனை ஆட்கொள்ளுதற்கென்றே காத்திருந்தவன் என்ற உண்மையும் ஆத்மசாதகனுக்கு அப் பொழுது விளங்குகிறது. ‘கள்ளனறிவூடு மெள்ள மெள்ளக் கலக்கவரு நல்ல உறவே’ என்று தாயுமானவர் மற்ருேர் இடத்தில் பகர்ந் தருளியுள்ளார். ஜீவாத்மனுக்கு உண்மை யான உறவு அல்லது நட்பு பரமனிடத்தே இருக்கிறது. அத்தகைய கருணைகரா, நீ என்னை ஆட்கொள்ளுதற்குச் சர்வ காலமும் உள்ளத்தினுள்ளே மறைந்திருக்கிருய். அத் தகைய உன்னை உள்ளன்போடு எண்ணவும் முயற்சி முழுதையும் உன்னிடத்தே செலுத்த வும் கற்றுக்கொள்ளுவேனுக. என்னுடைய உண்மை நண்பனுகிய நீ அப்பொழுது எனக்கு உன் போதத்தை அருளுவாய் என்பது இக் கண்ணியின் கருத்து.

313. **நித்திரையாய்த் தானே**
நினைவயர்ந்தால் நித்தநித்தஞ்
செத்தபிழைப் பானதெங்கள்
செய்கை பராபரமே.

அயர்தல் – ஓய்தல்; நித்தம் நித்தம் – நாள் தோறும்.

ஜீவாத்மாக்களாகிய எங்களிடத்து ஓர் அதிசயம் உள்ளது. ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி அல்லது நனவு கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்று நிலைகளில் மாறி மாறி யிருப்பது ஜீவித மக்களின் பாங்கு ஆகும். நனவு அல்லது ஜாக்ரத அவஸ்தையில் புறத் திலுள்ள மாயப் பிரபஞ்சத்தோடு ஜீவாத்மன் வெவ்வேறு விதங்களில் தொடர்புவைக்கிருன். கனவு அல்லது சொப்பனவஸ்தையில் அவன் தனக்குத் தானே அவனுடைய மனதில் விசாலமான ஓர் உலகை உண்டுபண்ணிக் கொள்ளுகிருன். நனவில் அனுபவிக்கின்ற அனுபவங்கள் அனைத்தையும் கனவிலும் ஜீவாத்மன் அனுபவிக்கிருன். நனவில் தென் படுவது பிரம்மதேவனுடைய சிருஷ்டி. கன வில் தென்படுவது ஜீவாத்மனுடைய சிருஷ்டி. பிரம்மதேவனுக்கு நிகராக ஜீவாத்மன் தனக் காக வென்று ஒரு தனி உலகை உண்டு பண்ணிக் கொள்ள வல்லவனுயிருக்கிருன். பிறகு அவன் சுஷுப்தி அவஸ்தைக்குச் சிறிது நேரமாவது போகிருன். நினைவு மயமாயுள்ள மனது அயர்ந்த உறக்கத்தில் சிறிது நேரத் துக்கு ஒடுங்கியிருக்கிறது. அப்பொழுது ஜீவாத்மனுக்குப் புறவுலகமுமில்லை; அகவுலகமு மில்லை. ஜீவவியக்தியுமில்லை. செத்தவனுக்கு நிகராகிருன். சாவு என்ருல் என்ன என்பதை சுஷுப்தி அவஸ்தையில் ஜீவன் நாள்தோறும் அறிந்து வருகிருன். தூங்கப் போகிற ஒரு ஜீவன் பெருந்தூக்கமாக செத்துப் போவது முண்டு. நாள்தோறும் மரணத்தை அனுப வித்து வருகிற ஜீவாத்மன் பிழைத்திருப்ப தாகவும் தன்னைப்பற்றி எண்ணிக்கொள்கிருன். ஜீவாத்மனுடைய ஜீவநிலை நிலையற்றது என் பதற்கு நனவு, கனவு, அயர்ந்த உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளே அத்தாட்சியா கின்றன. இது நாள்தோறும் நிகழ்ந்து வரு கிறது. அப்படியிருந்தும் ஜீவாத்மன் ஒருவன் தனக்கு நிலைபேறு உண்டு எனக் கற்பனை பண்ணிக்கொள்ளுவது மயக்கத்தாலேயாம். அத்தகைய மயக்கம் தெளிந்து மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாலிருக்கும் பரம் பொருளோடு யோகம் பண்ணுவதுதான் மானுட வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எங்களுக்கு இறைவா, நினைவூட்டுவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

பரபோதம்

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்செல்வரான சுவாமி பிரமானந்தரின் போதனை)

நல்ல கனவு ஏற்படுவது மனதிலிருக்கும் நல்ல சம்ஸ்காரத்துக்கு அறிகுறி ஆகிறது. ஞானிகள், அவதாரபுருஷர்கள், தெய்வசொருபங்கள் ஆகியோர்களைக் கனவில் காண்பது நல்லது. ஆத்மீக உண்மைகள் கனவில் நமக்கு வெளியாகும். அத்தகைய நல்ல கனவுகள் நம் மனதில் நல்ல பதிவுகளை உண்டாக்குகின்றன. நாம் கனவில் காணும் தெய்வீகக் காட்சிகளையும், ஆத்மீக அனுபவங்களையும் பிறரிடம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவை நமக்கு நலத்தைத் தருகின்றன. கனவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை. நனவில் நமக்கு ஏற்படும் அனுபவங்களே கனவில் காட்சிக்கு வருகின்றன. நனவில் நல்வாழ்வு வாழ்ந்து வருகிறவர்களுக்கு நல்ல கனவாகத்தான் அமையும். ஆத்ம சாதனையில் உள்ளவர்களுக்கு ஆத்மீகக் கனவுகள் ஏற்படலாம் அல்லது ஏற்படாமலும் இருக்கலாம். கனவில் உண்டாகும் தெய்வீகக் காட்சிகளைப் பார்ப்பதோடு திருப்தி அடைந்துவிடாதே. மேலும் சாதனையில் ஆழ்ந்து தீவிரமாக ஈடுபட்டு ஆத்மீக அனுபூதியை நனவு, கனவு, உறக்கம் ஆகிய எல்லா நிலைகளிலும் பெறுவாயாக. இறுதியில் துரியம் அல்லது துரியாதீதத்தை அடைவதுதான் உன் லட்சியம்.

உலகுக்கு நலம் செய்வது உனக்கு நலம் செய்வது ஆகிறது. உன்னிடமிருந்து உலகம் எந்த நலனையும் எதிர்பார்த்திருக்கவில்லை. உலக நலனில் உன் நலன் அடங்குகிறது. சுயநலத்தை முழுவதும் அகற்றும் பொழுதே நீ உலகுக்கு ஏதாவது நலன் பண்ணமுடியும். உலக மக்களுக்கு நீ நலன் செய்ய அதற்குப் பதிலாக உலகம் உனக்குக் கேடு செய்யலாம். நீ செய்த நலனை ஏற்றுக்கொண்டவர்கள் உனக்குத் தீமை செய்யலாம். அது உலகத்தின் போக்கு. வித்தியாசாகரைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம். அவர் உலக மக்களின் நலனுக்காகவே வாழ்ந்தார். அவரிடமிருந்து நலனைப் பெற்ற மக்கள் அவரைப்பற்றி இழிவாகப் பேசியதோடு அவருக்குத் தீமை செய்யவும் முயன்றார்கள். அவரைப்பற்றி யாராவது அவதூறாகப் பேசினதை அவர் அறிவாராஞல் அவர் இங்ஙனம் பகர்வார்: ''அந்த மனிதன் எனக்குச் செய்த தீமைக்குப் பதில் நான் ஏதாவது அவருக்கு நலன் செய்ய முடியுமா?'' நல்லியல்பு படைத்தவர்கள் எப்பொழுதும் நல்லதையே செய்வார்கள். கெட்ட இயல்பு படைத்தவர்கள் எப்பொழுதும் பிறருக்குத் துன்பமே செய்வார்கள்.

ஒரு சமயம் சான்ருேர் ஒருவர் நதிக்கரையின் மீது அமர்ந்திருந்தார். அவர் நதி ஜலத்தின்மீது தேள் ஒன்று மிதந்து போவதைப்பார்த்தார். அதன் மீது அவருக்குப் பச்சாதாபம் வந்துவிட்டது. அவர் தம் இருகரங்களையும் நீட்டி அந்தத் தேளைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துக் காப்பாற்றினுர். ஆனல் அவர் அப்படிச் செய்யும்பொழுது அந்தத் தேள் அவரைக் கொட்டியது. அவருக்கு மிகுந்த வலி ஏற்பட்டது. சிறிது நிமிடங்களுக்குப் பிறகு அந்தத் தேள் மீண்டும் தண்ணீரில் விழுந்துவிட்டது. அதைப் பார்த்த சான்ருேர் மறுபடியும் அதைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துக் காப்பாற்றினுர். இரண்டாம் முறையும் அந்தத் தேள் அவரைக் கொட்டியது. மூன்ரும் முறையும் தேள் தண்ணீரில்விழ, அதைக் காப்பாற்றினுர். தேள் அப்பொழுதும் அவரைக் கொட்டியது. இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மற்ருெரு மனிதன் அச்சான்ருேரைக் கேட்டதாவது: ''ஐயா, உங்களை மீண்டும், மீண்டும் கொட்டித் துன்புறுத்துகின்ற தேளுக்கு நீங்கள் ஏன் உதவிபுரிகின்றீர்கள்?'' சான்ருேர் பதிலளித்ததாவது: ''கொட்டுவது தேளின் இயல்பு. ஆபத்திலிருக்கும் உயிர்களைக் காப்பாற்றுவது என்னுடைய இயல்பு. தேள் தன்னுடைய இயல்பு பிரகாரம் நடந்துகொண்டது. நான் ஏன் என்னுடைய இயல்பை விடவேண்டும்?'' மனம் உயர்ந்த நிலைக்கும் செல்லும்; தாழ்ந்த நிலைக்கும் செல்லும். தெய்வ நம்பிக்கை, தெய்வ பக்தி, தயை முதலிய குணங்களைப் பெறும்பொழுது மனம் உயர்நிலைக்குச் செல்கிறது. பொருமை, சுயநலம், சுகத்தில் ஆசை, சோம்பல்

முதலியவைகளுக்கு மனம் வசப்படும்பொழுது மனம் கீழ்நோக்கிச் செல்கிறது.

கடவுள் நாமத்தை உச்சரிப்பது உன்னிடம் இடைவிடாது நிகழ்ந்து வரவேண்டும். ஜபம் சரீரத்தையும், மனதையும் தூய்மைப்படுத்து கிறது. இறைவனுடைய நாமம் சர்வசக்தி வாய்ந்தது என்பதில் நம்பிக்கை வைத்து இறைவன் மீது மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய். அவருடைய நாமத்தை நீ உச்சரிப்பாயானல் உன்னிடத்திலுள்ள பாபங் கள் நாசமாகின்றன. நீ அபயத்தில் நிலை பெற்றவனுகிருய். அழியாப் பெருநிலை உனக்கு உரியது என்பதை நீ உணர்கின்ருய்.

கடவுளின் அருளைப் பெறுவது சாதகனு டைய குறிக்கோள் ஆகும். ஈசன் அருளைப் பெற்று அவருடைய காட்சியையும் பெறவேண் டும் என்று சாதகன் தீவிரமாகப் பாடுபடு கிருன். காமமும் காசு ஆசையும் சாதனைக் குப் பெரும் தடைகளாக இருக்கின்றன. அவற்றை அறவே ஒழித்தால் அன்றிச் சாதனை யில் முன்னேற முடியாது. மனதில் உள்ள அழுக்கு நீங்கி மனம் தூய்மை அடையும் பொழுதுதான் ஈசனுடைய அருள் வந்து வாய்க்கின்றது. பரிசுத்த மனம் உடையவர் களுக்கு ஈசனுடைய அருள் உரியது ஆகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் அழகான உபமானம் பகர்வார்: "இரும்பு ஊசியானது மண்ணுல் மறைக்கப்பட்டிருக்கும்பொழுது காந்தம் அதைக் கவர்வதில்லை. ஊசியின் மீது உள்ள மண்ணைக் கழுவிப் போக்கிவிட்டால் காந்தம் ஊசியை இழுத்துக்கொள்கிறது." மனதில் உள்ள அழுக்கைப் போக்க மனம் கடவுளைக் குறித்து தியானம் செய்யவேண்டும். மனதில் உள்ள அழுக்கு நீங்குவதற்கு ஏற்ப அது தெய் வத்தின்பால் இழுக்கப்படுகிறது.

கடவுளைக் காண்பதற்கு வெகு பிரயத்த னம் செய்யவேண்டும். உன் அறிவைக்கொண்டு அவரை அறிவது சாத்தியம் இல்லை. அவரிடத் தில் சரணுகதி அடைந்துவிடு. அவரையே அடைக்கலப் பொருளாகக் கொண்டு அவர் மீது பக்தி பண்ணு. அவரைப் பெறவேண் டும் என்று தீவிர ஆவல் கொண்டிரு. கடவுள் நாட்டத்தில் பித்துப் பிடித்தவன் ஆகிவிடு.

கடவுளை அறிவதுதான் வாழ்க்கையின்குறிக் கோள். அவர் எண்ணத்திலேயே சதா மூழ்கி இருப்பதற்குத் தெரிந்துகொள். மனதை அலையவிட்டு ஆசை வசப்பட்டு செயல் புரிந்து கொண்டிருப்பது வாழ்க்கையின் குறிக்கோள் அன்று. பற்றற்றுக் கர்மம் புரிவது மனதைத் தூய்மைப்படுத்துகின்றது. சித்தம் சுத்தம் அடையும் அளவு அது தெய்வீக எண்ணத்தில் மூழ்குகிறது. தெய்வத்தைக் குறித்து தியானத் தில் ஆழ்ந்து மூழ்கு. ஆழ்ந்து தியானம் செய்கின்றபொழுது கடவுள் ஒருவர் மட்டும் நித்தியப் பொருளாகவும், மற்றவையாவும் அநித்தியப் பொருள்களாகவும் உனக்குத் தோன்றும். சாதனத்தை நிறுத்திவிடாது சாத னத்தில் மேல் நோக்கிப்போய்க் கொண்டே இரு. ஞானஒளியைப்பெறவேண்டும் என்று சாதனையில் ஆழ்ந்து போய்க்கொண்டே இரு. ஆத்மீக விழிப்பு ஏற்பட்டு சாதனையில் ஆழ்ந்து சென்ருல் கடவுளை நேருக்குநேர் காண்பதும் அவரோடு பேசுவதும் சாத்தியம்.

சாஸ்திரங்களைக் கற்றதும் சர்ச்சை செய்த தும் போதும். இனி உன்னுடைய மனே சக்தி களை எல்லாம் ஒன்று திரட்டி அவற்றைத் தெய்வத்தின் மீது திருப்பு. வேறு வழிகளில் உன் மனேசக்தியைச் செலவழிக்காதே. சச்சி தானந்தம் என்னும் அமிர்தசாகரத்தில் ஆழ்ந்து மூழ்கு.

இந்திரிய சுகம் அற்பமானது என்று நீ நன் ருக அறிந்துகொள்ள வேண்டும். உன் மனதை இந்திரிய சுகத்தினின்றும் பிரித்துஎடுத்துவிடு. இந்திரிய சுகத்தில் நீ நாட்டம் கொண்டிருப்பா யானல் பேரானந்தப்பெருநிலை உனக்கு வாய்க் காது. ஓடையின் பக்கம் நின்றுகொண்டிருந்த நாய் ஒன்று வாயில் எலும்புத் துண்டை வைத்திருந்தது. ஓடையின் தண்ணீரில் மற் ருெரு நாய் எலும்புத்துண்டு வைத்திருப்பதை அது பார்த்தது. அதை அபகரிப்பதற்காக வாயைத் திறந்தது. தன் வாயிலிருந்த எலும் புத் துண்டையும் இழந்து ஏமாற்றம் அடைந் தது. அந்த நாய் போன்று இந்திரிய சுகத்தை நம்பி பேரானந்தத்தை இழந்துவிடாதே. புற உலகில் இந்திரிய சுகத்தை நாடிச் சென்று உன்னிடத்தில் உள்ள பேரானந்த நிலையை அனுபவிக்கத் தவறிவிடாதே. ஆனந்தம் பிரம் மம். நீ ஆனந்த சொருபம்.

பக்தியும் பண்பாடும்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1971ஆம் ஆண்டு திருவேடகம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

(94ஆம் பக்கத் தொடர்ச்சி)

பக்தியில் இசை முக்கிய இடம் பெறுகிறது. இசையின் மூலமாக இறைவனை அடைய முடியும் என்ற செய்தி பாலகிருஷ்ணனின் குழல் ஓசையின் மூலம் நமக்குக் கிட்டுகிறது. நாணல் ஒன்றிலிருந்து புல்லாங்குழல் தயார் செய்து கண்ணன் அதிலிருந்து இனிய ஓசையைக் கிளப்பினன். நாணல் துண்டிலிருந்து கிளப்பிய ஓசையின் மூலம் கிருஷ்ணன் ஜீவர்கள் அனைவரையும் தன்பால் கவர்ந்திழுத்தான். ஜீவர்கள் அனைவரும் அவனிடம் ஒன்றுபட்டனர். பாம்பு, மயில், புலி, பசு ஆகிய யாவும் தங்கள் தங்கள் இயல்புகளை மறந்து கிருஷ்ணனிடத்தில் லயம் ஆயின. இசையைச் சரியானபடி பயன்படுத்தினல் அது ஜீவனைப் பரமாத்மாவோடு சேர்க்கிறது. இசை ஞானம் உடையவர்கள் பரத்தினுடைய பெருமைக்காகப் பாடவேண்டும். தங்களுடைய இசையின் வல்லமையைக் காட்டுவதற்காகப் பாடுவார்களானல், அது அவர்களைக் கீழ்நிலைக்குக் கொண்டு போய்விடும். அக்பர் சக்கரவர்த்தி இஸ்லாம் மதம், ஹிந்துமதம் ஆகிய இரண்டுக்கும் சம அந்தஸ்து கொடுத்தார். பக்தியில் அவர் மிகுந்தஈடுபாடு உடையவராகஇருந்தார். தம் சபையில் நன்கு பாடக்கூடிய வித்துவான் ஒருவரை வைத்திருந்தார். அவ்வித்துவான் பாடும்பொழுது அக்பர் பரமானந்தம் அடைவார். அக்பர் சமஸ்தானத்திலிருந்த பாடகர் ஒருநாள் பகர்ந்ததாவது: "அரசே, என்னுடைய பாடலை நீங்கள் மிகவும் ரசிக்கிறீர்கள். என்னுடைய பாடலுக்கே நீங்கள் இத்தகைய மதிப்புக் கொடுப்பீர்களானல், என்னுடைய குருநாதருடைய பாடலைக் கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்களோ! தெரியவில்லை." "உம்முடைய குருநாதர் யார்? அவர் எங்கே இருக்கிறர்?" என்று அக்பர் கேட்டார். "அவர் நம் ராஜ்யத்துக்கு அருகாமையில்தான் இருக்கிறர். யமுனை நதிக்கரையில் ஒரு குடிசையில் வாழ்ந்து வருகிறர். நாம் கேட்டுக்கொள்வதற்காக அவர் பாடமாட்டார். அவர் உள்ளத்தில் பக்தி பொங்கிவரும் பொழுது அவர் தாமாகப் பாடுவார். அப்படிப்பாடும்பொழுது அதைக் கேட்டால் பேரானந்தம் உண்டாகும்" என்றுர் பாடகர். "அப்படியானல் ஒருமுறையாவது அவரிடம் என்னை அழைத்துச் செல். அவர் பாடுவதற்கேற்ற சூழ்நிலையை எப்படியாவது உண்டுபண்ணி அவரைப்பாடும்படி செய்" என்றுர் அக்பர். அக்பரை மாறுவேஷம் போடும்படி செய்து தம்முடன் அழைத்துக் கொண்டு சமஸ்தானப் பாடகர் தம் குரு இருக்கும் இடத்திற்குச் சென்றுர். அவர்கள் போனபொழுது குரு ஆழ்ந்த தியானத்திலிருந்தார். தியானத்தைக் கலைக்கக் கூடாது என்று பாடகர் எண்ணினர். குரு இருந்த அறையின் மூலையில் தம்புரா ஒன்று இருந்தது. தம்புராவை எடுத்துப் பாடகர் அபஸ்வரத்தில் பாடினர். இசை தெரிந்தவர்களுக்கு அபஸ்வரத்தில் பாடுவதைக் கேட்பது சித்திரவதை செய்வதுபோன்று இருக்கும். தியானம் கலைந்து குரு கண் விழித்துப் பார்த்தார். சிஷ்யரைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தார். அவருடைய சிரிப்பு சிஷ்யருக்குக் கடுமையாகத் தண்டிப்பது போன்று இருந்தது. சிரித்துக் கொண்டே தம்புராவைத் தரும்படி கையை நீட்டினர். சிஷ்யரும் அதைத்தான் எதிர் பார்த்தார். உடனே தம்புராவைக் குருவின் கையில் தந்தார். தம்புராவை வாங்கி அதை மீட்டிக்கொண்டு குரு தம்மை மறந்து பாடினர். அக்பர் அதில் தம் மனதை முற்றும் கொடுத்து விட்டார். இடையிடையே பாடகரைப் பார்த்து அவர் பாடுவதை அப்படியே படம்பிடித்துக் கொள்ளும்படி அக்பர் கேட்டுக்கொண்டார். பாடி முடிந்தானபின் அக்பரும், பாடகரும் அறையை விட்டு வெளியே வந்தார்கள். அக்பர் பாடகரிடம் பகர்ந்ததாவது: "உம்முடைய குரு பாடியது என்னுடைய மனதை அதீத நிலைக்குக் கொண்டுபோய்விட்டது. நாளை அதே பாடலை அரச சபையில் நீ பாடவேண்டும்." அடுத்தநாள் சபை கூடியது. பாடகர்

தம் திறமை அனைத்தையும் பயன்படுத்திப் பாட ஆரம்பித்தார். பாடகர் பாடிய பாடலைக் கேட்டு அக்பர் கையை விரித்துவிட்டார். ''உம்முடைய குரு நேற்றுப் பாடிய பாடலோடு உம்முடைய பாடலை எங்கே ஒப்பிடுவது? அப்பாடலுக்கு உம்முடைய பாடல் கிட்ட வர முடியாது'' என்றார் அக்பர். ''ஆம் அரசே, பகவானின் மகிமையை என்னுடைய குரு தம்மை மறந்து பாடினர். ஆனல் நானே உங்களை மகிழ்விக்கப் பாடுகின்றேன். அவர் பாடியது அத்தகைய உயர்ந்த நிலையில்தான் இருக்கும். உங்களுடைய திருப்திக்காகப் பாடுகின்ற என்னுடைய பாடல்இப்படித்தான் இருக்கும்'' என்றார் பாடகர். மனிதரைத் திருப்தி பண்ணுவதற்காகப் பாடக்கூடாது. பரத்தின் மகிமையில் மூழ்கி நம்மை மறந்து பாடுகின்ற பாடல் தான் நம்மை அதீத நிலைக்கு எடுத்துச்செல்லும். ராக தாளத்தோடு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாடுவார். ராகத்தின் உச்சநிலை வரும்போது ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சமாதிநிலை கூடிவிடும். பாட்டின் ராக தாளம் எல்லாம் அப்போது நின்றுவிடும். சமாதிநிலை கலைகிறபொழுது ராக தாளத்தின் தொடர்ச்சி நிலை வரும். இசை பரத்தினிடம் கொண்டு செல்கிறது என்பதற்கு ஸ்ரீராமகிருஷ்ணருடைய நிலை சான்றாக இருக்கின்றது.

திடகாத்திரத்தோடு இருக்கும் குழந்தை துள்ளிக்குதித்து ஆடுகிறது. அப்படி அது ஆடும் ஆட்டம் தில்லை நடராஜாவின் தாண்டவத்தின் சாயல். இது நமக்கு விளங்குவதில்லை. அகிலாண்டத்தையும் தோற்றுவித்து அதை முறையாக நடத்துவது நடராஜருடைய ஆனந்தத் தாண்டவமாகும். பக்திப் பரவச நிலையில் ஆடும் பக்தன் ஜீவபோதத்தையும் மறந்துவிடுகின்றான். பக்தியினுடைய பெருமையைக் காட்டுவதற்கே ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் இவ்வுலகத்துக்கு வந்தார். 'கிருஷ்ண, கிருஷ்ண கேசவ முராரி' என்று பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் அவர் போனல் அவருடன் சேர்ந்து முஸ்லீம்களும் ஆடவும் பாடவும் செய்வார்கள். அவர்களது பக்தியோடு கூடிய ஆடலும் பாடலும் அனைவரையும் கவர்வதாக இருந்தன. பரமனைக் குறித்துப் பாடுதலும், தம்மை மறந்து அவருடைய நினைவிலிருந்து கொண்டு ஆடுதலும் கிடைப்பதற்கரிய பேறு ஆகிறது. நாட்டியத்தில் உடல் அசைகிறது. அவ்வுடல் அசைவைக்கொண்டு பெரும் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. ஆனந்த பரவசத்தில் நிர்த்தனம் செய்யும் பக்தன் தான் எடுத்த உடலை நன்கு பயன்படுத்தியவனுகின்றான்.

''பனி மதி முகத்திலே நிலவனைய புன்னகை பரப்பி ஆர்த்து ஆர்த்து எழுந்து'' என்கின்றார் தாயுமானவர். கடவுள் நாட்டத்திலே ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய முகத்திலே உண்டாகின்ற எழில் மற்றவர்களுடைய உள்ளத்தை எல்லாம் கவர்ந்து இழுக்கின்றது. பனி காலத்தில் அதிகாலையில் புல் தரையைப் பார்த்தால் புல் மீது பனித்துளிகள் முத்து முத்தாக இருக்கும். இளம் சூரிய கிரணங்கள் அவற்றின்மீது படியும்போது அக்காட்சி பார்ப்போருடைய உள்ளத்தை எல்லாம் கவர்ந்துவிடும். பக்தியினல் உள்ளம் உருகி கண்ணீர் சிந்துவது குறைந்துகொண்டே போய் இறுதியில் பனித்துளி போன்று ஒரு சொட்டுக் கண்ணீர் முகத்தில் இருக்கிறது. அப்படி முகத்திலே கண்ணீர் இருக்கும் பொழுது முகம் சந்திர உதயம் போன்று பாரமார்த்திக எழிலைப் பரப்புகிறது. உள்ளத்தில் உண்டாகும் பரவசம் ஆனந்தத்தை ஊட்டுகிறது. அங்ஙனம் பரவச நிலையை அடைந்தவர்கள் மற்றவர்களுடைய உள்ளத்தை எல்லாம் கவர்ந்து இழுக்கின்றார்கள். ஸ்ரீராமகிருஷ்ணருடைய காலத்தில் வாழ்ந்து வந்த ஒருவர் தமக்குச் சமாதி நிலை வருவதாகத் தம் சிஷ்யரிடம் கூறி வந்தார். சமாதிநிலை வந்துவிட்டதாகப் பாசாங்கும் செய்வார். அப்படி அவருக்குச் சமாதிநிலை வரும்பொழுது சிஷ்யர் அவரைப் பக்தியோடு பார்த்துக்கொண்டிருப்பார். அவர்கள் இருவரும்ஒரு சமயம்ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்தார்கள். அவர்கள் வந்தபொழுது ராமகிருஷ்ணர் பாடிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குள்ளாக ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் சமாதி கூடிவிட்டது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய சமாதியைப் பார்த்த சிஷ்யர் பகர்ந்ததாவது: ''சமாதி என்ன என்பதை நான் இப்பொழுது அறிகிறேன். இப்பொழுது நான் காண்பதல்லவோ சமாதி. என் குரு பாசாங்கு பண்ணி

ஞர் என்பது இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது.'' உண்மையான பெருநிலை உண்டாகிறபொழுது அந்நிலை எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்து இழுக்கிறது. தத்துவத்தை அணுக அணுக, தத்துவமயம் ஆகஆக கவர்ச்சி அதிகரிக்கிறது. தெய்வத்தை வழிபடுவதில் பக்தன் பரமானந்தம் அடைகின்ருன். பக்தி போதவில்லையே என்னும் அதிருப்தி உடையவன் பக்தியில் மூழ்கி சதா வழிபாடு மயமாக இருக்கின்ருன். பண்பாட்டில் அவன் உச்சநிலையை அடைந்தவன் ஆகின்ருன்.

''மடல் அவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி'' என்கிருர் தாயுமானவர். பூ மொக்காக இருந்து விடியற் காலத்தில் மலர்கிறது. மலரும் தருணத்தில் அதிலிருந்து அழகும், மணமும் பரவுகின்றன. மலர்ந்த மலரைப் பார்ப்பது மனதுக்குப் பேருவகையை அளிக்கும். பரவச நிலையிலிருக்கும் பக்தன் மலர்ந்த மலர் போன்றவஞக இருக்கின்ருன். பரவச நிலையிலிருந்து பக்தன் தெய்வத்தைக் கைகூப்பி வணங்கும் பொழுது அக்காட்சி மற்றவர்களுடைய உள்ளத்தை எல்லாம் கவர்ந்து இழுப்பதாக இருக்கிறது.

''வானேய வானில் இன்ப மழையே, மழைத் தாரை வெள்ளமே'' என்கிருர் தாயுமானவர். வெட்ட வெளியைப் பார்க்குமிடத்து மனம் அகண்டாகாரத்துக்கு ஓடுகிறது. இயற்கையில் மூன்று காட்சிகள் நம் மனதை அதீதத்துக்கு எடுத்துச் செல்ல வல்லவைகளாக இருக்கின்றன என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதுண்டு. கரைகாணுத கடல் அல்லது எல்லை காணுத வெட்டவெளி ஒரு காட்சி. வான் அளாவுகின்ற ஹிமாலயம் மற்ருெரு காட்சி. லட்சக்கணக்கான பேர் கூடி வழிபாடு செய்யும் காட்சி மூன்ருவதாகும். இம்மூன்று காட்சிகளும் மனதை அதீதத்துக்கு எடுத்துச் செல்கின்றனஎன்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுகின்ருர். திருவண்ணுமலை கார்த்திகை தீபத்தின் பொழுதும், சபரிமலை மகரஜோதி தரிசனத்தின் போதும் மக்கள் வழிபாடு செய்வதைக் கண்டால் கல்நெஞ்சுடைய மனதும் மேல் நிலைக்குப் போய்விடும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய மூன்று இயற்கைக் காட்சிகளையும் நாம் நன்கு பயன்படுத்தத் தெரிந்து கொள்ளவேண்டும். அவற்றை நன்கு பயன்படுத்துகின்ற அளவு நம்மிடத்துப் பக்தி வளர்கிறது. வானில் மேகம் படலம் படலமாக இருந்து பிறகு அது மழைத்தாரையாக உலகுக்கு வருவதுபோன்று இறைவனிடம் இருந்து அருள் பக்தனது உள்ளத்துக்கு வருகிறது. மழை ஜட நிலையில் உள்ள உலகுக்கு உயிர் ஊட்டுகிறது. இறைவனுடைய அருள் ஜீவனைப் பரத்தின்பால் எடுத்துச் செல்கிறது. அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை இராமனையே எண்ணி எண்ணி அருள்தாகம் உடையவளாஞள். சீதை நினைத்ததாவது: ''இராமன் என்னை மறந்து போய் இருப்பார். அப்படி மறக்கவில்லை எனில் நான் மாண்டு போய் விட்டதாக எண்ணி என்னைக் கைவிட்டிருப்பார். ஆகையால், இனி நான் உயிரோடு இருப்பது பொருந்தாது.'' இங்ஙனம் எண்ணி தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தாள் சீதை. அந்நிலையில் 'ராம், ராம்' என்று யாரோ உச்சரிப்பது சீதையினுடைய காதில் விழுந்தது. அரக்கர்களுடைய சூழ்ச்சியாக இருக்குமோ என்று நாலாபக்கமும் சீதை தன் பார்வையைத் திருப்பும்பொழுது ஆஞ்சநேயர் அவள் கண்ணில் தென்பட்டார். ஆஞ்சநேயர் ராமநாமத்தை உச்சரித்ததை சீதை கேட்டதும் தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டொழித்தாள். ஆராய்ச்சி செய்து ராம நாமத்தை உச்சரித்தவர் ராமதூதராகிய ஆஞ்சநேயர் என்பதை அறிந்தாள். சீதைக்கு ஆஞ்சநேயர் வந்து உதவியது போன்று பக்தனுக்கு நெருக்கடியான சூழ்நிலையில் கடவுள் வந்து உதவுகின்ருர். ஆஞ்சநேயருக்குக் கிட்டிய இரு மாபெரும் காட்சிகள் வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. சீதையைத் தவக்கோல நிலையில் அனுமான் கண்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பதினன்கு ஆண்டுகள் வனவாசத்துக்குப்பின் இராமன் அயோத்திக்கு வரவில்லை என்று தீக்குளிக்க இருந்த பரதனுடைய காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இவ்விரண்டு காட்சிகளும் அனுமானுக்குக் கிடைத்த அரிய காட்சிகளாகும். பக்தன் பரவசநிலையிலிருந்து சமாதி அடையும் நிலைக்குப் போவதைக் காணப்பெறும் காட்சியே மிக

உயர்ந்த காட்சியாகிறது. அக்காட்சியைச் சிந்தனை செய்யச் செய்ய சிந்தனை செய்பவனுடைய உள்ளத்தில் பக்தி வளர்கிறது.

"நீடூழி வாழி என வாழ்த்தி ஏத்தும்" என்கிறார் தாயுமானவர். பரத்தோடு தொடர்பு வைத்ததன் விளைவாக உள்ளத்தில்எழும்சொற்கள் இறைவனுடைய மகிமையைச் சொல்லக் கூடிய அருள் நிறைந்த சொற்களாக இருக்கின்றன. பரத்தோடு தொடர்பு கொண்டவர்களுடைய மொழி நிறைமொழியாக இருக்கின்றது. பக்தர்கள் திருப்தி உடையவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கை பரமனுக்குப் பெரிய திருப்தியாக இருக்கிறது. அவர்களைப்பற்றிப் பக்தர்கள் கேட்டுத் திருப்தி அடைகின்றார்கள். பரமனைப் புகழ்வது பொருள் சேர்ந்த புகழ் ஆகிறது. "இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்பது குறள். இறைவனுடைய பெருமையைப் பேசுபவர்கள் நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் கடந்து பெருவாழ்வை அடைகின்றனர். நிறைநிலை அடைந்த அவர்களுடைய வாயில் இருந்து வரும் சொற்கள் தத்துவம் நிறைந்தவைகளாக இருக்கின்றன. பரமனுடைய மகிமையை உணர்ந்தவர்கள் தங்களுடைய உணர்ச்சியைச் சொல்லில் வெளியிடும் பொழுது அது உயிர் ததும்பிய சொல்லாக இருக்கின்றது. பிராணப் பிரதிஷ்டை செய்த கோவிலில் அருள்நிறைந்து இருப்பது போன்று பக்தர்களின் பாடலில் அருள் நிறைந்து இருக்கிறது. அருட்பாடல்களை யார் படித்தாலும் அவர்களுக்கு அருள் உணர்ச்சி உண்டாகிறது.

"கடல் மடைதிறந்தனைய அன்பர் அன்புக்கு எளியை" என்கிறார் தாயுமானவர். கடலைத் திறந்து பள்ளத்தில் பாயவிட்டால் அது எப்படி வாரிக் கொட்டுமோ அப்படி உணர்ச்சிப் பெருக்கின் வேகத்தால் இறைவா, உம்மைக் குறித்துப் பக்தர்கள் ஆடவும், பாடவும் செய்கின்றனர். பக்தர்கள் உம்மைக் கரம் கூப்பி வழுத்துகின்றனர். அவர்களுடைய உணர்ச்சி சொல்லோவியமாக வடிவெடுத்த பொழுது உம்முடைய மகிமையை விளக்கியது. பக்திப் பேருணர்வில் திளைத்துள்ள பக்தர்களுக்கு நீ எளியவன். பக்தி வலையில் படுவோன் காண்க என்னும் ஆப்த வாக்கியம் நீ பக்திக்கு வசப் படுபவன் என்பதைக் குறிக்கின்றது. கடவுள் முக்தியை எளிதில் கொடுத்துவிடுவார். ஆனால் அவர் பக்தியை எளிதில் கொடுத்து விடுவதில்லை. பக்தியைக் கொடுத்து விட்டால் பக்திக்கு வசப்பட்டுப் பக்தனுடைய போக்குக்கு அவர் நடந்தாக வேண்டும்.

"கல்நெஞ்சனுக்கு எளியையோ" — என்கிறார் தாயுமானவர். இறைவா, நீ அடியவர்களுக்கு எளியவனாக இருக்கின்றாய். மனம் பரிபாகம் அடைந்து உம்மைக் குறித்து உருகாத கல்நெஞ்சனுக்கு நீ எளியவனாவாயா? இறைவனைக் குறித்து உள்ளம் எப்படி உருக வேண்டும் என்பதை மாணிக்கவாசகர் பகர்ந்துள்ளார். "உள்ளம் தாள் நின்று உச்சியளவு நெஞ்சாய் உருகாதால், உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா வெள்ளம்தான்பாயாதால், நெஞ்சம் கல்லாம் கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே" என்கிறார் மாணிக்கவாசகர். தாயுமானவர் போன்றவர்களே தங்கள் நெஞ்சு கல் என்றுசொல்லுவார்களானால் நம்முடைய பண்பாட்டைப்பற்றி என்ன கூறுவது! பண்பாட்டில் அவர்கள் எங்கே! நாம் எங்கே! உலகாயதனுக்கு உலகப்பொருள் எவ்வளவு இருந்தாலும் குறை நீங்காது. அருளாளர்கள் அருள் துறையில் எவ்வளவு முன்னேற்றமடைந்தாலும் தாங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் போதாதுஎன்ற குறையுடையவர்களாக இருக்கிறார்கள்.

"கருதரிய சிற்சபையில்" என்கிறார் தாயுமானவர். அகிலாண்டமும் இறைவனுக்குச் சித்சபை ஆகின்றது. சித்சபை நம் நெஞ்சத்திலிருக்கிறது. அதை அடைவது நம் இலட்சியம் ஆகும். உலக சம்பந்தமான எண்ணங்களுக்கு அது எட்டாததாக இருக்கிறது. உலக எண்ணங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுக் கருதரியசிற்சபையில் நாட்டங்கொள்கின்ற பொழுதுதான் அப்பேரறிவை உணர சாத்தியமாகின்றது.

'ஆனந்த நிர்த்தமிடும்' என்கிறார் தாயுமானவர். ஆனந்தம் உண்டாகும்பொழுது பாடலும், ஆடலும் தானாக உண்டாகின்றன. இயல், இசை, கூத்து என்ற மூன்றையும் ஆனந்தக் கூத்தன் தன் சொரூபத்தில் விளக்குகின்றான்.

நம் கருத்தை பிறர்க்கு விளக்குவதற்குச் சொல்லைச் சரியாகக் கையாளுதல் இயல் ஆகிறது. சொல் பண்பாடு அடைந்து இசையாக வடிவெடுக்கிறது. இசை மேலும் பண்பட்டு அது ஆனந்தத் தாண்டவமாக வடிவெடுக்கிறது. இறைவன் ஆனந்தத்தில் பொங்கி எழுந்த கூத்தின் விளைவே பிரபஞ்சத்தின் இயக்கம் ஆகும். பண்பாட்டில் நாம் கீழ்நிலையில் இருக்கிறபொழுது தொல்லைகளும், கவலைகளும் அதிகம். பண்பாட்டில் கீழே இருக்கும்பொழுது பிறவிகளும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. தெய்வத்தின்மீது பக்தி பூண்டு பிரபஞ்சத்தின் செயல்களை இறைவனுடைய திருவிளையாடலாகக் கண்டு இறைவனுடைய சாந்நித்தியத்தை உள்ளத்தில் உணரும் பரிபாகம் அடைகின்றவர்கள், இறைவன் சதாகாலம் ஆனந்த சொரூபமாக இருப்பது போன்று ஆனந்த நிலையில் இருக்கிறார்கள். ஆனந்தம் நமக்குச் சொந்தம். அறியாமையினால் ஆனந்தத்தை நமக்கு வேறாகக் கருதி உலகத் துயரத்தில் ஈடுபட்டவர்களாக இருக்கின்றோம். உலகத்திலிருந்து விலகி இருக்கத் தெரிந்து கொண்டால் உலகத் துன்பத்துக்கும் நமக்கும் வெகுதூரம். "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்பது உண்மை. உலகத்தில் ஏன் இவ்வளவு துன்பங்கள் இருக்கின்றன என்ற கேள்வி சுவாமி விவேகானந்தரிடம் எழுப்பப்பட்டது. 'அறியாமை, அறியாமை, அறியாமை' என்று மூன்று முறை சொல்லி அதற்கு விடை கொடுத்தார். துன்பக்கண்ணீர் சிந்துவது அறியாமை அல்லது அஞ்ஞானத்தின் விளைவாகும். பரத்தில் லயமாகி ஆனந்தக்கண்ணீர் சிந்துவோமானால் அது ஞானத்தின் அறிகுறியாகும்.

"கருணாகரக் கடவுளே" என்று தாயுமானவர் இயம்புகின்றார். கடவுளைத்தான் கருணாகரன் என்று சொல்ல வேண்டும். கருணை எத்தகையது என்பதைச் சிறிது விளக்கலாம். விறகை வெய்யிலில் காயப்போட்டு இருந்தார்கள். வானத்தில் மேகம் தோன்றி மழைத்துளி ஒவ்வொன்றாக விழ ஆரம்பித்தது. வெளியில் உள்ள விறகை எடுத்து நனையாமல் வைப்பதற்காகத் தாய் விறகுகளை அறைக்குள் கொண்டு சென்றாள். குழந்தை தாய்க்கு உதவியாக ஒரு விறகைத் தூக்கிக்கொண்டு சென்றது. சுமை தாங்காமல் குழந்தை கீழே விழுந்து அழுகின்றது. அப்பொழுது தாய் என்ன செய்வாள் தெரியுமா? விறகு நனைவதையும் பொருட்படுத்தாமல் ஓடோடி வந்து குழந்தையை எடுத்து ஆறுதல் சொல்லுவாள். குழந்தையின் மீதுள்ள கருணையினால் தாய் அங்ஙனம் நடந்து கொள்ளுகின்றாள். இறைவனுக்குத் தொண்டனாக இருந்து அவருக்குப் பணிவிடை செய்வதில் தாய் குழந்தைக்குப் பணிவிடை செய்து மகிழ்ச்சி அடைவது போன்று நாம் மகிழ்ச்சி அடையவேண்டும். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று இருக்கும் பக்தனைக் கருணைக் கடவுள் தம் சொரூபமாக ஆக்குகின்றார். ஸ்ரீராமகிருஷ்ணர் பகர்வதாவது: "கடவுளை நோக்கி நாம் ஒரு அடி போனால் கடவுள் நம்மை நோக்கிப் பத்து அடி வருகிறார்." நம் நெஞ்சில் சதா குடிகொண்டிருக்கும் இறைவனை நாம் புறக்கணித்தது நம்முடைய குற்றம். நாம் புறக்கணித்தபொழுதிலும் நம்மை அவர் விட்டுவிடவில்லை.

"கள்ளனறிவூடும் மெள்ள மெள்ள வெளியாய்க் கலக்கவரு நல்ல உறவே" என்கிறார் தாயுமானவர். கடவுளைப் புறக்கணித்த முறையில் நாம் கள்வர்களாகின்றோம். நம் நெஞ்சில் குடியிருந்து சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் அவருடைய சாந்நித்தியத்தை ஞாபகமூட்டுகின்றார். அவர் நமக்கு நல்ல உறவாகவும் கருணாகரனாகவும் இருக்கின்றார். அவருடைய கருணை சதா நமக்கு வந்துகொண்டிருக்கிறது. அக்கருணையைப் பயன்படுத்தத் தெரியாது நாம் அவருக்கு வேற்றாராக இருந்து வருகிறோம். முறையான வாழ்க்கை வாழ்ந்து அவரிடம் பக்திசெலுத்தி அவரை நமக்குச் சொந்தமாக்கும் பொழுது கருணையோடு அவர் நம்மை எடுத்து ஆட்கொள்கின்றார். தக்க தருணத்தில் சீதைக்கு ஆஞ்சநேயருடைய உதவி வந்தது போன்று பரத்தை உள்ளன்போடு நாடுகின்றவர்களுக்கு அவர் தக்க சமயத்தில் உதவி புரிகின்றார். பண்புடைய பக்தர்கள் கடவுள் நாட்டத்தில் தீவிரமாக இருக்கின்றார்கள். அருள் உணர்வு நம்மிடம் வளர்வதற்கேற்ப நாம் பாக்கியவான்கள் ஆகின்றோம். பக்தியும் பண்பாடும் உடையவர்களாக நாம் மாறியமைவோமாக. (முற்றும்)

உலகப் பேராசிரியர்கள்

(சுவாமி விவேகானந்தர் 1900ஆம் ஆண்டில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பசாடினியாவிலுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[97ஆம் பக்கத் தொடர்ச்சி]

நீங்கள் போர்வீரனொருவன் அரக்கனைப் பற்றிக்கொண்ட கதையைக் கேட்டிருப்பீர்கள். ஒரு போர்வீரன் ஓர் அரக்கனைப் பிடித்துக் கொண்டான். நகரத்துக்கு வெளியில் இருந்து அவன் போர் வீரர்கள் வசிக்கும் முகாமுக்குச் சென்றான். ''முகாமுக்கு வெளியில் இருந்து நான் ஒரு அரக்கனைப் பிடித்துவிட்டேன்'' என்று கூறினான். "அவ் அரக்கனை உள்ளே கொண்டுவா'' என்று முகாமில் இருந்த ஒருவர் கூறினர். அரக்கன் உள்ளே வர மறுக்கிறான் என்று கூறினான் அவன். அப்படியானல் அரக்கனை விட்டுவிட்டு நீ உள்ளே வா என்றது குரல். என்னையும் அவன் விடமாட்டேன் என்கிறான் என்றான் அவன். அவனைப்போன்று நாமும் நம் மனதில் ஆசை என்னும் அரக்கனைப் பிடித்துக்கொண்டோம். அந்த ஆசை என்னும் அரக்கனை அடக்கியாள இயலாதவர்களாக இருக்கின்றோம். அவ் ஆசை என்னும் அரக்கனுக்குக் கீழ் நாம் இருப்பதற்கும் முடிவதில்லை. ஆசை என்னும் அரக்கனைப் பிடித்து சாந்தியாக இரு, அமைதியாக இரு என்று அறவுரை கூறுகின்றோம். ஒவ்வொரு குழந்தையும் நான் அமைதியாக இருக்கமுடியும் என்று நினைக்கிறது; பேசுகிறது. ஆனல் அப்படி இருப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது. நானும் முயன்று பார்த்திருக்கிறேன். என்னுடைய கடமைகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு மலையின் உச்சிக்கு ஓடியிருக்கிறேன். ஆங்கு அடர்ந்த காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்திருக்கிறேன். ஆனல் அதனல் என்ன பயன்? அந்த ஆசை என்னும் அரக்கனை நான் விடாது பற்றிக்கொண்டே இருக்கிறேன். நான் எங்குச் சென்றாலும் உலக ஆசை என் உள்ளத்தில் வந்துகொண்டே இருந்தது. ஆசை என்னும் அரக்கன் நம் உள்ளத்தில் குடிகொண்டுள்ளான். வெளியில் உள்ள குற்றமற்ற மக்கள் மீது நாம் பழிசுமத்தக்கூடாது. இது பொருத்தமான சூழ்நிலை, பொருத்தமில்லாத சூழ்நிலை என்று நாம் கூறுகின்றோம். உண்மையில் நல்லதற்கும், கெட்டதற்கும் மூலம் நம் உள்ளத்தினுள்ளே இருக்கும் ஆசையென்னும் அரக்கனே யாவான். அதை நாம் மறந்துவிடுகின்றோம். ஆசை என்னும் அரக்கனை அடக்கிவிட்டால் எல்லாம் ஒழுங்காகிவிடும்.

நமக்கு அமைந்துள்ள கடமைகளைப் புறக்கணிக்கலாகாது என்று ஸ்ரீ கிருஷ்ணன் புகட்டியுள்ளார். நமக்கு அமைந்த கடமைகளை ஆண்மையோடு செய்ய வேண்டும். ஆனல் கர்மத்தின் பலனைப் பற்றி நினைக்கக் கூடாது. இட்ட ஆணையை நிறைவேற்றுவது ஏவலாளனுடைய கடமை. ஏன் என்று கேள்வி கேட்க அவனுக்கு உரிமையில்லை. படைவீரன் தலைவனுடைய ஆணைக்குக் கீழ்ப்படியவேண்டும். ஆராய்ச்சி பண்ணுவதற்கு அவனுக்கு உரிமையில்லை. அங்ஙனம் கடமையைச் செய். கர்ம பலனில் உரிமை பாராட்டாதே. கர்மத்தின் மூலம் முன்னேற்றம் அடைவதை இலட்சியமாகக்கொள். நீ செய்யும் கர்மம் எத்தகையது என்பதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டியதில்லை. எத்தகைய கர்மத்தையும் சுயநலமற்றுச் செய்யவேண்டும். மனமே, நீ சுயநலமற்று இருக்கிறாயா என்று உன் மனதைக் கேட்டுக் கொள். சுயநலமற்றவனக நீ இருப்பாயானல் நீ எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டியதில்லை. எதுவும் உன்னைத் தடை செய்ய முடியாது. கடமையைத் தீவிரமாகச் செய். உன்னை நாடி வந்த கடமையை எடுத்துக் கொள். சுயநலமற்றுக் கடமையைச் செய்வாயானல் சித்தம் சுத்தி அடைகிறது. சித்தம் சுத்தி அடைய அடைய உண்மை சிறிது சிறிதாக விளங்குகிறது. தீவிரமாகச் செயல்புரிவதற்கிடையில் எவன் ஒருவன் ஆழ்ந்த அமைதியைப் பெறுகின்றானே, ஆழ்ந்த அமைதிக்கிடையில் எவன் தீவிரமாகச் செயல்புரிகின்றானே அவனே யோகியாவான்; அவனே மகாத்மா ஆவான்; அவனே பரிபூர்ண நிலையை அடைந்தவனவான்.

உலகில் உள்ள எல்லாச் செயல்களும் புனித

மானவை என்பது கிருஷ்ணனுடைய போதனை யின் சாராம்சம் ஆகும். இழிவான செயல் என்பது இவ்வுலகில் எதுவும் இல்லை. ஒவ் வொரு மனிதனுடைய செயலும் சக்கரவர்த்தி யினுடைய செயல் மக்களுக்கு எவ்வளவு நலன் பயக்குமோ அவ்வளவு நலன் பயக்கவல்லது.

புத்தருடைய அறவுரைக்குச் செவிசாயுங்கள். அது மிகப் பெரிய அறவுரையாகும். உங்க ளுடைய இருதயத்தில் அது இடம் பெற்றிருக் கட்டும். புத்தர் பகர்ந்ததாவது: "சுயநலத்தை வேரோடு களைந்தெறிந்துவிடு. உன்னைச் சுயநல மாக்கும் ஒவ்வொன்றையும் உதறித்தள்ளு. மனைவி, மக்கள், குடும்பம் என்னும் பந்த பாசத்தை அகற்று. உலகமயமாகிவிடாதே. முற்றும் சுயநலமற்றவனாகத் திகழ்வாயாக." உலகப் பற்றுடைய மனிதன் சுயநலமற்றவனாக இருக்கவேண்டும் என்று நினைக்கின்றான். ஆனால், அவன் தன் மனைவியின் வதனத்தைப் பார்க்கின்றபொழுது சுயநலக்காரன் ஆகிவிடு கின்றான். தாய் ஒருத்தி சுயநலமற்றவளாக இருக்கவேண்டுமென்று நினைக்கின்றாள். ஆனால் அவள் தன் குழந்தையைப் பார்க்கும்பொழுது உடனே அவளுக்குச் சுயநலம் வந்துவிடுகிறது. உலகத்தவர் இங்ஙனம் சுயநலக்காரர்களாக இருக்கிறார்கள். எப்பொழுது சுயநல ஆசை மனதில் எழுகின்றதோ, எப்பொழுது சுயநலத் தோடு செயல்புரியப்படுகிறதோ அக்கணமே உண்மையான மனிதன் மறைந்துவிடுகின்றான். விலங்கு மனிதன், அடிமை மனிதன், தன் சகோதரர்களை மறந்த மனிதன் காட்சி அளிக் கின்றான். அத்தகைய மனிதன் தன்னைத்தான் முன்னணிக்குக் கொண்டுவருகின்றான். மற்ற வர்களைத் தனக்கு அடுத்தபடியாக வைக்கின் றான். மற்றவர்களைத் தன் காரியத்துக்குப் பயன்படுத்துகிறான்.

ஸ்ரீ கிருஷ்ணருடைய போதனையும் நம் மன தில் இடம்பெற வேண்டும். அவருடைய அற வுரை இல்லாது நாம் செயலாற்ற முடியாது. அவருடைய அறவுரை இல்லாமல் போனால் அமைதியோடும், உற்சாகத்தோடும், மகிழ்ச்சி யோடும் மனப்பூர்வமாக எந்தச் செயலையும் செய்ய முடியாது. "உங்கள் செயலில் சிறிது தீமை இருந்தால் அதற்காக அச்சம் கொள்ளா தீர்கள். தீமையில்லாத செயல் இல்லை. செய லின் பயனைக் கருதாது செயலின் விளைவை இறைவனிடம் ஒப்படைத்துவிடுங்கள்." இங் ஙனம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா பகர்ந்துள்ளார்.

இருதயத்தின் ஓரிடத்தில் கண்ணபிரானின் மற்றொரு அறவுரைக்கு இடம் கொடுங்கள். காலம் பறந்தோடிக் கொண்டிருக்கிறது. இவ் வுலகம் துன்பமுடையதாகவும், எல்லைக்குட் பட்டதாகவும் இருக்கிறது. நீங்கள் நல் உணவு அருந்துகிறீர்கள். மினுக்கான ஆடை அணிந்து கொள்கிறீர்கள். வசதியான வீட்டில் உறங்கு கின்ற ஆடவர்களே, பெண்டிர்களே, கோடிக் கணக்கான மக்கள் உணவின்றி பசியால் வாடி மடிவதைக் குறித்து எப்பொழுதாவது எண் ணிப் பார்த்திருக்கிறீர்களா? துன்பம், துன்பம், எல்லாம் துன்பம் என்னும் பேராசையைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வுலகத்துக்கு வரும் குழந்தை முதலில் அழுகிறது. இவ் வுலகம் அழுகைக்கு இடமாகிறது. உலகத் தின் துயரைக் கண்டு உளம் நொந்து பேசி யுள்ள சான்றோரின் உரையை நீங்கள் செவி மடுப்பீர்களானால் நீங்கள் சுயநலக்காரர்களாக இருக்கமாட்டீர்கள்.

நாசரத்தில் தோன்றி உலகுக்கு உபதேசம் செய்த உத்தமருடைய போதனையைக் கேளுங் கள். அவருடைய போதனையாவது : "நீங்கள் ஆயத்தமாக இருங்கள். ஆண்டவன் அருள் உங்கள் கைவசம் இருக்கிறது." ஸ்ரீகிருஷ்ணரு டைய போதனையை நான் சிந்தித்துப் பார்த் திருக்கின்றேன். அவர் போதனையின்படி பற் றற்றுக் கருமம் புரியவும் முயலுகின்றேன். ஆனால், சில சமயம் நான் அதை மறந்துவிடுகின் றேன். அப்பொழுது புத்தருடைய போதனை திடீரென்று என் ஞாபகத்துக்கு வரும். "விழிப் புடன் இரு. உலகத்தில் தோன்றிய யாவும் நிலையற்றவை. வாழ்வு எப்பொழுதும் துன்ப மயமானது." இப்போதனையை நான் சிந்தித் துப் பார்ப்பேன். எந்தப் போதனையை ஏற்றுக் கொள்வது என்பதில் நான் ஊசலாடிக்கொண் டிருப்பேன். அப்பொழுது பேரிடி முழக்கம் போன்று "விழிப்புடன் இரு. இறைவனு டைய சாம்ராஜ்யம் உன்னிடத்தில் இருக் கிறது" என்னும் போதனை என்னுள் எழும். கண நேரமும் தாமதியாதே. நாளைக்கென்று எதையும் ஒத்திப்போடாதே. உன்னுடைய

இறுதிக்கு இன்றே தயாராய் இரு. உனக்கு இறுதிக்காலம் உடனே நிகழலாம். இந்த அறிவுரையும் உங்கள் மனதில் ஞாபகத்தில் இருக்கட்டும். இவ்வறிவுரைகளை எல்லாம் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இவ்வறிவுரைகளைத் தந்த மகான்களுக்கும், கடவுளுக்கும் வணக்கம் செலுத்துவோம்.

சமத்துவத்தை உலகுக்குப் புகட்டியமுகம்மது என்னும் தேவதூதர் அடுத்து நம் காட்சிக்கு வருகிறார். "அவருடைய சமயத்தில் என்ன நன்மை இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். அதில் ஒரு நன்மையும் இல்லாவிட்டால், அது மக்களிடையே எப்படி இடம் பெற்றிருக்க முடியும்? நல்லது ஒன்றுதான் எல்லாக் காலத்திலும் இருக்கும். அதுதான் எல்லா இன்னல்களையும் கடந்து பிழைத்திருக்கும். நல்லதுக்கு ஆற்றல் அதிகம். ஆகையினால் அது வாழ்ந்திருக்கிறது. மனம் மாசு படிந்த மனிதன் உலகத்தில் எவ்வளவு காலம் வாழ்ந்திருக்க முடியும்! தூய மனிதன் மற்றவர்களை விட நீண்டகாலம் வாழ்ந்திருக்கின்றான் அல்லவா? தூய்மைதான் வலிமை மிகுந்தது. நலம் ஆற்றல் மிகுந்தது. இதில் ஐயமில்லை. முகம்மதிய மதத்தில் நலன் இல்லையெனில் இவ்வளவு காலம் அது உலகில் எப்படி இருந்திருக்க முடியும்? அதில் நலமிருக்கிறது. ஒற்றுமையை உலகுக்குக் கொடுத்தவர் முகம்மது. முகம்மதியர் அனைவரிடமும் சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் அம்மதம் வழங்கி இருக்கிறதன்றோ!

ஒவ்வொரு தீர்க்கதரிசியும், ஒவ்வொரு தேவதூதனும் உலகுக்கு ஒரு தனிச் செய்தியைக்கொண்டு வந்தவர்கள் என்பதை நாம்அறிகின்றோம். முதலில் அவர்கள் கூறிய உபதேசத்தைக் கேட்டுப் பிறகு அவர்களுடைய வாழ்க்கையைப் பார்ப்பீர்களானால், அவர்களுடைய வாழ்க்கை முழுவதும், அவர்களுடைய உபதேசத்துக்கு விளக்கமாக அமைந்திருப்பதைக் காண்பீர்கள்,

இன்று அஞ்ஞானத்தில் உழன்று கிடக்கும் அறிவிலிகள் கணக்கற்ற கொள்கைகளைத் தோற்றுவிக்கிறார்கள். தங்களுடைய மன வளர்ச்சிக்கேற்ப அவற்றை விரித்துத் தங்களுடைய கருத்துக்கொப்ப அவைகளுக்கு விளக்கம் தருகிறார்கள். பிறகு அவற்றை உலகப் பெரியார்களுடைய நல்லுரைகளென்று பகர்கின்றார்கள். உலகப்பெரியார்களுடைய போதனைகளை எடுத்துக்கொண்டு அவைகளுக்குப் பொருந்தாத உரைகளைத் தாங்கள் கட்டிவிடுகிறார்கள். ஒவ்வொரு தீர்க்கதரிசியினுடைய போதனைக்கும் அவர்களுடைய வாழ்க்கையே சிறந்த பாஷ்யமாக அமைகின்றது. அவர்களுடைய வாழ்க்கையைக் கவனியுங்கள். அவர்கள் செய்த செயல்களே அவர்கள்கூறிய உபதேசங்களுக்கு விளக்கமாக அமைகின்றன. கீதையைப் படியுங்கள். கீதாச்சாரியினுடைய வாழ்க்கை கீதைக்கு வியாக்கியானமாக அமைந்திருப்பதைக் காண்பீர்கள்.

முகம்மதுநபி தம் வாழ்க்கையின் மூலமாக முகம்மதியர்களுக்கிடையில் சகோதரத் தன்மையும் பரிபூரண சமத்துவமும் திகழவேண்டும் என்பதைக் காட்டியுள்ளார். முகம்மதியர்களுக்கிடையே ஜாதி, இனம், வம்சம், வருணம் ஆகியவற்றில் வேற்றுமைகள் இல்லை. துருக்கிச் சுல்தான் ஆப்பிரிக்காவின் அடிமைச் சந்தையில் நீக்ரோ இனத்தைச் சார்ந்த ஒருவனை விலைக்கு வாங்கி அவன் கையில் விலங்கு பூட்டித் துருக்கிக்குக் கொண்டுவருகின்றான். அந்த நீக்ரோ முகம்மதியனாக மாறி திறமையும் தகுதியும் உடையவனாக இருந்தால் சுல்தானுடைய மகளையே அவன் மணம் செய்துகொள்ளலாம். உங்களுடைய நாட்டில் நீக்ரோ இனத்தார்களையும் செவ்விந்தியர்களையும் நடத்துகின்றமுறையோடு இதைச் சீர்தூக்கிப் பாருங்கள். இந்துக்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? கிறிஸ்துவ சமயத்தில் உள்ள பாதிரிமார் ஒருவர் வைதிக இந்துவினுடைய உணவைத் தொட்டுவிடுவாரானால் அவ்வுணவையே அவ் இந்து தூக்கி எறிந்துவிடுவார். இந்துக்களுடைய தத்துவம் மிக உயர்ந்தது எனினும் நடைமுறையில் எத்தகைய குறைபாடு இருக்கிறது என்பதைப் பாருங்கள். மற்ற எல்லா மதத்தினர்களையும் விட முகம்மதியர்கள் பெருமைக்குரியவர்களாக இருக்கிறார்கள். இனப்பற்று, நிறப்பற்று இவைகளைப் பொருட்படுத்தாமல் அவர்கள் காட்டும் சமத்துவத்திலேதான்—பூரண சமத்துவத்திலேதான் அவர்களுடைய சிறப்பு அமைந்திருக்கிறது.

இதுவரையிலும் ஆராய்ந்த தீர்க்கதரிசிகளை விட உத்தம தீர்க்கதரிசிகள் இவ்வுலகத்துக்கு வருவார்களா என்னும் கேள்வி எழலாம். இவ்வுலகத்துக்கு வருவார்கள் என்னும் விடையை அக்கேள்விக்குத் தரலாம். இவ்வுலகத்தில் தோன்றுவார்கள் என்பது உறுதி. ஆனால் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டு இருக்காதீர்கள். பழைய சாசனத்தில் இருந்து புதிய சாசனம் உருவானது என்பது உண்மை. இப்புதிய சாசனத்தை நிறுவ வந்த தீர்க்கதரிசிகளாக நீங்கள் திகழ வேண்டும் என்பது எனது விருப்பம். பழைய அறவுரைகளை எடுத்துக்கொண்டு நீங்கள் அனுபவத்தில் கண்ட உண்மைகளையும் சேர்த்து மற்றவர்களுக்கு உபதேசிக்கும் தீர்க்கதரிசிகளாக விளங்குங்கள். உண்மையைப்போதிக்க வந்த பேராசிரியர்கள் யாவரும் பெருமைக்குரியவர்களே. அவர்கள் சிறந்த போதனையை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களைத் தெய்வங்களாக வைத்துப் போற்றவேண்டும். அவர்களுக்கு வணக்கம் செலுத்துவோம். நாம் அவர்களுடைய அடியார்களாவோம். நாமும் பெருமைக்குரியவர்கள் என எண்ணி நம்மையும் போற்றிடுவோம். உலகப் பேராசிரியர்கள் தெய்வத்தின் குழந்தைகள் என்றால் நாமும் தெய்வத்தின் குழந்தைகளாவோம். அவர்கள் பரிபூரண நிலையை அடைந்திருந்தார்கள். நாம் அப்பரிபூர்ண நிலையை அடையப் போகின்றோம். ஏசுநாதர் கூறிய வாசகத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ''கடவுள் சாம்ராஜ்யம் நம் கைவசம் உள்ளது.'' இது ஏசுநாதருடைய வாசகமாகும். இந்த க்ஷணம்முதல் நாம் ஒவ்வொருவரும் உறுதியான தீர்மானம் செய்துகொள்வோமாக. ''நான் ஒரு தீர்க்கதரிசியாகத் திகழ்வேன். ஞான ஒளியைப் பரப்பும் அருளாளன் ஆவேன். கடவுளின் அருள் குழந்தையாவேன். கடவுளே ஆய்விடுவேன்.'' இத்தகைய உறுதியான தீர்மானம் உடையவர்களாக நம் வாழ்க்கையைப் பெருவாழ்வாக ஆக்குவோமாக. (முற்றும்)

குருவிடமிருந்து மந்திரதீட்சை பெறுவது அவசியம். உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் மந்திரத்தை உன்னுடைய விசுவாசத்திற்கும், மதிப்புக்கும் உரிய சான்றோர் இடமிருந்து தீட்சையாகப் பெறுவது நல்லது. ஸ்ரீராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளதாவது: ''உனக்குத் தக்க குரு அமைந்திருக்கலாம். கடவுளுடைய கிருபை கிட்டியிருக்கலாம். ஸத் சங்கத்தின் துணை இருக்கலாம். ஆனால் உன்னுடைய மனதின் கிருபை இல்லாவிட்டால் நீ சாதனையில் முன்னேற்றம் அடைய முடியாது.'' மனதின் கிருபை என்றால் என்ன? கடவுள் காட்சியைப் பெற வேண்டுமென்று தீவிர ஆவலும், தளராத முயற்சியும் உடைய மனதுதான் மனதின் கிருபையாகிறது. மனதைத் தூய்மைப்படுத்துவதற்குப் போராடியாகவேண்டும். ''நான் நிச்சயம் கடவுள் காட்சி பெற்றுவிடுவேன். அதில் நான் தோல்வி அடையமாட்டேன்.'' இத்தகைய நம்பிக்கை உன்னிடத்தில் இருக்கவேண்டும். தன்னம்பிக்கையும், உறுதியான தீர்மானமும் உன்னிடத்தில் இருக்கவேண்டும். பூமியைப் பண்படுத்தி வைத்திருந்தால் உரிய காலத்தில் நல்ல விதையைப் போட்டு மரத்தை உருவாக்கலாம். பூமியைப் பண்படுத்துவதற்கு நிகர் உன் மனதைத் தூய்மைப்படுத்துவதாகும். கடவுளிடம் பக்தி உன்னிடத்தில் வளர்ந்துகொண்டே இருக்கட்டும். தீவிர வைராக்கியமும், ஆழ்ந்த அருள் நாட்டமும் நீ பெற்றிரு. அப்பொழுது கடவுள் அருள் உனக்குக் கிட்டும். நீ சாந்தி அடைவாய். தனிமையில் இருந்து உளங்கனிந்து இறைவனைக் கூவி அழை. உன் இருதயத்தையும், மனதையும் அவர்பால் கொடுத்துவிடு. இங்ஙனம் உன் மனதை நீ அவருக்கு முழுமையாகக் கொடுக்கும்பொழுதுதான் அவர் உனக்குக் காட்சி தருவார். உன்னிடம் கடவுள்பற்று தீவிரமானதாக ஆகின்றளவு உலகப்பற்று குறைந்துவிடும். அப்பொழுது நீ வைராக்கிய புருஷன் ஆகின்றாய். தீவிர வைராக்கியமும், இடைவிடாத சாதனையும் கடவுள் காட்சி பெறுவதற்கு இன்றியமையாதவையாகின்றன.

— *சுவாமி பிரேமானந்தர்*

பிரம்மமும் அகர்மமும்

கடலின் மேற்பரப்பு சலனமுடையது. கடலின் ஆழ்பகுதி அமைதியே வடிவெடுத்ததாக விருக்கிறது. பிரகிருதி கர்ம சொருபமாக விருக்கிறது. பிரம்மம் அகர்ம நிலையில் கர்மத்தையெல்லாம் கடந்த நிலையிலிருக்கிறது. அசைகின்ற பொருள்களுக்கெல்லாம் அசையாத பொருள் ஆதாரமாய் இருக்கவேண்டும். அசைகின்ற பிரபஞ்சத்துக்கு அசையாத பிரம்மம் ஆதாரமாய் இருக்கின்றது. அசைவு உண்டாகின்ற பொழுது கர்மம் ஏற்படுகிறது. பிரம்மம் அசையாது இருப்பதால் அது அகர்ம நிலையிலிருக்கிறது. ரயில் வண்டியில் பிரயாணம் செய்கின்ற பொழுது ஜன்னல், கதவுகளின் வழியாக வெளியே பார்த்தால் ரயில் பாதையின் பக்கங்களில் உள்ள தந்திக் கம்பங்கள் ரயில் வண்டி ஓடும் எதிர்த்திசையில் வேகமாக ஓடுபவைகளாகத் தென்படுகின்றன. உண்மையில் தந்திக் கம்பங்கள் அசையாமல் இருக்கின்றன. ரயில் வண்டிதான் உண்மையில் ஓடுகிறது. ஆனால் காட்சிக்குத் தந்திக் கம்பங்கள் ஓடுவன போன்று தென்படுகின்றன. அங்ஙனம் ஆத்மா செயலற்று இருக்கிறது. உடல், மனம், இந்திரியங்கள் முதலியன செயல்புரிகின்றன. இவைகளின் செயல் ஆத்மாவின் செயலாகத் தென்பட்டுக் கொண்டு இருக்கிறது. பற்றற்று, செயலற்று தன்னில்தான் திருப்தியுடையதாகப் பிரம்மம் யாண்டும் இருந்து வருகிறது.

கர்மத்தின் மூலம் நலம், கேடு உண்டாகின்றன. தீமை சிறிதும், நன்மை பெரிதும் கலந்துள்ள கர்மத்தைச் சத்கர்மம் என்றும், நலன் சிறிதும், தீமைபெரிதும் கலந்துள்ள கர்மத்தைத் தீயகர்மம் என்றும் பகர்கிறோம். நெல் வயலில் தோன்றும் களையைப் பிடுங்கினல் களைக்கு உயிர்ச்சேதம் ஆகின்றது. ஆகையால் அக்கர்மத்தின் மூலம் களையை ஒழிக்கின்ற தீங்கைச் செய்கின்றோம். களையைப் பிடுங்கி எறிவதன் விளைவாக நெல் நன்றாக வளர்ந்து மக்களுக்கு உணவுப் பொருளாக ஆகி மக்கள் இனம் காப்பாற்றப்படுகிறது. மக்கள் இனத்தைக் காப்பாற்றுகின்ற பெரு நன்மை அக்கர்மத்தின் மூலம் உண்டாகிறது. இனி அதற்கு மாறாக களையைப் பிடுங்காது விட்டால் களையைக் காப்பாற்றிய சிறுநலன் உண்டாகிறது. ஆனல் களை வளர்ந்து நெல்லை வளராது தடுத்து உணவு உற்பத்தியாவது தடைபடுகிறது. அதனல் பெருமக்கள் மடிய வேண்டிய பெரும் தீங்கு ஏற்படுகிறது. ஆகவே வயலில் களையை விடுவதைத் தீயசெயல் என்றும், களையைப் பிடுங்குவதை நற்செயல் என்றும் சொல்லுகிறோம். ஒவ்வொரு கர்மத்திலும் நலம், கேடுஆகிய இரண்டும் கலந்தே இருக்கும். பிரம்மம் அகர்ம நிலையில் இருப்பதால் அதனிடத்து ஞானம், அஞ்ஞானம்; நன்மை, தீமை; தர்மம், அதர்மம் என்ற இருமைகள் இல்லை. இவ் இருமைகளையெல்லாம் கடந்த நிலையில் பிரம்மம் தன்னில் தானக இருக்கிறது.

நாம் செய்கின்ற கர்மத்தில் நாம் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றோம். நலன் செய்கின்றவன் நலத்திலும், தீது செய்கின்றவன் தீதிலும் கட்டுப்பட்டவனக இருக்கின்றான். பிரகிருதியைச் சார்ந்துள்ள மனது நம்மை இத்தகைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. மனம் பிரகிருதியைச் சார்ந்திருக்கும் அளவு நாம் என்னதான் தத்துவம் பேசினலும் பந்த பாசத்திலிருந்து விடுபட முடியாதவர்களாக இருக்கின்றோம். சூரியன் எல்லாப் பொருள்களின் மீதும் சமமாக வெளிச்சத்தைப் பரப்புகின்றான். நல்ல பொருள்களின் மீதும் சூரிய வெளிச்சம் படுகிறது; கெட்ட பொருள்களின் மீதும் சூரிய வெளிச்சம் படுகிறது. ஆனல் பொருள்களில் உள்ள நலம், கேடுகளால் சூரியன் பாதிக்கப்படுவதில்லை. அங்ஙனம் பிரம்மம் எல்லா ஜீவர்களுக்கும் அறிவை வழங்குகின்றது. அந்தந்த ஜீவர்களின் அறிவில் ஏற்படும் நலம், கேடுகளால் பிரம்மம் பாதிக்கப்படுவதில்லை. ஈண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசமொழி ஒன்றை ஞாபகத்துக்குக் கொண்டு வருவது அவசியம். அதாவது: ''பிரம்மம் ஒரு விளக்கின் ஒளிப்பிழம்பைப் போன்றது. விளக்கு வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு நாம் பாகவதம் படித்தாலும் படிக்கலாம்; அவ் வெளிச்சத்தின் உதவியைக்கொண்டே பிறரைக் கெடுக்க வேண்டிய பொய்ப்பத்திரம்

ஒன்றை எழுதினலும் எழுதலாம். அவ்விரண்டு காரியங்களுக்கும் விளக்கின் ஒளி பயன்படுகிறது என்ருலும் நலன், கேடு அவ்விளக்கு வெளிச்சத்தைப் பாதிப்பதில்லை. அங்ஙனம் பிரம்மம் எல்லார்க்கும் அறிவைத் தருகின்றது. ஆனல் அது நன்மை, தீமைகளோடு சம்பந்தப்படுவதில்லை.''

பிரம்மம் அறிவு சொரூபம். பிரகிருதி கர்ம சொரூபம். பிரகிருதியானது பிரம்மத்தைச் சார்ந்திருக்கிறது. ஆனல் பிரகிருதி பிரம்மத்திற்கு அந்நியமானதன்று. ஞானக்கண் திறக்கப் பெறுபவர்களுக்கு இவ் உண்மை விளங்குகிறது. என்ன நோய் என்பதையும், நோயாளி எத்தகையவன் என்பதையும் அறிகின்றவனே சிறந்த மருத்துவனுகின்ருன். அவனே அந்த நோயை நீக்க வல்லவனுமாகின்ருன். நோய், நோயாளி ஆகிய இவ்விரண்டினுள் ஒன்றைச் சரியாகத் தெரிந்துகொள்ளாது போனலும் நோயைக் குணப்படுத்த முடியாது. அங்ஙனம் பிரம்மத்தையும், பிரகிருதியையும் அறிந்துகொள்பவனே சிறந்த ஞானியாகின்ருன். பிரம்மத்தையும், பிரகிருதியையும் சரியாக அறிந்து பிரம்மத்தைச் சார்ந்திருக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். பிரம்மத்தைச் சார்ந்திருக்கிறவனுக்கு மனத்தெளிவு உண்டாகிறது. கர்மத்தில் கட்டுப்படாது கர்மம்செய்வது அவனுக்கே சாத்தியமாகிறது. பிரகிருதியைச் சார்ந்திருப்பவனுக்குக் கர்மத்தை விட்டுவிடுவது அவ்வளவு சுலபமன்று. கர்மபலனைத் துறப்பதும் அவனுக்குக் கஷ்டம். கர்ம பலனில் பற்று வைக்காது கர்மம் செய்யவேண்டும் என்று உபதேசிப்பது எளிது. அவ் உபதேசப்படி ஒழுகுவது கஷ்டம். மனம் கீழ்மையான உணர்வில் உழன்று கொண்டிருக்கும்பொழுது அகர்மத்திலிருப்பது சாத்தியமில்லை. உடல் உணர்வைக் கடந்து மனம் அதீதத்துக்குப் போகும்பொழுதுதான் பிரம்மஞானம் உண்டாகிறது. பிரம்மஞானம் உடையவர்கள் யாண்டும் அகர்மத்தில் இருக்கிருர்கள். பிரம்மஞானம் என்னும் உயர்ந்த சமாதி நிலை எத்தகையது என்பதை விளக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசமாவது: ''உலகம் மாயை என்று சொல்வது எளிது. ஆனல் அதன் பொருள் இன்னதென்று உனக்குத் தெரியுமா? கற்பூரத்தைக் கொளுத்தினல் மீதி ஒன்றும் இருப்பதில்லை. விறகுக்கட்டையைக் கொளுத்தினல் சாம்பல் மீதி இருக்கும். உலகம் மாயை என்று சொல்லுவது கற்பூரத்தைக் கொளுத்துவதற்குச்சமமாகும். மாயையை விசாரணை செய்து கொண்டே வந்தால் முடிந்த நிலையில் உயர்ந்த சமாதி நிலை கிட்டும். அச்சமாதி நிலையில் நான், நீ, உலகம் என்ற உணர்ச்சி கொஞ்சமேனும் இராது.'' உயர்ந்த சமாதி நிலையில் பேரானந்தப் பெருநிலையும் அதை முற்றும் உணரும் பேரறிவும் இருக்கின்றன. மற்றவையாவும் மறைகின்றன. பிரம்மம் தன்னில் தானய் அகர்மத்தில் ஆனந்தமயமாக இருப்பது பிரம்ம ஞான நிலையை அடைந்தவர்க்கே தெரிகிறது.

பிரகிருதியில் கட்டுண்டுகிடக்கின்ற நமக்கு மூன்று அவஸ்தைகள் இருக்கின்றன. ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி என அம்மூன்றும் பெயர் பெறுகின்றன. விழிப்பு, கனவு, உறக்கம் என்றும்அவற்றைச் சொல்லலாம். விழிப்பு நிலையில் உடலும், இந்திரியங்களும், மனதும் வேலைசெய்கின்றன. கனவில் உடலும், இந்திரியங்களும் ஓய்வு எடுத்துக்கொள்கின்றன; மனது மட்டும் வேலை செய்கிறது. உறக்கத்தில் மனதும் சேர்ந்து ஓய்வு எடுத்துக்கொள்கிறது. இம்மூன்று நிலைகளுக்கும் சாட்சியாய் இருந்துகொண்டு மூன்று நிலைகளில் நிகழ்கின்ற கர்மங்களில் கட்டுப்படாது எது இருக்கிறதோ அது பிரம்மம் எனப்படுகிறது. மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பால் நாலாவது அவஸ்தையாகத் துரியத்தில் பிரம்மம் பேரானந்தப் பெருநிலையில் இருக்கிறது. துரியத்தில் மாயாகாரியங்கள் யாவும் ஒழிகின்றன. பிரம்மத்தை மறைத்திருந்த திரைகள் யாவும் நீக்கப்படுகின்றன. கர்மங்கள் யாவும் ஒழிந்து அகர்மத்தில் பிரம்மம் ஆனந்தசொரூபமாகவும், அவ்வானந்தத்தை உணர்கின்ற சித்சொரூபமாகவும் இருக்கின்றது. கடலில் தோன்றிய அலை விரிந்துகொண்டேபோய் அது எடுத்த வடிவத்தையும் நாமத்தையும் இழந்துகடல் மயமாவதுபோன்று பரத்தில் தோன்றிய ஜீவன், ஜீவபோதம் ஒழியும்போது நாமத்தையும், ரூபத்தையும் இழந்து பரமயம் ஆகின்ருன். அதுவே அகர்ம நிலையாகும். பிரம்மம் யாண்டும் அந்நிலையிலேயே இருக்கிறது.

சாதகனின் கடமைகள்

(சுவாமி ஆத்மானந்தர்)

உண்மையான சந்நியாசி ஒருவனின் வாழ்வு புனிதமும், தூய்மையும் நிறைந்ததாய் இருக்கவேண்டும். அவன் புறத்தில் எவ்வாறு காணப்படுகின்ருனே அவ்வாறே அகத்திலும் காணப்படவேண்டும். உலகைத் துறந்தவன் சந்நியாசி. பற்றுகள் அனைத்தையும் அடியோடு துறந்துவிட்டவன் சந்நியாசி. காவியுடைமட்டும் ஒருவனைச் சந்நியாசியாக்கிவிடாது. சந்நியாசி ஒருவன் ஆசாபாசங்கள் அனைத்தினின்றும் விடுபட்டிருக்கவேண்டும். அகக்கரணம் புறக்கரணம் ஆகிய அனைத்தையும் தன்வசப் படுத்தியிருக்கவேண்டும். "அந்தக்கரணம்அடங்கத் துறப்பதுவே எந்தத் துறவினும் நன்று எந்தாய் பராபரமே" என்பது தாயுமானவர் வாக்கு. வெளிப்பகட்டுச் சந்நியாசியினிடத்து இருத்தலாகாது. ஒருவன் புறத்தூய்மை புறத் துறவைவிட, அகத்தூய்மையும் அகத்துறவும் நிறைந்தவனுய் இருக்கவேண்டும். ஏனெனில் மானுடர் ஒருவனைப் புறத்தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடுகின்றனர். ஆனல் சான்ருேரோ மனிதனது மனபரிபாகத்தைக் கொண்டு மதிப்பிடுகின்ருர். இறைவன் மனிதனது அந்தரங்க சுத்தியைத்தான் பார்க்கின்ருர். நாம் எங்கிருந்தாலும் நம்மை இறைவன் கண்காணித்து வருகிருர் என்பதை மறந்துவிடலாகாது. இருளில் இருந்தாலும், தனித்திருந்தாலும், குகையினுள் இருந்தாலும், மக்கள் கண்ணில் படாதிருந்தாலும் இறைவன் கண்ணிலிருந்து நாம் தப்புவதில்லை. அமாவாசை இருளும் இறைவனுக்கு நடுப்பகல் போன்று ஒளி நிறைந்ததாய்த் தென்படும். நமது உள்ளத்தில் எண்ணுகிற ஒவ்வொரு எண்ணமும் அவனுக்கு நன்கு தெரியும். ஆதலால் நாம் யாண்டும் விழிப்புடனிருக்கவேண்டும். நாம் கடவுளின் கண்ணெதிரில் இருக்கிருேம் என்பதை யாண்டும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். பக்தியோடு ஜபதபங்களில் ஈடுபடவேண்டும். ஆத்ம சாதனத்தில் சிரத்தையுடன் ஈடுபடவேண்டும். கடவுளை நோக்கி "தாயினும் இனிய தயாநிதியே, நான் தூய விரதத்தைக் கொள்ளவும், உனது திருவடிக்குத் தொண்டு செய்யவும் அருள் புரிவாயாக! நான் இதுவரையில் நின்னை மறந்திருந்தேன். நினதருளால் இன்று விழிப்புற்றெழுந்தேன். இன்றுமுதல் எனது வாழ்வு உனக்குரியதாகுக. காமம், கோபம், பேராசை முதலியவற்றை எனது அகத்தினின்று அடியோடு அகற்றிவிடுவாயாக. பரிசுத்தமான இதயத்தை நல்கி நின் பக்தர் குழாத்தில் சேர்த்துக்கொள்வாயாக" என்று பிரார்த்திப்பாயாக.

நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஆர்வத்துடனும் சிரத்தையுடனும் சாதனத்தில் ஈடுபடுகின்ருேமோ அவ்வளவுக்கவ்வளவு சாதனத்தில் மேல்நிலையடைவோம். பாரமார்த்திக வாழ்வு வாழ விரும்புபவன் சிரத்தை மிகுந்தவனுய் இருக்கவேண்டும். சாதனத்தில் மிகுந்த சுறுசுறுப்புடையவனுகத் திகழவேண்டும். சாதகனது மனம் எந்த க்ஷணத்திலும் கீழ்நிலை அடையலாம். உறுதியான உள்ளமுடையவரும் நெறிதவறி விழுந்திருக்கின்றனர். துறவு வாழ்க்கை என்பது கத்தி முனையில் நடப்பதைப் போன்றது. நெஞ்சில் உறுதியும், சாதனத்தில் ஆர்வமும் இல்லாதவன் துறவுநெறியிலிருந்து தவறிப்போக வாய்ப்பு ஏற்படலாம். ஆதலால் நமது குறிக்கோளை நாம் மறந்துவிடலாகாது. பல சமயங்களில் அதை நாம் மறந்துவிடுகிருேம். அன்ருட அலுவல்களில் ஈடுபடுதற்கிடையிலும் நாம் கடவுளை மறந்துவிடலாகாது. நீ உலகக் கிருத்தியங்களைச் செய்யவேண்டுமெனின் இறைவனது திருவடியை ஒரு கையில் பிடித்துக்கொண்டு மற்ெருரு கையில் உலகக் கிருத்தியங்களைச் செய். 'உனது செயல் முடிந்ததும் இரண்டு கைகளாலும் இறைவனது திருவடியைப் பற்றிப்பிடித்துக்கொள்' என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு. பூனைக்குட்டி தாய்ப்பூனையைச் சார்ந்திருப்பதைப்போல நாம் எப்போதும் இறைவனைச் சார்ந்திருக்கவேண்டும். ஏனெனில் ஆண்டவன் துணையின்றி நம்மால் எதுவும் செய்யமுடியாது. இறைவன் திட்டத்திற்கு மாருன எண்ணம் சிலசமயம் நம்மிடம்

உண்டாகலாம். நாம் நினைப்பதுபோல் எதுவும் நடப்பதில்லை. அனைத்தும் ஆண்டவன் இச்சைப்படியே நடக்கிறது. யாண்டும் அவனைச் சார்ந்திருந்து அவன் கையில் கருவியாய் இருப்போமாக.

அன்றாடம் செய்கின்ற ஆத்மசாதனைகளை நாம் விட்டுவிடலாகாது. தவிர்க்க முடியாத காரணம் இருந்தாலொழிய தினசரி ஜபதபங்களை நிறுத்தி விடலாகாது. மனச்சலிப்பினாலோ, சோம்பலினாலோ சாதனத்தைச் செய்யாது விடுவோமானால் அது நமது முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகும். சாதகனுக்கு ஆர்வமிருக்க வேண்டும். தியானத்திலும் ஜபதபங்களிலும் ஒருவன் இன்பம் கண்டு விடுவானாயின் பின்னர் அவைகளை அவன் ஒருபொழுதும் விடமாட்டான். வயிற்றுக்கு உணவு தராது ஒருவேளை பட்டினிபோடுவது உடலுக்கு நலந்தருவதாக அமையும். ஆனால், ஆன்மாவை ஒருபொழுதும் பட்டினிபோட்டு விடலாகாது. ஆன்மாவைப் பட்டினிபோடுவது குற்றம் என்பதையும், அதனால் விளைகின்ற நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது என்பதையும் சாதகன் உணரவேண்டும். தவறு செய்வது மனித இயல்பு. குற்றம் குறையே அற்ற பரிபூரண மனிதன் யாரும் இல்லையென்று துணிந்து கூறலாம். குறையுடையவன் தான் மனிதன்; குற்றம் குறையே அற்றவன் இறைவன் ஒருவன்தான். மனிதன் தன்னிடத்துள்ள குறைகளைப் போக்க இடையறாது முயல வேண்டும். நிறைபொருளாகிய இறைவனை நினைக்க நினைக்க அவனது நிறைவுடைமையைச் சிந்திக்கச் சிந்திக்க நாமும் நிறையுடையவர்களாக மாறியமைவோம். நமது சிந்தனைகள், பேச்சுக்கள், செயல்கள் அனைத்தும் நம்மை இறைவனோடு இணைத்துவைப்பதாய் இருக்கவேண்டும். ஆத்ம ஞானத்தை அளிக்கக்கூடியதாக நமது அன்றாட கிருத்தியங்களை நாம் அமைத்துக்கொள்ள வேண்டும். நமது மனதை மாசுபடுத்தக்கூடிய எந்தச் செயல்களிலும் நாம் ஈடுபடலாகாது. உள்ளம் உடல் ஆகிய இரண்டின் மூலம் நிகழுகின்ற செயல்கள் அனைத்தையும் நாம் ஒழுங்குபடுத்தவேண்டும். சாதனைக்கு இவ்விரண்டின் துணையும் இன்றியமையாதது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும். உடல் நலமுடன் இருந்தால்தான் சாதனையில் ஆழ்ந்துஈடுபடமுடியும். உடல் நலத்துடன் இருக்கும் பலருக்கு மன நலம் இராது. மனம் உடல் ஆகிய இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. உடல்நலக் குறைவு மனநலத்தைப் பாதிக்கிறது. அதைப் போலவே மனநலமிழந்தவன் வெறும் இரண்டுகால் மிருகமாய்ப் போய்விடுகிறான். ஆதலால் உடலையும் உள்ளத்தையும் யாண்டும் தூய்மையாயும், உறுதிமிக்கதாயும் வைத்திருக்கவேண்டும்.

நீ எப்போதும் இறையுணர்விலேயே திளைத்திரு. உனது மனதை யாண்டும் இறைவனது திருவடித்தாமரையிலேயே புதைந்து கிடக்கச் செய். உலகவிஷயங்களில் கருத்துச் செலுத்தாது யாண்டும் உள்நோக்கிலேயே மனம் ஈடுபட்டிருக்க வேண்டும். யாண்டும் நாவானது இறைவனது நாமத்தை ஓதவேண்டும். 'நற்றவா, உன்னை நான் மறக்கினும்சொல்லு நா நமச்சிவாயவே' என்பது கோட்பாடு. காலையும், மாலையும் தியானம்புரிவதைவிட்டுவிடலாகாது. காலை, மாலை இரண்டுவேளைகளிலும் இயற்கை அமைதியே வடிவெடுத்ததாக இருக்கிறது. அந்நேரத்தை ஆத்மசாதனத்திற்கென்றே ஒதுக்கிவிடவேண்டும். அதிகாலையில் எழுந்திருப்பது ஒரு நல்லபழக்கம். 'வைகறையில் துயில்எழு' என்பது கோட்பாடு. வாழ்க்கையில் முன்னேற்றமடைய விரும்புகிற அனைவரும் அதிகாலையில் எழுந்திருத்து பழகவேண்டும். அதிகாலை நேரம் பிராம்ம முகூர்த்தம் எனப்படுகின்றது. அந்நேரத்தில் ஆத்ம சாதனைகள் புரிந்தால் சாதனத்தில் நன்கு முன்னேற்றமடையலாம். சாதகன் நேரத்தைத் திட்டம் வகுத்துச் செலவிடவேண்டும். ஒவ்வொரு நாளும் இறை வழிபாட்டுக்குப் பின் மற்றகாரியங்களைத் துவங்கவேண்டும். இரவில் படுக்கைக்குப் போகும்போது அன்று காலைமுதல் மாலைவரை நினைத்தது, பேசியது, செய்தது ஆகிய அனைத்தையும் நினைவுகூர்ந்து பார். தவறுகள், குற்றங்குறைகள் ஏதேனும் அன்று நீ செய்திருப்பாயாயின் மேலும் அத்தவறு நிகழாதிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள். உனது நினைவு, பேச்சு, செயல் அனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்

பணித்துவிடு. இறைவனுக்குச் சமர்ப்பிக்கத் தகாத எதையும் மனம், மொழி, மெய்யால் செய்யாதே. மனதை நல்வழிப்படுத்த இடையருது முயற்சி செய். உள்ளத்திலெழுகின்ற ஆசாபாசங்களை அழித்தொழிக்க ஓயாது போராடு. உடலையும் உள்ளத்தையும் உன்வசப் படுத்திக் கொள். உனது அனுமதியின்றி உடலோ உள்ளமோ செயல்புரியாவண்ணம் உனது கட்டுப்பாட்டிற்குள் உட்படுத்தி வை. சுவைப்புலனை அடக்கு. நாவடக்கம் ஆத்ம சாதகனுக்கு இன்றியமையாதது.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பது மறைமொழி. நாவடக்கம் கை கூடி விடின் மற்றப் புலன்களும் எளிதில் வசப்பட்டு விடும். பின்னர், சரீர இச்சைகள் அனைத்தையும் எளிதில் நீ வென்றுவிடுவாய். பின்னர் காமம்என்பது உன்னிடத்து அறவே இல்லாது போய்விடும். சோம்பேறித்தனத்தினுல் தூண்டப்பட்டுக் காலத்தை ஒருநாளும் வீணுக்காதே. அதேபோன்று வீண் பேச்சுப் பேசுவதும் கூடாது. எப்பொழுதும் நல்ல வினையில் ஈடுபட்ட வண்ணமாய் இரு. தியானம் அல்லது பிரார்த்தனை செய். ஆத்மீக சம்பந்தமான நூல்களை வாசி; அல்லது கட்டுரைகள் எழுதிப் பழகு. வழிபாட்டில் ஈடுபடு; அல்லது மக்களுக்கு நலன் தரக்கூடிய தொண்டில் ஈடுபடு. சுருங்கக் கூறின் நாள் முழுதும் ஏதாவது சத் காரியங்களில் ஈடுபட்ட வண்ணமாய் இரு. அதுவே மனதை ஒரு வழிப்படுத்துவதற்கு உற்ற உபாயமாகும்.

நீ செய்கின்ற ஆத்மசாதனையை அனைவரும் அறியும் வண்ணம் செய்யாதே. ஆத்மசாதனைகளைத் தனியிடத்தில் செய்வதுதான் நல்லது. சாதனைக்கு ஏற்ற இடம் ஏகாந்தம்தான். ஜன நெருக்கம் நிறைந்த இடமோ கூச்சல் நிறைந்த இடமோ சாதனைக்கு ஏற்றதல்ல. பகட்டுக்காகச் சாதனை புரியலாகாது. அந்தரங்க சுத்தியுடன் ஆத்ம சாதனைகளில் ஈடுபட வேண்டும். ஆன்மீக வாழ்வில் விளம்பரம் என்பது அறவே புறக்கணிக்கத்தக்கது. செயலில் உயர்வு தாழ்வு என்பது இல்லை. நீ எதைச் செய்தாலும் ஆண்டவனுக்காகச் செய். நீ செய்யவேண்டிய பொதுநலப் பணியிருப்பின் அதைப் புறக்கணித்து விட்டு உனது சொந்தச் செயலில் ஈடுபட்டுவிடாதே. யாண்டும் பொது நலத்தை முன்னணியிலும், தன்னலத்தைப் பின்னணியிலும் வைக்கவேண்டும். முழு மனதோடு பொதுநலப்பணி புரிந்தபின் எஞ்சியிருக்கும் நேரத்தில் உனது தனி நலக் காரியங்களில் ஈடுபடு. தன்னலம் பொதுநலத்துள் அடங்கும் என்பதை மறந்துவிடவேண்டாம். உன்னைப் போன்றே அனைவரும் வினையாற்ற வேண்டும் என்று எண்ணுதே. உன்னைப் போன்றே அனைவரும் வாழவேண்டும் என்றும் விரும்பாதே. மானுடர் பல்வேறு இயல் புடையவராய் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் அவரவர் இயல்பிற்கேற்பத் தங்கள் வாழ்வையும் செயலையும் அமைத்துக்கொள்கின்றனர். ஆதலால் வீணுகப் பிறரது வாழ்விலும் செயலிலும் தலையிடுதல் ஆத்ம சாதகனுக்குத் தகாது. மற்றவர் எந்நிலையில் இருக்கின்றனரோ அந்நிலையிலிருந்து ஒருபடி மேலே செல்ல அவர்களுக்கு உன்னுலான உதவியைச் செய். வெறிகொண்ட பாங்கில் பிறரிடத்து எதையும் வலிந்து திணிக்க முற்படாதே. இதை நினைவில் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

சிவராத்திரி, ஏகாதசி போன்ற புனிதநாட்களிலும், சான்ரோர்களின் ஜன்மதினங்களிலும் மிக்க சிரத்தையோடு ஆத்ம சாதனையில் ஈடுபடு. மானுட வாழ்வு அநித்திய மானது. மனிதன் எந்த க்ஷணத்திலும் மரணத்திற்கு உட்படலாம். ஆதலால் ஆண்டவனை அடைதற்கு அவன் தீவிரமாக முயல வேண்டும். தாயைப் பிரிந்த சேய் கதறி அழுவது போன்று சாதகன் ஆண்டவனின் பொருட்டுக் கதறியழவேண்டும். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்பது கோட்பாடு. "மானுடர் பொன்னுக்கும் பொருளுக்கும் பெண்டு பிள்ளைகளுக்குமாகக் குடம் குடமாகக் கண்ணீர்விட்டுக் கண்ணீர்க் கடலில் நீந்துகின்றனர். ஆனல் ஆண்டவன் பொருட்டுக் கண்ணீர் விடுவார் யார்?" என்கிருர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். ஆதலால் சாதகன் ஆண்டவனுக்காக அழ வேண்டும். ஏனெனில் அழுதால் அவரை அடையலாம் என்பதில் ஐயமில்லை.

நம்மிடத்து நலம் கேடு இரண்டும் கலந்திருக்கின்றன. நமது இதயத்தில் ஆசாபாசங்கள்

பல நிறைந்து கிடக்கின்றன. நமது மனம் விட்டு ஈயைப் போன்று இருக்கின்றது. வீட்டு ஈ சில வேளை மலரின்மீது உட்கார்ந்திருக்கும். ஆனல் அடுத்த க்ஷணமே அசுத்தமான மலத்தின்மீது உட்காரும். ஆனல் தேன் ஈ தூய்மையான மலரைத் தவிர அசுத்தமான பொருட்கள் எதன்மீதும் உட்காராது. நமது மனத்தைத் தேன் ஈ போன்றதாக்கவேண்டும். தூயதையே நாடுமாறு அதைப் பயிற்றுவிக்கவேண்டும். அதைக் கடவுள் உறையும் கோயிலாக்கி விட வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவன் அங்குக் குடியிருப்பான். கற்புடைய மாது தன் கணவனது வருகைக்காகக் கதவை திறந்து வைத்துக்கொண்டு ஆவலோடு காத்திருப்பதைப் போன்று ஆண்டவனது வருகைக்காக நமது இதயக்கோவிலின் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருக்க வேண்டும். நமது வீட்டுக்கு வருகிற விருந்ினரை அன்பினேடும், ஆர்வத்தினேடும் வரவேற்கிறேம். இல்லையேல் விருந்தினர் மனம் நொந்து திரும்பிப் போய் விடுவார்.

"மோப்பக் குழையும் அனிச்சம்முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்பது மறைமொழி. இறைவன் மென்மையான இதயம் படைத்த விருந்தினரைப் போன்றவர். நமது இதயத்தில் வேறு எதற்கும் இடங்கொடுத்து விடக்கூடாது. முழுமனதோடு அவரை நாம் நேசிக்கவேண்டும். எஜமானன் வரும்பொழுது விழித்திருக்கும் வேலைக்காரன் எவனே, அவனே பாக்கியவான். ஏனெனில் தனது சொத்து முழுமைக்கும் அவனைச் சொந்தக்காரனக்கிக் கொள்வான் என்பது இயேசுநாதர் வாக்கு.

மானுட மனத்தை ஒரு போர்க்களத்தினேடு ஒப்பிடலாம். மனிதனது மனத்தகத்து நன்மைக்கும் தீமைக்கும் ஓயாத போராட்டம் நடந்த வண்ணமாய் இருக்கின்றது. தீமையைத் தகர்த்து நலத்தை நிலைநாட்டுவதுதான் மனித வாழ்க்கையின் லக்ஷியம். இந்த லக்ஷியத்தை அடைவதற்காகத்தான் மனிதன் எத்துணை எத்துணையோ பிறவிகளை எடுத்து எத்துணை எத்துணையோ வாழ்க்கை முறைகளைக் கைக்கொள்ளுகின்றுன். பந்தபாசங்கள் அனைத்தினின்றும் விடுபட்டுப் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதற்காகச் சிலர் துறவை மேற்கொள்கின்றனர். மக்களுள் பெரும்பாலோர் இல்லற வாழ்வையே மேற்கொள்கின்றனர். வாழ்க்கையில் எந்த நிலையில் இருப்பவரும் பெருநிலை அடையலாம்.

துறவியடைகின்ற பெரு நிலையை வாழ்வாங்கு வாழ்ந்தால் இல்லறத்தானும் அடையலாம். பாரமார்த்திக வாழ்வென்பது யாரோ ஒரு சிலரது தனியுரிமையன்று. அது மாந்தர் அனைவர்க்கும் பொதுவானது. பாரமார்த்திக வாழ்வில் முறையாக ஈடுபடுவோர் தங்களைப் பெருநிலைக்கு உயர்த்திக்கொள்ளலாம். சிரத்தையோடு சாதனையில் ஈடுபடுகிறவர்கள் தங்களை ஆன்மீக வாழ்வுக்குத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ளலாம். சாதகன் காலையும் மாலையும் முறையாகச் சாதனைகளைச் செய்து வரவேண்டும். ஜபதபங்களில் ஆர்வத்தோடு ஈடுபடவேண்டும். தனிமையில் இருந்து தியானம் புரிந்து பழகவேண்டும். இவையெல்லாம் ஆரம்பத்தில் கஷ்டமாகத் தோன்றும். ஆனல் நாட்கள் செல்லச் செல்ல சொல்ல முடியாத ஆனந்தம் அவற்றினின்று நமக்கு உண்டாகும்.

"துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்பது மறைமொழி. ஆதலால் முடிவில் நமக்குப் பேரானந்தத்தை நல்கக்கூடிய பெருநெறியைச் சிரத்தையோடு பின்பற்றி வர வேண்டும். நாம் செய்கின்ற செயலனைத்தும் ஆண்டவனுக்குரியது என்பதை நினைவில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு செயலையும் சிரத்தையோடு செய்து வரவேண்டும். செயலின் பயனையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விடவேண்டும். "சிறு காரியங்களை அலக்ஷியப்படுத்துபவன் சிறிது சிறிதாய் விழுந்து விடுவான்" என்பது கோட்பாடு. ஆதலால், பாரமார்த்திக வாழ்வில் ஈடுபடும் சாதகனெருவன் யாண்டும் விழிப்புடன் இருக்க வேண்டும். விழிப்பே வெற்றிதரும் என்பதை யாண்டும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். "எழுமின், விழிமின்,குறிசாரும் வரை நில்லாது உழைமின்" என்று நம்மை ஊக்குவிக்கின்றுர் சுவாமி விவேகானந்தர்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-104

630. त्र्यक्षरी த்ர்யக்ஷரீ —மூன்று எழுத்து மயமாயிருப்பவள் என்பது இதன் பொருள்.

மூன்று எழுத்துக்கள் வாகீஸ்வரிக்கும், காமேஸிக்கும், சிவரூபிணிக்கும் பீஜமந்த்ரமாயிருக்கும் எழுத்துக்களைக் குறிக்கின்றன. இவைகள் முறையே ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி மயமாயிருக்கின்றன. இந்த மூன்று சக்திகளிலே முன்னேற்றமடைய ஜீவ கோடிகள் அத்தனையும் முயன்று வருகின்றன. ஞானத்தைப் பெருக்குதல் உயிர்கள் அத்தனைக்கும் பொதுவானது. அந்தந்த உயிர் அதனதன் துறையில் அறிவை வளர்க்க முயலுகிறது. மான் ஒன்று மோப்பத்தால் சிங்கம், புலி இருக்கிற இடங்களை அறிந்து கொள்கிறது. அதன் பிறகு அந்த இடங்களினின்று வெகுதூரம் விலகியிருக்க அது முயலுகிறது. அத்தகைய முயற்சி அதனிடத்துள்ள கிரியா சக்தியாகிறது. தன் உயிரினிடத்து அது பற்று வைத்திருக்கிறது. அப்படிப் பற்று வைத்திருப்பது மானினிடத்துள்ள இச்சா சக்தியாகிறது. இதே கோட்பாடு பறவைகளிடத்திலும் இருக்கிறது. இரைதேடிக் கொண்டிருக்கிற பறவைகள் கண்ணி வைத்திருக்கும் இடங்களுக்குப் போகமாட்டா. அது ஆபத்துக் கேதுவானது என்னும் ஞானசக்தி அவைகளிடத்துள்ளது. அந்த ஞானசக்தியை இன்னும் நன்கு வளர்க்க அவை மேலும் முயலுகின்றன. இரை அகப்படக் கூடிய இடங்களுக்கு அவைகள் வெகுதூரம் பறந்துபோகின்றன. அது அவைகளிடத்திலுள்ள கிரியாசக்தி ஆகிறது. உயிர்ப் பற்றுவைப்பது பறவைகளிடத்திலும் உண்டு. வசித்திருப்பதற்கு வசதியான இடத்தைப்பறவைகள் விரும்புகின்றன. உயிர்ப் பற்றும், இடப்பற்றும், பறவைகளிடத்திலுள்ள இச்சாசக்தி ஆகிறது. இந்த மூன்று சக்திகளை வளர்ப்பதில் உயிர்வகைகளுக்கிடையில் மனிதன் முதலிடம் பெறுகிறான். அறிவை வளர்ப்பதில் மனிதன் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். வெவ்வேறு துறைகளில் அறிவு வெவ்வேறு வடிவு எடுக்கிறது. தனக்குகந்த துறையில் அறிவை வளர்ப்பதில் மனிதன் நிபுணன் ஆகிறான். அது அவனிடத்துள்ள ஞான சக்தி ஆகிறது. செயற்கரிய செயல்களைச் சாதிக்கவல்லவன் மனிதன். பஞ்சபூதங்களையும் தன் வசதிக்காக வென்று அவன் அடக்கி ஆளுகின்றான். ஆதலால் கிரியாசக்தி சொரூபிணியாக இருக்கின்ற அம்பிகையினுடைய சாந்நித்தியத்தை மானுட சமூகத்தின்கண் சிறப்பாகக் காணலாம். அன்பை வளர்க்கும் திறமை மனிதனிடத்து ஏராளமாக அமைந்திருக்கிறது. உயிர்வகைகளிடத்தும் பஞ்சபூதங்களிடத்தும் அவன் தன் அன்பைச் செலுத்த வல்லவனாயிருக்கிறான். இவைகளுக்கெல்லாம் மேலாக தெய்வபக்தி என்னும் பேரன்பு மனிதனிடத்தே சிறப்பாகத் திகழ்கிறது. ஆதலால் அம்பிகையின் சொரூபமாகிய இச்சாசக்திக்கு விளக்கமாகப் பிரபஞ்சத்திலுள்ள உயிர்வகைகளனைத்தும் விளங்குவதற்கிடையில் மனிதனிடத்தே அது உச்சநிலை எய்தியுள்ளது. அக்காரணத்தை முன்னிட்டும் த்ர்யக்ஷரி மயமாயுள்ள அம்பிகையினுடைய சாந்நித்தியத்தை ஜனசமூகத்துக்கிடையில் காணலாம்.

631. दिव्यगन्धाढ्या திவ்யகந்தாட்யா—தெய்விகமயமான நறுமணத்தை நிறை நிலையில் உடைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சத்தில் அனைத்துமாய் அமைந்திருப்பவள் அம்பிகை. சேதனம், அசேதனமாயுள்ள பொருள்வகைகளுக்கிடையில் சேதனப் பொருளில் ஒரு சிறப்பு உண்டு. அது பரிபூர்ண நிலையை எய்துங்கால் அச்சேதனவஸ்து தன்னிடத்திருந்து நறுமணம் கமழுமாறு செய்கிறது. இதில் உச்சநிலையடைந்திருப்பது ஸ்தாவர உலகம். மரம், செடி, கொடிகள் வளர்ச்சியில் உச்சநிலையடையும் பொழுது சுகந்தத்தை, அல்லது நறுமணத்தை அவைகள் அக்கம்பக்கமாகிய சூழ்நிலையில் பரப்புகின்றன. அந்த நறுமணமே அம்பிகையின் சாந்நித்யத்துக்குச் சான்றாகிறது. புஷ்பத்தில் கந்தமாக நான் இருக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா பரவஸ்துவின் விபூதியைப்பற்றிப் பகர்கிறார். அத்தகைய புஷ்பங்களைக் கொண்டே நாம் பெரிதும் தேவாராதனை

பண்ணுகின்றோம். தெய்வத்தின் சாந்நித்யத்துக்குப் பூவிலுள்ள நறுமணமே சான்றாகிறது. பிறகு உயிர்வகைகளுள் பூரண நிலை எட்டியுள்ள புனுகுபூனை, கஸ்தூரிமான் முதலியவைகள் தங்கள் மேனியினின்று நறுமணத்தை வெளிப்படுத்துகின்றன. அவைகளுள் அம்பிகையின் சாந்நித்யத்துக்கு அறிகுறியாகஅந்த வாசனைத்திரவியங்களே அமைந்திருக்கின்றன. இனி ஒவ்வொரு மனிதரிடத்தும் ஒருவித மணம் கமழுகிறது. இந்த மணங்களுள் சீரிய நல்வாழ்வு வாழுகின்றவர்களிடத்துப்பாராட்டுதற்குரிய நறுமணம் தோன்றுகிறது. மன அமைப்பில் மட்டமாயிருப்பவர்களிடத்து துர்நாற்றம் கமழுகிறது. நல்ல யோகிகளிடத்து சுகந்தம் கமழுவதை நாம் நன்கு நுகரலாம். saint's fragrance என்று ஆங்கில மொழியில் இச்சிறப்பு இடம் பெற்றிருக்கிறது. ஆக சேதனமாயுள்ள பல்லுயிர்வகைகளுக்கிடையில் எவைகளிடத்தெல்லாம் நறுமணம் கமழுகிறதோ, அவைகளிடத்தெல்லாம் அம்பிகையின் சாந்நித்யம் சிறப்பாக அமைந்திருக்கிறது என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

தேவலோகத்துக்குரிய ஹரிச்சந்தனம் போன்றவற்றினுடைய பரிமளம் அம்பிகையினிடத்துக் கமழுகிறது என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது. யோகத்தில் பக்குவமடைந்து வருகிறவர்களுக்கு இந்திரியங்களின் ஆற்றல் பன்மடங்கு அதிகரிக்கிறது. சூழ்நிலையில் மற்றவர்கள் நுகராத தெய்விக பரிமளத்தை யோகிகள் நுகருகிறார்கள். அத்தகைய நறுமணமும் அம்பிகையின் சாந்நித்யத்துக்கு அத்தாட்சியாகிறது.

632. सिन्दूरतिलकाञ्चिता சிந்தூரதிலகாஞ்சிதா—சிந்தூரத்தினால் இடப்பட்ட திலகத்தைக்கொண்டு அலங்கரிக்கப்பட்டவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ரத்தநிறமாயுள்ள குங்குமம் கோரோசனை போன்ற நறுமணம் ஏற்றப்பெற்றதாயிருக்கிறது. ஆதலால் அதற்குச் சிந்தூரம் என்று பெயர். அம்பிகை தன் நெற்றியிலே சிவப்பு குங்குமத்தை வட்டமாக அணிந்திருக்கின்றாள். ஆதலால் அது அவளுக்கு அலங்காரமாக அமைந்திருக்கிறது. அந்த அமைப்பின் வாயிலாக உலகுக்குப் பாடம் ஒன்று புகட்டப்படுகிறது. எங்கெல்லாம் அழகு மிளிர்கிறதோ ஆங்கெல்லாம் அம்பிகையின் சாந்நித்தியம் சிறப்புற்று நிறைந்திருக்கிறது. இயற்கையாக அமைந்துள்ள அழகுக்குச் செயற்கை அழகையும் முறையாகச் சேர்க்கலாம். அப்படி அழகை அதிகப்படுத்துவதே ஒருவித வழிபாடு ஆகிறது. தெய்வத்தின் சின்னங்களாக விக்ரஹங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விக்ரஹங்கள் தம் அளவில் அழகு நிறைந்தவைகளாக இருக்க வேண்டும். அப்படி அமைந்திருக்கும் அழகுக்கு சந்தனம், திலகம் போன்ற புறப்பொருட்களைத் தீட்டி அவைகளை மேலும் அலங்கரிக்கலாம். அப்படி அலங்கரிப்பது வழிபாட்டுக்கு நல்ல துணைபுரிகிறது. இக்கோட்பாட்டையும் அம்பிகை தன் நெற்றியிலே சிந்தூர திலகத்தை அணிந்திருப்பதன் வாயிலாக உலகுக்குப் பாடம் புகட்டுகிறாள். மக்களுள் கலைகளில் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறவர்களுக்குத் தாங்கள் குடியிருக்கும் வீட்டை நன்கு அலங்கரிக்கத் தெரியும். தாங்கள் அமைத்திருக்கும் பூந்தோட்டங்களை அழகுற அமைக்க அவர்கள் வல்லவர்களாகிறார்கள். ஆடை ஆபரணங்களை அணிவதிலும் அழகை மேலும் மேம்படுத்த அவர்களுக்குத் தெரியும்.இங்ஙனம் அழகை நன்கு புலப்படுத்துவதே ஒருவிதத்தில் தெய்வ வழிபாடு ஆகிறது. இக்கோட்பாடு சிந்தூர திலகாஞ்சிதா என்னும் நாமத்தில் அடங்கியிருக்கிறது.

சிந்தூர திலகம் என்னும் சொல் பெண்பாலர்களைக் குறிக்கிறது. பெண்பாலர்களால் நன்கு போற்றப்படுபவள் என்னும் கருத்தும் இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

633. उमा உமா—உமா என்னும்பெயரை உடையவள் என்பது இதன் பொருள்.

அம்பிகை படைத்துள்ள பலப்பல நாமங்களுள் இந்த நாமத்தின்கண் போற்றுதற்குரிய மகிமை பொலிகிறது. உமா என்னும் சொல் தமிழில் உமை எனத் திரிவுபடுகிறது. இந்த நாமத்தை மூலத்தில் உள்ளபடி வைத்துக்கொண்டால் இது ஓங்கார சொரூபமாக மிளிர்கிறது. அகர உகர மகரத்தில் அகாரம் மகாரத்தின் பின் வருகிறது. அப்பொழுது அது

உமா என அமைகிறது. உமா என்று உச்சரிக்கிற பொழுது அது தேவிக்குரிய பிரணவமாகிறது. பிரணவ உச்சாரணை பண்ணுகிறவர்கள் உமா என்று உச்சரித்து வந்தாலும் அது பிரணவ உச்சாரணையாகிறது. பிரணவத்தின் கோட்பாடுகளனைத்தும் உமா என்னும் மந்திரத்தில் அடங்கியிருக்கின்றன.

உ என்னும் அட்சரம் சிவ சொருபத்தைக் குறிக்கிறது. மா என்னும் அட்சரம் லட்சுமியைக் குறிக்கிறது. ஆதலால் உமா என்று நாம் அம்பிகையை அழைக்கின்ற பொழுது சிவனிடத்து அமைந்துள்ள லட்சுமிகரத்தைக் குறிக்கிறது. உமையை முன்னிட்டே சிவனர் சுந்தரேஸ்வரன் என்னும்பெயரைப்பெறுகிறார். சிவம் என்னும் சொல்லுக்கு மங்களம் என்பது பொருள். இந்த மங்களமாக இலங்குவது அம்பிகை. ஆதலால் உமா மகேஸ்வரன் என்று சொல்லும் பொழுது எல்லா மகிமைகளோடும்கூடிய பரம்பொருள் என்பதாகிறது.

தவத்தின் வாயிலாகத் தங்களுடைய உள்ளத்தைப் பரிசுத்தப் படுத்துகிறவர்களிடத்து மேலான எண்ணங்களே சர்வகாலமும் உதிக்கின்றன. தவத்தின் மூலம் தூயசம்ஸ்காரங்களை உண்டாக்கினல் அவை மேலாம் எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. அத்தகைய போற்றுதற்குரிய மேலான எண்ணங்கள் மயமாக இருப்பவள் அம்பிகை என்னும் கோட்பாட்டை உமா என்னும் நாமம் விளக்குகிறது.

வித்தைகளுள் தலையாய வித்தையாயிருப்பது பிரம்ம வித்தை. அம்பிகை ஹிமவானுக்கு மகளாக அவதரித்தாள். அப்படி அவதரித்தவள் பிரம்ம வித்யா மயமாகக் காட்சி கொடுத்தாள். ஆதலால் அவள் உமா என்னும் நாமத்தைப் பெற்ருள். அந்த நாமம் சக்தி உபாசனைக்குரிய பிரணவமாக அமைந்திருக்கிறது. இப்பிரணவ உச்சரிப்பே பிரம்ம ஞானத்தை உண்டுபண்ண வல்லது.

சுத்த சிவம் தூய மனதுக்கும் எட்டாத பரவஸ்துவாயிருக்கிறது. அத்தகைய பரவஸ்துவை நிர்க்குண பிரம்மம் என்கின்ருேம். நிர்க்குண பிரம்மமே சகுண பிரம்மமாகவும் இலங்குகிறது. அப்படி இலங்குதற்கு ஏதுவாயிருப்பவள் உமா தேவி. சகுண பிரம்மத்திடத்துள்ள விபூதிகள் அனைத்தும் சுத்த மனதுக்கு எட்டக்கூடியவைகளாயிருக்கின்றன. உமாதேவியின் அருளால் சாதகர்களுக்கு அது சாத்தியமாகிறது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். நிறமற்ற சூரிய கிரணம் வெட்ட வெளியில் பாய்கிறது. அது வானத்திலுள்ள நீர்த்திவலைகள் வாயிலாகப் பாயும் பொழுது ஏழு நிறங்களாகச் சிதறடைந்து வானவில்லாகத் தோன்றுகிறது. நிறமற்ற வெளிச்சம் கட்புலனுகின்ற ஏழு நிறங்களாகப் புலப்படுவதற்குக் காரணமாயிருப்பது வானத்தில் நிறைந்துள்ள நீர்த்திவலை ஆகிறது. அங்ஙனம் அம்பிகையின் அருளால் கருவி கரணங்களுக்கு எட்டாத பரசிவம் உமாமகேஸ்வரனுக இலங்குகிறபொழுது சுத்த மனது படைத்துள்ள ஆத்ம சாதகர்களுக்கு அந்த மகிமைகளனைத்தும் அனுபூதிக்கு எட்டுகின்றன. அதற்குக் காரணமாயிருப்பவள் உமா தேவி. இக்கோட்பாட்டை சிதம்பரம் கோவிலிலும், சின்னத்தின் மூலமாக அமைத்திருக்கிருர்கள்.

அம்பிகை ஹிமவானுடைய புதல்வியாக அவதரித்தபொழுது அவள் ஹைமாவதி என்னும் பெயர் பெற்றிருந்தாள். அப்பெயர் பெற்றவள் ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டாள். எக்காரணத்தை முன்னிட்டாவது தன் குழந்தை அதிக சிரமம் எடுத்துக்கொண்டால் அப்படிச் சிரமம் எடுக்கவேண்டாம் என்று பெற்றதாய் பகருகிருள். ஹைமாவதியின் தாய் ஓர் உபாயத்தைக் கையாண்டாள். உ என்னும் அட்சரத்தை உச்சரித்துத் தன் செல்வியின் கவனத்தைத் தன்பால் திருப்பினள். அப்படித் திருப்பிய பிறகு மா என்னும் அட்சரத்தை உச்சரித்தாள். மா என்னும் அட்சரம் வேண்டாம் எனப்பொருள்படுகிறது. தவம் புரிவது நல்லது. ஆனல் கடுந்தவத்தே ஆழ்ந்து மூழ்க வேண்டாம் என்று தாய் சொன்னதினல் செல்விக்கு உமா என்னும் பெயர் வந்தது.

உமா என்னும் நாமத்தில் அகர உகர மகரம் அடங்கியிருப்பதை ஏற்கனவே விளக்கினேம், இந்த மூன்று எழுத்துக்களும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளின் சின்னங்களாக விளங்குகின்றன. ஆதலால் உமாவதி தானே மும்மூர்த்திகள் மயமாக இலங்கிக்கொண்டிருக்கிருள்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (142) தங்களது பத்திரிகையான தர்மசக்கரம் மேலட்டையில் விஷ்ணுவின் பத்து அவதாரத்தில் புத்தர் சேர்க்கப்பட்டுப் பலராமர் விடப்பட்டு இருக்கிருர். இதன் விளக்கம் யாது?

தசாவதாரங்களை எங்கெந்த யுகங்களிலோ நிகழ்ந்தவைகளாகப் பொருள் படுத்துவது புராணங்களின் போக்கு ஆகும். ஆனல் சரித்திர பூர்வமாக உடல் தாங்கி உலகில் வாழ்ந்திருந்தவர்கள் மூன்று மூர்த்திகள் மட்டுமேயாம். அவர்கள் முறையே தசரதராமன், கிருஷ்ண பரமாத்மா, புத்தர் ஆகியவர்களாம். இனி, புராண வரலாறுகளையும், சரித்திர நிகழ்ச்சிகளையும் இணைத்துப் பொருள்படுத்திஞல் பரந்த வேதாந்தக் கோட்பாடு ஒன்று தெளிவுற வெளியாகும். அதாவது தசாவதாரங்கள் சர்வகாலமும் பிரபஞ்சத்தில் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. சரியாக ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் தசாவதாரங்கள் இப்பொழுதும் இம்மண்ணுலகிலேயே இருப்பது புலனுகும். பஞ்ச பூதங்களுள் நீர் உருவெடுக்கிறபொழுது அந்த நீரினுள் உயிர் வகைகள் தாமாகவே உருவெடுக்கின்றன. ஜீவகோடிகளின் தொகையாகிய பிரம்மதேவன் சுயம்பு அல்லது தானுகத் தோன்றியவன் என அழைக்கப்படுகிருன். அவனுடைய அம்சங்களாகிய ஜீவாத்மாக்களும் தாமாகத் தோன்றியவைகள் என்னும் கோட்பாட்டை நீரினுள் வடிவெடுக்கிற உயிர்வகைகள் நிரூபிக்கின்றன. நீரினுள் தோன்றி, நீரினுள்ளேயே வாழ்ந்திருக்கும் உயிர்வகைகளை மத்ஸ்ய அவதாரம் அல்லது மீனின் தோற்றம் எனப் புராணங்கள் விளக்குகின்றன. நீரினுள் தோன்றிய உயிர்வகைகள் பிறகு நிலத்துக்கு வர முயலுகின்றன. தவளை, நண்டு, முதலை, ஆமை, நீர்நாய் முதலியவைகளை இதற்குச் சான்ருக எடுத்துக்கொள்ளலாம். இவையாவையும் உருவகப்படுத்தி கூர்மாவதாரம் எனப் புராணம் பகருகிறது. நிலத்தில் வசித்து வருபவைகள் பூர்வ சம்ஸ்காரங்களை முன்னிட்டு அடிக்கடி நீரினுள்போய் அதில் கிடக்கவிரும்புகின்றன. அதற்குச் சான்ருகப்பன்றி, எருமை, நீர்யானை, யானை முதலியவைகளைச் சொல்லலாம். இவையாவையும்உருவகப்படுத்தி வராக அவதாரம் அல்லது பன்றியின் அவதாரம் எனப் புராணங்கள் பகருகின்றன. விலங்கு நிலையிலிருப்பவைகள் படிப்படியாக மானுட நிலையை எய்துகின்றன. இதற்குச் சான்ருக குரங்குகள், மனிதக் குரங்குகள் ஆகியவைகளை எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய நிலையை நரசிம்ம அவதாரம் உருவகப்படுத்தி விளக்குகிறது. நரன் என்ருல் மனிதன். சிம்மம் என்ருல் விலங்கு. விலங்கு படிப்படியாகப் பரிணமித்து மனிதனுகிறது. அத்தகைய மனிதன் ஆரம்பதசையில் வெறும் மானுட வடிவத்தை மட்டும் எடுத்திருக்கிருன். மானுடப் பண்பு இன்னும் உருவெடுக்கவில்லை. அது உருவகப்படுத்தி வாமனன் அல்லது குட்டை மனிதன் எனப் புராணம் பகருகிறது. நாளடைவில் அறிவில்லாதிருக்கும் மனிதன் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கிருன். ஆனல் அவனை விட்டு அகங்காரம், கொடூரத்தன்மை முதலியவைகள் இன்னும் போகவில்லை. அத்தகைய மானுட கூட்டத்துக்குப் பிரதிநிதியாயிருப்பவன் பரசுராமன். பிறகு பண்பட்ட மானுடனுகை அல்லது நரோத்தமனுகத் தசரத ராமன் அவதரிக்கிருன். அதற்குமேல் கிருஷ்ணவதாரத்தில் தோற்றத்தளவில் மனிதனுகத் தென்படுபவன் பரமாத்மனே என்னும் கோட்பாட்டை கிருஷ்ணன் விளக்குகிருன். புராணபூர்வமாக அது எட்டாவது அவதாரம். மனிதன் ஒருவன் முயற்சியால் பரமாத்ம சொரூபமாகத் திருந்தியமையலாம் என்னும் உண்மையைப் புத்தர் பெம்மான் தம்முடைய ஜீவிதத்தின் மூலமாக விளக்குகிருர். புத்தரை ஒன்பதாவது அவதாரமாக எடுத்துக்கொள்ளுவது ஒரு சம்பிரதாயம். க்ஷீணித்துப்போன புத்தமதத்தைப் புறக்கணித்தல் பொருட்டுப்புத்தரையே கணக்கில் எடுத்துக் கொள்ளாது அதற்குப் பதிலாகப் பலராமனை அந்த ஸ்தானத்தில் வைப்பது மற்ருெரு சம்பிரதாயம். ஆனல் பலராமனிடத்து மேலான பண்புகள் யாவும் அமையவில்லை. ஆதலால் தத்துவ விசாரத்தில் செல்லுகிறவர்கள் பலராமனை ஒரு அவதாரமாக எடுத்துக்

கொள்வதில்லை. பிரபஞ்சம் முழுவதும் பிரள யத்தில் ஒடுங்கிப்போகின்றன என்னும் கோட்பாடு உருவகப்படுத்தி கல்கி அவதாரம் என இயம்பப்படுகிறது. உயிர்வகைகள் தோன்றிப் படிப்படியாக மேல் நிலைக்கு வருவதற்குச் சான்றாக இயற்கையின் நிகழ்ச்சிகளே யாண்டும் இருந்து வருகின்றன. யுக்திக்கு ஒத்ததாகப் புத்தரை நாம் ஒன்பதாவது அவதாரமாக எடுத்துக்கொண்டோம். இக்கோட்பாடே தர்மசக்கரத்தின் அட்டையில் தசாவதாரங்களாக இடம்பெற்றிருக்கிறது. தசாவதாரங்கள் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பதற்கும் பிறகு நிறைமனிதன் ஆவதற்கும் கடைசியாகப் பரப்பிரம்ம சொரூபமாக யதார்த்த நிலைக்குப்போவதற்கும் சான்றுகளாக அமைந்திருக்கின்றன. இயற்கையிலே தசாவதாரங்களுக்குச் சான்றுகளை ஏககாலத்தில் காணலாம். அது இயற்கையின் மகிமையாகிறது.

கேள்வி: (143) ***அரக்கனைக் கீழே மிதித்துக்கொண்டு நடராஜர், ஆனந்தத்தாண்டவமாடும் படத்தினையும், இடதுகையிலே வேல் எடுத்துள்ள முருகன் படத்தினையும் வீட்டிலே வைத்துப் பூஜை செய்யலாகாது என்று சிலர் கூறுகின்றனர். இதற்கு விளக்கம் என்ன?***

நடராஜ மூர்த்தியின் ஒரு பாதம் முயலகன் என்னும் அரக்கன் மீது பட்டும்படாதிருப்பது அகங்காரத்தை அகற்றுதற்குச் சின்னமாய் அமைந்திருக்கிறது. மனிதனைக் கவர்ச்சிகரம் அல்லாதவனாகப் பண்ணுவது அவனிடமிருக்கிற அகங்காரமாகும். அகங்காரத்தில் கவர்ச்சிகரம் ஏதுமில்லை என்பதற்குச் சின்னமாக முயலகன் அமைந்திருக்கிறான். அகங்காரத்தை அகற்றுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை நடராஜ மூர்த்தி விளக்கிக்கொண்டிருக்கிறார். நடராஜ தத்துவத்தில் அமைந்திருக்கிற ஒவ்வொரு பகுதியும் மானுடன் பரிபூர்ண நிலையை எட்டுவதற்குச் சின்னமாக அமைந்திருக்கிறது. அகங்காரத்தை அகற்றுவது ஞான மார்க்கத்தின் முதல்படி ஆகிறது. மனிதனுடைய மனது எப்பொழுதும் தெய்விக எண்ணங்களிலேயே ஊறி இருக்கவேண்டும். மனிதனைப் பாழ்படுத்துகிற அல்ப எண்ணங்களுக்கு இடம் தரலாகாது என்னும் கோட்பாட்டை தூக்கியபாதம் விளக்குகிறது. ஆணவம் என்னும் புலியைக்கொன்று அதன் தோலை சிவனார் அணிந்திருப்பதின் வாயிலாக ஆத்ம சாதகர்களும் தங்களுடைய ஆணவமாகிய துஷ்டமிருகத்தை வெல்லவேண்டும் என்னும் கோட்பாட்டை விளக்குகிறார். இடக்கரம் ஒன்றில் சிவனார் தீயை ஏந்தியிருக்கிறார். ஞானக்னிக்குச் சின்னமாய் அமைந்திருப்பது தீ. பொருள்களைத் தீ பொசுக்குவதுபோன்று ஞானக்னி உலகப்பற்றை நாசமாக்குகிறது. அடுத்த இடக்கரத்தில் சிவனார் மானை ஏந்தியிருக்கிறார். அது அவர் முகத்தைப் பார்த்த வண்ணமாயிருக்கிறது. மனதுக்குச் சின்னமாயிருப்பது மான். கட்டிலடங்காத மனதை மனிதன் கட்டியாளவேண்டும் என்னும் கோட்பாட்டை இதன் வாயிலாகவிளக்குகிறார். வலக்கரம் ஒன்றில் அவர் உடுக்கையைப் பிடித்திருப்பது ஓசை முழுதுக்கும் பிறப்பிடம் பரம்பொருள் என்னும் உண்மையைவிளக்குகிறது. அடுத்தவலக்கரம் அவருடைய பாதத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது. மானுடா, நீ சதா சிவச் சிந்தனையில் ஈடுபடுவாயாகில் நீ சிவனை அடைவாய் என்னும் கோட்பாட்டை இக்கரத்தின் வாயிலாக விளக்குகிறார். அத்தகைய மூர்த்தியின் படத்தை வீட்டில் வைத்திருக்கலாகாது என்று இயம்புவது ஆத்மசாதகருடைய போக்கு ஆகாது. சிவபக்தர்கள் நடராஜ வடிவத்தை அவரவர் வீட்டில்வைத்து வணங்கி வருகின்றனர். அப்படி வணங்கி வருவதே முறையாகும்.

முருகன் தன் கையில் வேல் வைத்திருப்பது ஞானத்துக்குச் சின்னமாகிறது. தன் வேலைக் கையாண்டு முருகன் மக்களிடத்திலுள்ள அக்ஞானத்தைக் களைந்து ஞானத்தை நிலைநாட்டுகின்றான். ஆகையால்தான் வேல் ஆனது கதிர்வேல் எனப்போற்றப்பெறுகிறது. ஞான ஒளி அதனிடத்துப் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் அது கதிர்வேல் எனப் போற்றப்படுகிறது. கதிர்வேலவனை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்று சொல்லுகிறவர்கள் அக்ஞானத்தில் உழன்றுகொண்டிருக்க விரும்புகிறார்கள். அவர்கள் கூற்றுக்குச் செவி சாய்க்கலாகாது. தாராளமாக வேல் முருகன் படத்தை வீட்டில் வைத்து வணங்கலாம்.

ராமராஜ்யம்

(118ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களாகப் பிறந்திருக்கிறவர்கள் எல்லாருமே மனுஷத்தன்மையை அடையப்பெற்றவர்கள் அல்லர். மானுட வடிவெடுத்திருக்கும் ஜடப்பொருள் போன்று அறிவற்ற மக்களைக் காணலாம். வடிவத்தில் மானுடர்களாயிருப்பதற்கிடையில் பண்பாட்டில் பறவைகள், சாந்த மிருகங்கள், துஷ்ட மிருகங்கள் போன்றிருக்கும் மக்களைக் காணலாம். மக்களுக்கிடையில் சுய அறிவு படைத்தவர்கள் மிகச் சிலரே ஆவர். பெரும்பான்மையோர் சமுதாயப் பழக்க வழக்கங்களில் திருப்தியடைந்திருக்கிறார்கள். வயதில் பெரியவர்களானபிறகும் மனப்பான்மையில் சிறார் போன்றே ஏராளமானபேர்கள் இருக்கிறார்கள். ஆட்டு இடையன் ஆடுமாடுகளை விரும்பிய மைதானத்துக்கு ஓட்டுவது போன்று வாக்கு வன்மை வாய்க்கப்பெற்றவர்கள் மக்களுக்கிடையில் நலனையும் புகட்டலாம், தீமையையும் புகட்டலாம். ஆடல், பாடல்களில் திறமை வாய்ந்தவர்களைத் தெய்வம் போன்று பாராட்டுபவர்களும் சமுதாயத்தில் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலாக வெவ்வேறு இனங்களாக அமைந்துள்ள மக்களுள் இனத்துக்கேற்ற இயல்புகள் வாய்க்கப்பெற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அடுத்தபடியாக மாகாணத்துக்கேற்ற மனப்பான்மை மக்களுக்கிடையில் உண்டு. இத்தனை விதமான இயல்புகளை உள்ளபடி அறிந்துகொள்ளுதல் சான்றோருக்கே சாத்தியமாகிறது. இயல்பு வேற்றுமையைக் கண்டுபிடிக்க பொதுமக்களுக்கு இயலாது. சுருங்கச் சொல்லின் உயிர்வகைகளுள் ஜட நிலையினின்று பேரறிவு மயமான நிலைபரியந்தம் எல்லாவிதமான நிலைகளிலும் உயிர்வகைகள் இருக்கின்றன. இத்தனைவிதமான நிலைகளை அலாதியாக மக்கள் கூட்டத்திலும் காணலாம். மக்களாக வடிவெடுத்திருக்கும் எல்லாரும் மக்கள் ஆகமாட்டார்கள். பெரும்பாலோர் மாக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இது மானுடவர்க்கத்தைப் பற்றிய உண்மை.

இனி, நம் நாடு ஆகிய பரதகண்டத்தைப்பற்றிய உண்மை ஒன்று உண்டு. உலகிலே எந்தெந்தப்பகுதிகளில் என்னென்ன விதமான சீதோஷ்ண நிலைகள், என்னென்னவிதமான ஸ்தாவர ஜங்கமங்கள், என்னென்ன விதமான நில அமைப்பு இருக்கின்றனவோ அவை யாவும் இந்நாட்டிலே ஹிமாலயத்தில் உச்சி நிலையிலிருந்து தெற்கே குமரிமுனை பரியந்தம் உள்ள பகுதிகளில் அமைந்திருக்கின்றன. ஆதலால் நில அமைப்பிலே, வள அமைப்பிலே, பருவ அமைப்பிலே, மக்களின் பண்பாட்டு அமைப்பிலே இந்த நாடு நிலவுலக முழுவதுக்கும் நிகரானது.

பாங்கு வேற்றுமை இவ்வளவு பெரியதாயிருப்பதற்கிடையில் அண்மையில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் பிறகு வாய்த்துள்ள தேசிய அரசாங்கத்தில் மக்கள் எல்லார்க்கும் குடியரசு அமைப்பில் வாக்குரிமைகொடுத்திருக்கின்றனர். அந்தப் பாங்கில் கடந்த முப்பது வருஷங்களாக நம் நாடு பிரஜாபத்யம் அல்லது குடியரசு முறையைக் கையாண்டு வந்திருக்கிறது. நாட்டில் ஆறு தடவை தேர்தல்கள் நேர்ந்திருக்கின்றன. ஆட்சி முறையும், அரசியல் கட்சிகளிடத்து மாறி மாறி அமைந்து வந்திருக்கின்றன. இத்தகைய ஆட்சி முறையின் வாயிலாக நாடு முன்னேற்றமடைந்து வந்திருக்கிறதா என்பது பெரியதொரு கேள்வி. சரியான குடியரசு வாய்க்கப்பெற்றுள்ள நாடுகளில் அரசியல் கட்சிகள் பெரிதும் இரண்டுதான் இருந்து வருகின்றன. நம் நாட்டிலோ நாள் ஏற ஏற அரசியல் கட்சிகள் பலப்பலவாகப் பெருகிவருகின்றன. பலவிதமான நோக்கங்களை உடைய பலவிதமான அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று முரண்படுகிற பலவிதமான கருத்துக்களை மக்களுக்கிடையில் புகட்டிவருகின்றன. இதன் விளைவாக மக்களுக்கிடையிலும் பிளவுகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அரசியல் கொள்கைகளை முன்விட்டு ஒரு குடும்பத்துக்குள் பிளவுகள் இருக்கின்றன. ஒரு பள்ளிக்கூடத்தில் பிளவுகள் இருக்கின்றன. ஓர் ஊரில் பிளவுகள் இருக்கின்றன. ஒவ்வோர் வட்டாரத்திலும் பிளவு

கள் அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு மாகாணமும் அக்கம்பக்கத்திலுள்ள மாகாணங்களினின்று பிளவுபட்டு வருகின்றன. படிப்படியாகப் பிளவுபட்டுப் போவதே கைகண்ட பலனாக அமைந்திருக்கிறது.

மக்களுள் பெரும்பான்மையோர் பொருளாதாரத் துறையில் மிகக் கீழ்நிலையிலிருக்கின்றனர். வறுமைநோய் அவர்களை வாட்டுகிறது. அரசியல் கட்சிகளுக்கு இடையேயுள்ள வேற்றுமைகள் அவர்களுக்கு விளங்கமாட்டா. தேர்தலுக்கு அபேட்சகர்களாயிருப்பவர்கள் இத்தகைய பொதுமக்களிடம் அணுகுகிறபொழுது தங்களுக்குப் பொருளுதவி என்ன செய்யக் கூடும்என்று கேட்கிறார்கள். சந்தர்ப்பம்கிடைக்கிறபொழுதெல்லாம் ஏதேனும் ஒரு விதத்தில் பொருளைத் தேடுவதே அவர்களுடைய நாட்டமாக இருந்து வருகிறது. அன்னவர்களுக்குப் பொருளுதவி அல்லது கைக்கூலி அல்லது லஞ்சம் கொடுக்கிற முறை அன்று முதல் தேர்தலிலேயே உருவெடுத்தது. கைக்கூலி தருதலில் ஒரு கட்சி மற்றொரு கட்சியோடு போட்டி போட ஆரம்பித்தது. எந்தக் கட்சி அதிகப் பணம் கொடுத்ததோ அந்தக் கட்சிக்கு வாக்குக் கொடுத்தார்கள். ஒவ்வொரு புதிய தேர்தலிலும் அது இப்பொழுது மாமூல் ஆகியிருக்கிறது. ஏழைகளாயிருக்கிற பொதுமக்கள் எல்லாக் கட்சிகளிடத்திலிருந்தும் கைக்கூலி வாங்கிக்கொண்டு தங்கள் கூட்டத்தில் இத்தனைபேர் இன்ன கட்சிக்கு வாக்குக் கொடுப்பது மற்று வேறு இத்தனைபேர் இன்ன கட்சிக்கு வாக்குக் கொடுப்பது என ஒப்பந்தம் பேசிக் கொள்கின்றனர். இன்னும் ஒரு சிலர் எல்லாக் கட்சிகளுக்கும் வாக்குக் கொடுப்பதாகப் பொய் சொல்லி ஏதோ ஒரு அபேட்சகருக்கு மட்டும் வாக்கு கொடுக்கிறார்கள். நூறு ஐம்பது வாக்காளர்களைத் தங்கள் கைவசம் வைத்திருக்கும் தரகர்கள் தங்கள் சாமர்த்தியத்திற்கேற்ற பிரகாரம் பெருந்தொகைகளை வெவ்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து பிரித்தெடுத்துக் கொள்கின்றனர். இத்தனை விதமான சீர்கேடுகள் Adult Franchise அல்லது பொதுமக்களின் தேர்வு என்னும் அரசியல் திட்டத்தினின்று உருவெடுத்திருக்கின்றன.

இனி, இதற்காகப் பொருள் திரட்டும் அரசியல் கட்சிகள் நேர்மையான முறையில் பணம் சம்பாதிப்பதில்லை. சூதாடுகிறவன் சூதாட்டத்துக்கு எப்படியோ பணம் தேடுவது போன்று அரசியல் கட்சிகள் புரளி முறைகளைக் கையாண்டு பணம் திரட்டுகின்றன. இதன் விளைவு அரசியல் துறைகளைப் பாழாக்குவதோடு நின்றுவிடுவதில்லை. அரசாங்கத்தில் அமைந்துள்ள உத்தியோகஸ்தர்களில்எல்லாப் படித்தரங்களிலிருக்கும் காரியஸ்தர்கள், மந்திரிமார்கள் லஞ்சம் வாங்குவது போன்று தாங்களும் லஞ்சம் வாங்க ஆரம்பித்துள்ளனர். நாடு முழுதும் இன்றைக்கு லஞ்சம் மயமாகவிருக்கிறது. நல்ல காரியத்துக்கும் லஞ்சம் கொடுத்தாலொழிய அது நிறைவேறப்பெறாது. நெறி பிறண்டுள்ள முயற்சிகள் பல லஞ்சத்தின் வாயிலாக வெற்றியடைந்து வருகின்றன. பொய்யும் பித்தலாட்டமும் கேடுகளாக மக்களுக்குத் தோன்றுவதில்லை. அவைகளைக் கையாண்டாலொழிய வாழ்க்கையில் தாக்குப்பிடிக்க முடியாது என உணர்கின்றனர். எல்லாச் செயல்களுக்கும் கைக்கூலி கொடுத்து நிறைவேற்றுவது மாமூலாயிருக்கிறது. முப்பது வருஷங்களில் மக்கள் எல்லாருடைய மனப்பான்மையும் இங்ஙனம் சீர்கேடு அடைந்திருக்கிறது. இதை முன்னேற்றம் என்று சொல்லுவதா அல்லது பிற்போக்கு என்று சொல்லுவதா ?

பதவி வேட்டையில் மோகம் கொண்டுள்ள அரசியல் வாதிகள் நாடு அடைந்துவரும் சீர்கேட்டைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஏதேனும் ஒரு விதத்தில் ஏதேனும் ஒரு காலத்தில் தாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி தங்களுக்கு இஷ்டமான போக்கில் செல்வத்தைத் திரட்டுதலிலும் ஆதிக்கத்தைக் கைவசத்திலேயே வைத்திருப்பதிலும் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். வேப்பமரம் போன்று நம் நாடு இன்றைக்கு இருக்கிறது. வேப்பமரத்தில் கொழுந்து இலையிலிருந்து அடிவேர் பரியந்தம் எந்தப் பகுதியைச் சுவைத்துப்பார்த்தாலும் அது கசக்கும். அந்த நிலைக்கு நாடு வந்துள்ளது. இச்சீர்கேட்டினின்று மீளாவிட்டால் நம் சமுதாயத்துக்கு அழிவை நாமே தேடிக்கொள்கிறோம். இதினின்று மீளுவது எப்படி என்பதை மேலும் ஆராய்வோம். (தொடரும்)

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

பரமாத்மா ஜீவாத்மாவாக ஏன் வடிவெடுக்கிருர்? அவர் ஜீவனுக ஜகத்தாக ஒருபொழுதும் வடிவெடுக்கவில்லே; அவர் யாண்டும் தம் யதார்த்த நிலேயில், நிஜ சொருபத்தில் திளேத்திருக்கிருர். துரிய நிலேயை நாம் எட்டும் பொழுது இவ்வுண்மை நமக்கு விளங்கும். இது ஒரு விளக்கம், கொள்கை. ஜீவனுக, ஜகத்தாக விளங்கிக் கொண்டிருப்பது பரமாத்மாவின் இயல்பு, மகிமை, விபூதி என்று சொல்லப்படுகிறது. அலகிலா விளேயாட்டுடையான் என்று இறைவன் இயம்பப்படுகிருர். அந்த இயல்பு, அம்ஸம் ஜீவர்கள் அனேவரிடத்திலும் தோன்றிக் கொண்டிருக்கிறது. ஓயாத இன்ப நாட்டம் கொண்டவைகளாக ஜீவராசிகள் அனேத்தும் இருக்கின்றன. மாணவர்கள் பந்தை உதைத்தோ, தட்டியோ விளேயாடி மகிழ்கிருர்கள். சிறுவர்கள் ஓடியாடி, ஆட்டம் போட்டு, கூவி, குதித்து, கைதட்டி மகிழ்கிருர்கள். பெண்கள் குனிந்து நிமிர்ந்து கோலாட்டம் ஆடி மகிழ்கிருர்கள். இப்படியெல்லாம் இருப்பது மனித இயல்பு. பூனேக்குட்டியும், நாய்க்குட்டியும், பசுங்கன்றுகளும், ஆட்டுக்குட்டியும், பக்ஷிகளும், குதிப்பதும், தாவுவதும், கூவுவதும் எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றன. சிற்றுயிர்களும் இன்புற்றிருக்கின்றன. பூச்செடிகளும், மாமரமும் பூத்துக் குலுங்குவது இயற்கைத் தாயின், பூமாதேவியின் பூரிப்பைக் காட்டுகிறது. பரமாத்மாவினுடைய மகிழ்ச்சி, ஆனந்த அம்ஸம் ஜீவர்களிடத்தில் இப்படியெல்லாம் வெளிப்படுகிறது. இது மற்ரெரு கோட்பாடு, கொள்கை. ஆனல் ஜீவன் தன் நிஜ சொருபத்தை மறந்து தாற்காலிகமாக அக்ஞானத்தால் மறைக்கப்பட்டவனுக, ஒரு பிராந்தி நிலேயில், கனவு காணும் நிலேயில் இருக்கிருன் என்று இரு கொள்கைகளும் ஏற்றுக்கொள்கின்றன. கொள்கைகள், வாதங்கள் எப்படியோ இருக்கட்டும். நாம் ஜீவர்களாகத் தோன்றி இன்பதுன்பம் துய்த்து வாழ்தல் நமக்குப் பிரத்யக்ஷம். அதை நாம் திடமாக உணர்கிரேம். இதற்கெல்லாம் காரணம் என்ன? இவைகள் எப்படி வந்தன? இதிலிருந்து மீளுவது எப்படி? இந்த ஆராய்ச்சி இன்றைய நம் நிலேக்கு மிகவும் பயன்படும்.

ஜீவனுக்கு ஏழு விதமான பந்தங்கள் (கட்டுகள், தளேகள்) ஏற்படுகின்றன. அவை யாவன: 1. துக்கம் 2. பிறவி 3. கர்மம் 4. ராக துவேஷம் (விருப்பு வெறுப்பு) 5. அபிமானம் (அதிகமான பற்றுதல்) 6. அவிவேகம் 7. அக்ஞானம் என்பன. இவைகளில் முந்தியதற்குப் பிந்தியது காரணமாகிறது. இவை ஒவ்வொன்றும் எத்தகையது என்பதையும், எப்படி அவைகள் சங்கிலிபோல் ஒன்றிலிருந்து ஒன்ருக வரிசையாக வடிவெடுக்கின்றன என்பதையும் நம் பெரியோர்கள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். அவர்களது ஆராய்ச்சித் திறனுக்கும் புத்திக்கூர்மைக்கும் அது சான்று போன்று அமைந்துள்ளது. விஷயத்தில் எல்லா அம்ஸங்களேயும், எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து கேள்வி–பதில் ருபமாக அமைத்துள்ளார்கள்.

கேள்வி: ஜீவாத்மாவுக்குஏற்படும் துக்கம் அதற்குச் சுபாவமானதா, (இயற்கையானதா) அல்லது ஆகந்துகமா? (செயற்கையா, பின்னல்வந்ததா?)

பதில்: அது செயற்கையே தவிர ஜீவாத்மனுக்குத் துக்கம் சுபாவமானதுஅன்று. ஜீவாத்மனுக்குத்துக்கம் சுபாவமானதேஎன்று ஏற்றுக்கொண்டால் அதில் பல தோஷங்கள், முரண்பாடுகள் வருகின்றன. துக்கம் சுபாவமானது தான் என்று வைத்துக்கொண்டால் ஜீவனல் என்றுமே அந்தத் துக்கத்தைத் துடைத்துத் தள்ள, மாற்ற, கடக்க முடியாததாகிவிடும். யாருக்கும் சுகம் என்பதே கிட்டாது என்று ஏற்படும். துக்கத்தைப் போக்கவும் சுகத்தை அடையவும் முயற்சியே இருக்காது. தான தர்மம் செய்தல் போன்ற நற்காரியங்களிலும், யோகம், தியானம், தெய்வ வழிபாடு ஆகிய சத்காரியங்களிலும் யாருக்குமே ஈடுபாடு வராது. நமது வேத சாஸ்திரங்கள் யாவும் பயனற்றதாகிவிடும்.

கேள்வி: ஜீவனுக்குத் துக்கம் இயற்கையாகவே உள்ளதாக வைத்துக்கொண்டு

அதைத் தீர்க்க பிரயத்தனம் செய்வதாக வைத்துக்கொள்ளலாகாதா?

பதில்: இம்முடிவு பொருந்தாது. ஏனென்றால் இயற்கை என்பது தன் சொரூபமானதால் அதை அழிக்க யார்தான் முயலுவார்கள்? தன் சொரூபமே அழிந்துவிட்டால் பலனை அடைவது யார்? கற்கண்டில் உள்ள இனிப்பும், புளியில் உள்ள புளிப்பும், அதனதன் இயல்பு, குணம், சொரூபம் ஆகும். அக்குணத்தை அது இழந்தால் அதன் சொரூபத்திலேயே குறை ஏற்படுகிறது, பொருளே அழிந்து போகிறது. தென்னலிராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க அதைக்குளிப்பாட்டி கல்லைப்போட்டுத் தேய்த்துக் கொண்டிருந்த கதை நமக்குத் தெரியுமல்லவா? அது எப்படி வெள்ளை நாயாகும்? துக்கம் நாசமாகும்போது ஆத்ம சொருபத்துக்கு நாசம் உண்டாகும் அல்லவா? ஆத்மாவோ அழிவற்றது. வேத வாக்கியங்களும் பெரியோர் அனுபவங்களும் இதற்கு ஆதாரங்களாகும். ஆகையால் ஜீவாத்மாவுக்குத் துக்கம் இயற்கை அன்று, செயற்கை தான் என்று அறியவும். ஒருவன் ஏழையாகப் பிறந்தாலும் பின்னல் பெரியவனை பிறகு முயன்று செல்வந்தன் ஆகிருன். இதுபோன்றதன்று இயல்பு என்பது. இங்கே இயல்பு என்பதை நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும். இப்போதுள்ள மானுட இயல்புகளை, குணங்களையெல்லாம்நாம் பலபிறவிகளில் உலக அனுபவங்களிலிருந்தும், கஷ்ட நஷ்டங்களிலிருந்தும், சூழ்நிலையினின்றும் பெற்றிருக்கின்ருேம். இதை அனுபவம் வர வர மாற்றிவிடலாம், தானே மாறிப்போய்விடுகிறது. கோபக்காரன் சாந்தமானவன் ஆகிவிடுகிருன்,லோபி ஒருவன் மனமுவந்து பெரிய தானங்களைச் செய்கிருன். கோழை வீரனகிருன். கீழான மானுடஇயல்புகள் எல்லாம் மேலான இயல்புகளாக, தெய்வீக இயல்புகளாக மாறித்தான் ஆகவேண்டும். கீழான இயல்பு இடையில் வந்தது. அது இடையில் போய்விடும். ஆனல் இங்கே சொரூப லக்ஷணம் என்று சொல்லப்படுகிறது. அக்னிக்கு உஷ்ணம், வெளிச்சம் சொரூப லக்ஷணம், புகை தடஸ்த லக்ஷணம். அக்னிக்கு உஷ்ணத்தன்மை இல்லாவிட்டால் அதை அக்னி என்றே சொல்லமுடியாது. அக்னியையும் உஷ்ணத்தையும் பிரித்து அறியமுடியாது, பிரிக்கமுடியாது. இரண்டும் ஒன்றே. அது போன்று ஆனந்தம், ஆத்மாவின் சொரூப லக்ஷணம் ஆகும்.

கேள்வி: இயற்கையான ஸ்வபாவம் மட்டும் நாசமாகி, சொரூபம் மிஞ்சமுடியாதா? இதற்கு உதாரணமாக அக்னியைச் சொல்லலாம். அக்னிக்கு உஷ்ணம் இயற்கையாக உள்ளது. மந்திரத்தினலும், மணியாலும், ஜால வித்தையினலும் உஷ்ணம் இல்லாமல் செய்ய முடிகிறதல்லவா! அக்னியின் சொரூபம் அப்படியே இருக்கிறது; ஆனல் அதன் இயற்கை குணமான உஷ்ணம் தெரிவதில்லையல்லவா? அக்னிசட்டி எடுத்தல், தீமிதித்தல் (தீக்குழியைப் பூக்குழி என்று சொல்லுவார்கள்) இவைகள் உணர்ச்சி வேகத்தினல் உஷ்ணத்தை இழந்தவை ஆகின்றன. கோபிகாஸ்திரீ ஒருத்தி ஆலயத்தில் தீபத்திற்கு எண்ணெய் ஊற்றிக்கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு ஸ்ரீ கிருஷ்ணனது காட்சி தென்பட்டது. அக்காட்சியில் லயித்துப் போய் அவள் அப்படியே நின்ருள். அப்போது அவளது கையைத் தீபச்சுடர் எரித்தது; அவளது மேலாடையும் தீப்பற்றியது. இது ஒன்றும் அவளுக்குத் தெரியவில்லை. அவளது தாய் அவள் கிருஷ்ணனை நாடி எங்காவது ஓடிப் போய் விடப்போகிருள் என்று பின்னலேயே வந்தாள். "ஐயோ மகளே, உன் மேலாடை பற்றி எரிகிறதே, உன் கையைத் தீபச்சுடர் எரிக்கிறதே ஒன்றுமே உனக்குத் தெரியவில்லையா?" என்று கத்திக்கொண்டு ஓடி வந்தாள் என்று பாகவதத்தில் படிக்கிருேம். மனது கடவுளிடம் இப்படி ஈடுபட்டு விட்டால் தீயின் உஷ்ணமும், வேறு எந்தச் சரீர உபாதியும் என்ன செய்ய முடியும்? இந்த உதாரணங்களில் அக்னியின் சொரூபம் போய்விடவில்லை. அதே சமயம் அதன் குணமாகிய சுடுதல் இல்லாது போயிற்று. அதுமட்டுமன்று, அது குளிர்ந்தும் இருந்தது. ஹனுமானின் வாலில் வைக்கப்பட்ட நெருப்பு குளிர்ந்து இருந்தது. அப்பருக்கு நீற்றறைகுளிர்ந்துஇருந்தது. இவை போல ஜீவாத்மாவுக்குத் துக்கம் இயற்கையானது என்றும் விசேஷ கர்மங்களிலும் ஆத்ம சாதனங்களினலும் அது நீக்கப்பட்டுச் சுகம் உண்டாகிறது என்றும் ஏன் முடிவுகட்ட

லாகாது?

பதில்: மேலே சொன்ன உஷ்ணமற்ற, சுடும் தன்மையை இழந்த நிலை தாற்காலிக மானது. நிரந்தரமாக எல்லாருக்கும் அப்படி இருப்பது அல்ல. கர்மாவினல் ஏற்பட்டஒன்று அக்கர்மா போனல் உண்டாக்கப்பட்ட வஸ்து வும் போய்விடும். கோடையில் வெய்யில் அதிகம். சில வேளைகளில் மேகம் மூடி வெயி லின் கொடுமை தணிகிறது. மேகம் கலைந்து போன பிறகு பழையபடி வெயில் காய்கிறது. ஒரு குழந்தை ஐஸ்கிரீமை ருசித்துச் சாப்பிடு கிறது, அது மகிழ்ந்திருக்கிறது. சாப்பிட்டுத் தீர்ந்த பிறகு மகிழ்ச்சியுற்றிருக்கிற நிலை படிப் படியாகக் குறைந்து போகிறது. மாணவன் ஒருவன் உல்லாசப் பயணம் போகிறுன். காடு, மலை, கடல், நீர்வீழ்ச்சி, அணைகள், பூந்தோட் டம், பெரிய நகரம் ஆகிய விநோதங்களையெல் லாம் பார்த்து வெகு சந்தோஷமாய் இருக் கிறுன். வீட்டிற்குத் திரும்பி வந்ததும் மகிழ்ச்சி யுற்றிருந்த நிலை மாறிவிடுகிறது. இப்படியே வாழ்க்கைச் சம்பவங்கள் பலவற்றையும் சீர் தூக்கிப் பாருங்கள். அவை அவ்வப்போது நிகழ்பவை, மேலும் கர்மபலனும் அனுபவித்துத் தீர்ந்ததும் அதனல் ஏற்பட்ட நன்மையோ, தீமையோ, சொர்க்கமோ, நரகமோ மறைந்து போகும். உதாரணத்தில் சொல்லப்பட்ட மணி மந்த்ரம்இவைகளினல் ஏற்பட்ட மாறுதல் அவைகள் போய்விட்டால் மாறுதலும்மறைந்து போகும், அக்னியின் உஷ்ணத் தன்மை ஏற் பட்டு விடும். அதே போல் நல்ல கர்மங்களி னலும், உபாசனையினலும், மனதின் தீவிர ஈடு பாட்டினலும் ஏற்படும் சுக ரூபமான மாறுதல் அந்தச் சாதனங்களை நிறுத்திவிட்டால் சுகம் மறைந்துபோய் அதன்இயற்கையான துக்கமே மிஞ்சும். ஆகவே ஜீவர்களுக்குத் தாற்காலிக மான சுகம் தோன்றுமேயன்றி சாசுவதமான, மறு ஜன்மமற்ற மோக்ஷ சுகம் எப்பொழுதுமே கிட்டாது. மோக்ஷ சுகம் என்பது உற்பத்தி யாகக் கூடியதாக இருந்தால் அது முடிவு உடையதாக, நிலையற்றதாக ஆகிவிடும். தோன்றின அனைத்தும் அழிந்தே தீரும். ஆனல் வேதத்தில் न च पुनरावर्तते— மறுபிறப்பு உண்டாவதில்லை, மோக்ஷம் என்பது சாஸ்வத மானது என்றும் अखण्डमानन्दमरूपमद्भुतं — அகண்டம்—ஆனந்தம்—அரூபம்—அத்புதம் — பிளவுபடாத, துண்டு ஆகாதபூரணம்—ஆனந்த மயம்—உருவமற்றது—அதி ஆச்சரியமானது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது நம் சான்றோர்களின் அனுபவம்–ஆப்தவாக்கியம். ஜீவாத்மாவுக்குத் துக்கம் இயற்கை என்று வைத்துக்கொண்டால் ஆழ்ந்த தூக்கத்திலும் சுஷுப்தி அவஸ்தையிலும், யோகிகளின்சமாதி நிலையிலும் துக்கமேஏற்படும். ஆனல் உண்மை அப்படி இல்லை. ஆழ்ந்த தூக்கத்திலும் சமாதி நிலையிலும் பரிபூரணஆனந்தம்அனுபவிக்கப்படு கிறது. ஆகையால் ஜீவாத்மாவுக்குத் துக்கம் என்பது செயற்கையானது, இடையில் தோன் றியது. சுகமே, ஆனந்தமே அதற்கு இயற்கை யானது, அதன் சொரூபமானது என்பது தீர் மானம்.

இனி, இம் முடிவை ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு என்ன ஆக்ஷேபம்? இதைவிடத் துருவி, அலசி ஆராயமுடியாது. இந்த ஆராய்ச்சி நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது; நமது நிஜ சொரூபம் ஆனந்தமாயிருக்க, இடை யில் தோன்றிய செயற்கையான இந்தத் துக் கத்துக்கு எவ்வளவு ஸ்தானம், மதிப்பு தந்துள் ளோம்! அதைத் துடைத்துத் தள்ளுதல் எளிது. ஆனல் அதற்கு இறைவன் அருள் வேண்டும்; மனபரிபாகம் வேண்டும். இனி ஆனந்த சொருபியான ஜீவாத்மாவுக்கு இடை யில் வந்த இந்தத் துக்கத்துக்குக் காரணம் யாது என்று ஆராயப்படுகிறது.

கேள்வி: சுகஸ்வருபியான, ஆனந்தருபி யான ஆத்மாவிற்கு இந்தத் துக்கம் எப்படி உண்டாயிற்று?

பதில்: சரீரத்தை அடைந்ததால் துக்கம் வந்தது. எங்கெல்லாம் ஜீவன்சரீரத்தைப்பெறு கிறதோ அங்கெல்லாம் துக்கம் ஏற்படுகிறது என்பதை உலகில் காணலாம். நெருப்பு எரியும்போது புகை வருகிறது. நெருப்பையும் புகையையும் நாம் சேர்ந்தே பார்க்கிறோம். நெருப்பைப் பார்க்காமல் தூரத்தில் புகையைக் கண்டால் ஆங்கு ஏதோ தீ பிடித்துவிட்டது என்று யூகிக்கிறோம். புகைக்குக்காரணம் நெருப்பாகத்தான் இருக்க முடியும். எங் கெல்லாம் புகை காணப்படுகிறதோ அங்கெல் லாம் நெருப்பு இருக்கிறது என்பது ஒரு தர்க்க

ரீதியான, நியாய சாஸ்திர முடிவு ஆகும். இதற்கு வியாப்தி என்று பெயர். இந்த நியாய முடிவைப் பயன்படுத்திப் பார்த்தால் சரீரம் எடுத்த ஜீவர்கள் எல்லாம் நோய், பசி, முதுமை இவைகளால் துன்புறுகின்றன; வேறு உயிர்களால் ஆபத்து, துன்பம் அடைகின்றன; பஞ்ச பூதங்களால் ஆபத்தும் துன்பமும் அடைகின்றன. இது நமது அனுபவம். பிற உயிர்வகைகளும் இப்படித் துன்புறுவதைப் பார்க்கிறோம். சரீரம் இல்லாத இடத்தில் துன்பம் இல்லை. ஆழ்ந்த உறக்கத்தில் சிருஷ்டி பேதம் ஏதும் இல்லை; அங்கு ஒரே ஆனந்தநிலை; எந்தச் சரீரத்தில் எத்தகைய வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாலும் சரி ஆழ்ந்த தூக்கத்தில் துக்கம் இல்லை. விழிப்பு நிலைக்கு வந்தால் பழைய துக்கங்கள் பற்றிக் கொள்கின்றன. ஆகையால் இந்தச் சரீரமே எல்லாத் துக்கத்துக்கும் காரணம் என்று முடிவு கட்டப்பட்டிருக்கிறது.

கேள்வி: அரசர்கள், மிகுந்த செல்வந்தர்கள் ஆகிய இவர்களுக்கும் சரீரத்தால் துக்கம் உண்டாகிறதா?

பதில்: ஆம். அவர்களுக்கும் துக்கம் உண்டு. சரீர சம்ரக்ஷணைக்கு வேண்டியதெல்லாம் இருக்கலாம். வசதி இருப்பதால் சரீர துன்பம் அனுபவிப்பது வேண்டுமானால் குறைவாக இருக்கலாம். ஆனாலும் அவர்களுக்கும் நோய், முதுமை இவைகளினால் துன்பம் இருக்கவே செய்கிறது. அதைவிட துக்கம் நிறைந்த மனவேதனை அவர்களுக்கு ஏராளமாக உண்டு. சரீரத் துயரங்களைப் பொருட்படுத்துவதும், அனுபவிப்பதும் மனதுதான். ஆனால் சரீரம் நன்றாக இருக்க மனம் வேறு பல காரணங்களால் வேதனைப்படுகிறது. சத்ருக்களால் அவர்களுக்கு ஆபத்து உண்டு. அரசாங்க நிர்வாகப்பிரச்னைகள், நிதிபற்றாக்குறை, பஞ்சம், மக்கள்பிரச்னைகள் இவைகளை அவர்கள் சமாளிக்கவேண்டியிருக்கிறது. தன் மனைவி, மக்கள் இறத்தல், சந்ததி இல்லாது போதல் இவைகளும் அவர்களை வாட்டுகின்றன. சரீரத் துன்பம் யாரையும் விட்டபாடில்லை. அரண்மனையில் வாழ்பவர்களைப் பற்றியும், அந்தஸ்து அதிகாரத்தில் இருப்பவர்களைப் பற்றியும் நாம் அறியாமையினால் இன்புற்று இருக்கிறார்கள் என்று நினைக்கிறோம்.

வயிற்றுக்கு இல்லாத ஏழையும் அன்றாடம் சினிமாப் பார்க்கிறான்; பணக்காரனைப் போன்று பகட்டான உடை அணிகிறான். இன்பம்அனுபவிப்பதாக நினைத்துக் கொண்டு துன்பத்தை வளர்த்துக் கொள்கிறான். இதெல்லாம் அறியாமையின் வினைவே. விவேகானந்த சுவாமிகள் தம் தந்தையாரிடம் சென்று "நம் வீட்டில் நம் கௌரவத்திற்கே கேடு விளைவிக்கின்ற சோம்பேறி, குடிகாரக் கூட்டத்தை நீங்கள் ஏன் ஆதரித்து வருகிறீர்கள்?" என்று கேட்டார். "மகனே, இவ்வுலகின் துன்ப துயரங்கள் எப்படிப்பட்டவை என்பது உனக்குத் தெரியாது. அவர்கள் மது அருந்தி தாற்காலிகமாகவாவது துன்பங்களை மறந்திருக்க முயலுகிறார்கள்" என்று தகப்பனார் சொன்னார். துன்பப்படாத உயிர் இல்லை. அந்தத் துன்பங்கள் அனைத்திற்கும் பிறப்பிடம் இந்தச் சரீரவாழ்வே.

கேள்வி: முனிவர்கள், யோகிகள், ஞானிகள், விவேகிகள் இவர்களும் சரீரத்தால் துன்பமடைகிறார்களா?

பதில்: ஆம் அவர்களுக்கும் துக்கம் உண்டு. நோய், மூப்பு, மரணம், பிற உயிர்களால் ஆபத்து இவைகள் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் அவர்கள் மனம் பக்குவப்பட்டிருப்பதால் அவற்றை அவர்கள் பெரிதாகப் பாராட்டுவதில்லை. திதிக்ஷை என்கின்ற தெய்வீகக் குணத்தை அவர்கள் வளர்க்கிறார்கள். துன்பங்களிலிருந்து அவர்கள் நல்லறிவு பெறுகிறார்கள். பண்பாட்டில் மேலே போகப்போக துன்பம் என்பதே அவர்களுக்கு இல்லை. இன்பமே, எந்நாளும் துன்பமில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். துக்கங்கள் எல்லாம் அந்தக் கரணத்துக்குச் சம்பந்தமானவையே தவிர ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை. ஆத்மா நித்தியமானது. ஞான மயமானது. ஆனந்த ரூபமானது. அதைத் துக்கம் எப்படி எட்ட முடியும்? அவர்கள் சரீரத்துடனிருந்தாலும் சரீர உபாதிகளைத் தாண்டி பிரம்மத்தில் லயித்திருக்கிறார்கள். சரீரத் துன்பங்கள் அவர்களது பிரக்ஞையை மறைப்பதில்லை. அவர்கள் ஸ்திதப்ரக்ஞர்கள். ஸ்திதப்ரக்ஞன் ஆவதே மானுடவாழ்வின் குறிக்கோள் ஆகும்.

வாழ்வில் வெற்றியடைய வழிகள்

(சுவாமி துருவானந்தர்)

உழைப்பு

மனிதனொருவன் கடைக்குச் செல்லுகிறான். ஏராளமான பழக்குவியல்களைக் காணுகிறான். அப்பழங்களுக்கிடையே கண்ணைக் கவரும் வண்ணம் ஆப்பிள் குவியல் தென்படுகிறது. அதன் நிறமும், தோற்றப் பொலிவும் உள்ளத்திற்கு உவகை ஊட்டுகிறது. ஆனால் அந்தப் பழமானதுதன்னை இந்த அளவுக்குப் பக்குவப் படுத்துவதற்கு எவ்வளவு சிரமம் எடுத்திருக்கும்! ஓயாது வெயிலிலும், மழையிலும், பனியிலும் கிடந்து தன்னைப் பக்குவப்படுத்தியதின் விளைவாகத்தான் இன்று இத்தகைய முழு வளர்ச்சியடைந்த ஆப்பிளாக அனைவரையும் கவரும் உயர்நிலை எய்தியுள்ளது. புறவுலகுக்குக் காட்டிக்கொள்ளாது தாவர உலகில் நடக்கும் இயக்கம் இதுவாம்.

கலைஞானத்தை எடுத்துக் கொள்வோம். ஓவியனொருவன் அற்புதமான சித்திரம் ஒன்று தீட்டுகிறான். அது உயிரோவியமாகப் பேசுகிறது. பார்ப்பவர் கண்களை மீட்க முடியாது அதில் லயமாக்கிவிடுகிறது. இவ்வற்புத சித்திரத்தைத் தீட்டினானே அக்கலைஞன், இக்கலையில் பிரவேசித்தவுடனே இத்தகைய சிறப்பான நிலை எய்திருக்க முடியுமா? இன்று நாம் அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள காலத்திலே வாழ்ந்து வருகிறோம். ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான விஞ்ஞான கண்டு பிடிப்புகள், வியப்பிற்குரிய விண்ணளாவும் கட்டிடங்கள், போர்த் தளவாடங்கள், வண்டி வாகனாதிகள் இன்னும் ஏராளமானவைகள் தோன்றிய வண்ணமிருக்கின்றன. இங்ஙனம் இவைகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது எது? அதுதான் உழைப்பு. தனி மனிதனாக இருந்தாலும் சரி, ஒரு சமுதாயமாக இருந்தாலும் சரி அதனதன் உழைப்பிற்கேற்றபடிதான் அதனதன் முன்னேற்றமும் இருக்கும். உழைக்காதிருந்து உயர்நிலைக்குப் போனவர்களை இதுகாறும் சரித்திரம் கண்டது இல்லை.

நாடு ஒன்று எல்லாவிதத்திலும் மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. அந்த நாடு முன்னேற வழி என்ன என்று ஒருவரைக்கேட்டால் அவர் 'பணம் தான் பற்றாக்குறை; பணம் மட்டும் இருந்தால் கவலையில்லை' என்பார். இன்னொருவரிடம் அதே கேள்வியைக் கேட்போம். 'அந்நாட்டிலுள்ளவர்கள் முறையாகக் கல்வி கற்றிருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம்' என்பார். மற்றொருவரை இந்த வினாவுக்கு விடையளிக்க வேண்டினால் அரசாங்க அதிகாரம், பதவி இவைகள் இருந்தால் அனைத்தையும் சாதிக்கலாம் என்று கூறுவார்.

பணமிருந்தும் கவலை தோய்ந்த முகத்தோடு, நிம்மதியில்லாமல் வாழ்பவர்களை ஏராளமாகக் காணலாம். ஆகவே பணம் மட்டும் மகிழ்ச்சியையும், மன அமைதியையும் தந்துவிடப் போவதில்லை. கல்வி கற்றிருந்தால் மட்டும் வாழ்க்கைப் பிரச்னைகள் தீர்ந்துவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. கல்வி கற்றவர்களால் தான் இன்று நாட்டுக்குப் பெரிய பிரச்னையாக வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அதிகாரத்தில் ஆசைவைத்து ஆட்சியைப் பிடித்து மனம்போன போக்கில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து மக்களின்வெறுப்புக்கு ஆளானவர்கள் ஏராளம். ஆக வெறும் அதிகாரத்தால் மட்டும் நாட்டுக்கு முன்னேற்றத்தைக் கொண்டுவரமுடியாது.

நாடு முழுவதும் சுபிட்சத்தை எதிர்பார்த்திருக்கிறது. அந்தச் சுபிட்சம் எப்படி வந்து சேரும்? தரிசான நிலத்தை வைத்து, வீணாகச் சிதறிப் போகிற நீரை வைத்துக்கொண்டு எப்படித் தன் நிலத்தை வளப்படுத்த முடியும் என்று ஏங்குகிறான் விவசாயி. பள்ளிக்குச் சென்றுகொண்டு, கைநிறைய புத்தகங்களை வைத்துக்கொண்டு, பள்ளியில் தேர்ச்சி பெறாத மந்தனாக மாணவன் ஒருவன் இருக்கிறான். இவர்கள் முயன்று தம்தம் துறையில் தீவிரமாக உழைத்தாலொழியவெற்றியின்சிகரத்தை எங்ஙனம் எட்ட முடியும்? பல்வேறு தொழில்கள் வளர்ச்சியடையாது நாடு வறுமையில், வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கியுள்ளது. இது விழித்தெழுந்து முன்னேற்றப்பாதையில் செல்ல வழி என்ன? அதுதான் உழைப்பு. உழைப்பதைத் தவிர வேறு மந்திரங்களோ,

மாயா ஜாலங்களோ எதுவும் நாட்டை வளப் படுத்திவிட முடியாது.

இறைவன் இரண்டு கைகளையும், கால்களை யும், சிந்திக்க மூளையும் கொடுத்துச் சிறப்பாகச் செயல்படு என்று நம்மை இப்பூவுலகுக்கு அனுப்பியுள்ளான். அவன் கொடுத்தவைகளை நன்கு பயன்படுத்தி உழைத்து வந்தால் நம் முடைய வாழ்வை வளப்படுத்த முடியாதா? மனிதன் முயன்றால் முடியாதது ஒன்றும் இம் மண்ணுலகில் இல்லை. இறைவனையே மனிதன் தன் முயற்சியினால் அடைகிறான் என்றால் இந்தச் சாமானியமான உலகில் அற்பமான சிறுவேலைகளைச் செய்து வெற்றிக்கொடி நாட்ட முடியாதா? வாழ்வில் முன்னேற வேண்டும். அதுதான் தன்னுடைய குறிக்கோள். அதை அடைவதைத் தவிர வேறு சிந்தனை கிடையாது என்று கொண்டுள்ள குறிக்கோளில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் தாங்கள் எண்ணி யதை அடைந்து வெற்றி வானிலே பிரகாசிக் கிறார்கள்.

நம்முடைய உழைப்பு எத்தகையது!

வெளி நாட்டைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தவர்களைக் கேட்டால் உழைப்பில் எந்த அளவு நாம் உயர்ந்துள்ளோம் என்பதை ஆதார பூர்வமாக விளக்குவார்கள். உழைப் பவனுக்கு மதிப்புத் தருவது மேல்நாடு. உழைக் காத சோம்பேறி ஒருவனைக்கூடக் காணமுடி யாது அங்கே. அதனால் அந்நாட்டிலே பிச்சைக் காரர்கள் கிடையாது. பிக்பாக்கெட் அடிப்ப வர்களையும் நம் நாட்டில் காண்பது போன்று அங்குக் காணமுடியாது. உழைப்பை இயல் பாகப் பெற்றவர்கள் அவர்கள். உழைப்பில் லாது அவர்களால் இருக்க முடியாது. வேறு வழியில்லாது நம்மவர்கள் உழைப்பை நாடு கிறார்கள். வயிற்றை நிரப்பவேண்டும் என்ற ஒரு குறிக்கோளுக்காக இங்கே பலர் உழைக் கின்றனர். போதிய பணம் கையில் கிடைத்து விட்டால் வேலைக்குப் போகமாட்டார்கள். அந்தப் பணம் கையை விட்டுப் போகும் வரை உறங்கவும் மாட்டார்கள். பிறருடைய ஆடம் பர வாழ்வைக் கண்டு ஆசைப்பட்டு, முறை யற்ற வழியில் பொருளீட்ட முனைவார்களே யன்றி முழு மூச்சாக உழைத்துப் பொருளீட்டி முன்னேற இவர்கள் அறியாதிருக்கின்றனர். தனக்கு வேண்டியதைத் தானே உழைத்துப் பெற வேண்டும், பிறரிடம் வாங்கிப் பிழைக் கக்கூடாது என்ற தன்னம்பிக்கை உணர்வு அங்கே மக்களிடத்திலெல்லாம் ஊறிப் போயி ருப்பதால் ஒவ்வொருவனும் உழைக்க வழி தேடுகிறான். சிறுவன் ஒருவன் பள்ளிக்குச் செல்லும் நாள் முதல் வேலை தேடிப் பணத் தைச் சம்பாதிக்கும் காலம் வரை பொருளுக் காகப் பெற்றோரைச் சார்ந்திருக்கிறான் இங்கே. பள்ளிக்குச் செல்லுகிற பொழுதே தனக்கு வேண்டிய பள்ளிச் செலவுகளுக்கும், சொந்த செலவுகளுக்கும் அவன் வேலை செய்தே சம்பா தித்து ஈடு கட்டுகிறான் அங்கே. இந்த முறை களினால் சிறுவன் ஒருவன் தன் உழைப்பின் மீது நம்பிக்கை வைக்கிறான். அரசாங்கமும், தொழில் ஸ்தாபனங்களும் மனம் வைத்தால் தான் இது நிறைவேற முடியும்.

மேல்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குத் தொழிலாளர்கள் வந்து விடுவார்கள். வேலை தொடங்குவதும் அப்படியே. ஆயிரக்கணக்கான தொழிலாளர் களை மேற்பார்வையிடவோ கண்காணிக்கவோ நம் நாட்டில் உள்ளது போன்று மேஸ்திரி, சூபர்வைஸர் தேவையில்லை. அவரவர்க்குரிய பங்கை அவரவர் செவ்வனே நிறைவேற்றி விட்டுச் செல்கின்றனர். அதனால் ஒவ்வொரு வருக்கும் தங்களுடைய வேலையைப் பற்றிய பொறுப்புணர்ச்சி ஏற்படுகிறது. நம் நாட் டிலோ கண்காணிப்பவர் இருக்கும் வரை அடங்கி வேலை செய்வது போன்ற நிலையிருப் பர். அவர் சற்று அவ்விடமிருந்து அகன்று போய் விட்டால் வேலைக்குப் பதில் விதண்டா வாதமும், அரசியல் பேச்சும், சினிமா பேச்சு மாக வளர ஆரம்பிக்கும். இதற்குக் காரணம் என்ன? பல ஆண்டுகளாக அடிமைகளாக வளர்ந்த நம்மவர் பிறருடைய ஆளுகைக்கு உட் பட்டுத்தான் வேலை செய்கிறார்கள். சுதந்திர மாகப் பொறுப்புணர்ச்சியோடு வேலைசெய்யக் கூடிய நிலை வர இன்னும் சிறிது காலம் ஆகும்.

'கடமை கண்போன்றது; காலம் பொன் போன்றது' என்ற கோட்பாட்டை அறிந்து நடைமுறைக்குக் கொண்டுவருபவர்கள் மேல் நாட்டார். ஒழுங்குப்பாட்டிற்கும் நம்மவருக்கும் வெகுதூரம். காலத்தின் மதிப்பை உணர்ந்த

வர்கள் அவர்கள். காலத்தை வீணுகக் கழிப் பதில் பழகிப்போனவர்கள் நம்மவர்கள். இதற் குக் காரணம் என்ன? தமோகுணம் நம்மவரி டம் ஊறியிருப்பதால் ஊக்கத்திற்கும், உழைப் பிற்கும், சுறுசுறுப்பிற்கும் இடமில்லாது போய் விட்டது. ஆகவே தமோகுணத்திலிருந்து ரஜோ குணத்திற்கு வரவேண்டுமென்று தான் 'எழுமின், விழிமின், கருதிய கர்மம் கைகூடும் வரை உழைமின்' என்று வீரகர்ஜனை புரிந்தார் விவேகானந்தர்.

இந்தியாவிலிருந்து நிபுணர்குழு ஒன்று ஜெர்மனிக்கு விஞ்ஞான ஆராய்ச்சிக்காகப் போனுர்கள். அக்குழுவிலிருந்த ஒருவர் இந்தி யாவில் முகாமிட்டிருந்த ஜெர்மன்காரரைச் சந்தித்து அந்நாட்டில் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களை முன்கூட்டியே கேட்டு அறிந்துகொள்ள விரும்பினர். அந்த ஜெர்மா னியர் இந்திய நிபுணரிடம் சொன்னர்: ''ஜெர் மனிக்கு நீங்கள் போவதில் நிறைய மகிழ்ச்சி. ஆனல் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தியர்கள் சோம்பேறி கள், உழைக்க விரும்பாதவர்கள், வெறுமனே பேசிக் காலம் தள்ளுபவர்கள் என்ற ஒரு அபிப்பிராயம் மேல்நாட்டாரிடம் நிலவி வரு கிறது. அவர்கள் உங்களை என்ன கண்ணேட் டத்துடன் காணுகிருர்கள் என்று அறிந்து அவர்கள் இதுகாறும் உங்கள் நாட்டைத் தவருகக் கருதி வந்தது சரியல்ல என்பதை நிரூபிக்கிற வகையில் நீங்கள் உண்மையாக உழைத்து இந்தியர்கள் கடும் உழைப்பாளி கள்; அவர்களுக்கும் சோம்பலுக்கும் வெகு தூரம் என்பதை அவர்கள் உணரும்படிச் செய்து வாருங்கள்.'' இங்ஙனம் ஆசிகூறி அனுப்பி வைத்தார் அந்த ஜெர்மானியர்.

பழம் பெருமைகளைப் பேசி பரவசப்பட்டுக் காலம் கழிக்காது பழையவற்றை மறந்து நிகழ் காலத்தைக் கருத்தில் வைத்து ஒற்றுமையாக இருந்து உழைப்பது ஒன்றே ஆக்க பூர்வமாக ஏதாவது செய்வதற்குப் பயன்படும்.

எப்படிப்பட்ட உழைப்பு வேண்டும்?

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல்வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்?''

என்று முரசறைந்து ஒற்றுமைக் கீதம் பாடு கிருன் பாரதி. உழைப்பில்தான் மந்தம் என்ரு லும், ஒற்றுமை நம்மிடம் சிறிதும் கிடையாது என்று சொல்லலாம். சிறு சிறு குறைகளைக் கண்டும் காணுது இருக்கமுடியாதா? குற்றம் செய்யாதவர்கள் உலகத்தில் யார் தாம் இருக்கின்றனர்? மனதை அகலவிரித்து வீட்டு முன்னேற்றம், நாட்டு முன்னேற்றம் இவைகளையே கருத்தில் வைத்து வேற்றுமை பாராட்டாது ஒவ்வொருவனும் மனப்பூர்வமாக உழைக்க வேண்டும். வாங்குகிற சம்பளத் திற்கு வஞ்சகமில்லாது வேலை செய்யவேண் டும். சம்பளம் வாங்கி நன்கு அனுபவித்து விட்டு உழைக்காது ஏமாற்ற எத்தனை நாளைக்கு முடியும்? Ugliness is in mind not in Karma என்ருர் விவேகானந்தர். வேலையில் உயர்வு தாழ்வு பாராட்டுவது பாபம். ஈசனு டைய சேவையாக எந்த வேலையைச் செய்தா லும் அது சிறந்த வழிபாடு ஆகிறது.

எதற்கெடுத்தாலும் பிறருடைய உதவி யையே எதிர்பார்த்து வாழ்வது சோம்பலை வளர்த்து ஒருவனை ஒன்றுக்கும் உதவாதவனுக ஆக்குகிறது. தன்னுடைய வேலைகளைத் தானே செய்து பழகிக்கொள்ள வேண்டும். வேலைக் காரர்களை நம்பியிருக்காது தன் பலத்தை நம்பியிருக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். இதன் மூலம் நோயற்ற உடலைப் பெறுவது மட்டுமல்ல சுதந்திரமாகத் தன் விருப்பம் போல எதையும் செய்யலாம். தேங்கியிருக்கிற நீர் கெட்டுவிடுகிறது. ஓடிக்கொண்டிருக்கிற நீர் கெடுவதில்லை. இடையருது உழைத்துக் கொண்டேயிருக்கிறவர்கள் சீக்கிரம் நோய் வாய்ப்படுவதில்லை. .மனதும் கண்டதை நினைத்துக் கெடாமல் செயலில் ஈடுபட இடை யரு உழைப்புப் பயன்படுகிறது.

நாம் செயல்படும் காரியங்களில் வெற்றி பெறுவது அல்லது தோல்வியுறுவது நமது மனத்தின் ஒருமை சக்தியைப் பொறுத்துள் ளது. ஒரு நேரத்தில் ஒரு வேலை என்று கொண்டிருந்தால் நமது முழுமனமும் மேற் கொண்ட செயலிலே மூழ்கியிருக்கும். கையில் புத்தகம் ஒன்று திறந்திருக்கிறது. கண்கள் திறந்து அதைக்கண்டு கொண்டிருந்தாலும் மனது எங்கேயோ அலைந்துகொண்டிருந்தால்

எடுத்துக்கொண்ட அவ்வளவு நேரமும் வீண் தான். ஆகவே கண்ணும் கருத்தும் காரியத்தில் லயித்து விட்டால் அதைத் தொடர்ந்து வெற்றி வந்தே தீரும். வெயிலிலே காகிதத்துண்டைப்பிடித்தால்என்ன ஆகும்? ஒன்றும்ஆகாது. ஆனல் குவிலென்ஸ் என்ற கண்ணுடியிலிருந்து வருகிற குவிந்த சூரிய கிரணம் காகிதத்தை எரித்து விடுகிறதல்லவா? எப்படி? ஒளியெல்லாம் ஒருமுகப்பட்டதனுடைய விளைவுதான் அங்கு அவ்வளவு உஷ்ணம் வந்து காகிதத்தை எரித்தது. அங்ஙனம் சிதறிப் போகிற எண்ணங்களை ஒன்று சேர்த்து எடுத்துக்கொள்கிற முயற்சியில் திருப்பினல்அந்த இலட்சியத்தைச் சீக்கிரம் அடைவது உறுதி. பள்ளிமாணவர்கள் படம்வரையும் ஓவியர் முதலியோர் எவ்வளவுக்கெவ்வளவு தங்களது மன ஒருமை சக்தியைப் பயன்படுத்துகிருர்களோ அவ்வளவுக்கவ்வளவு தங்களது துறைகளில் வெற்றியை அடைவார்கள். விஞ்ஞானிகளும், மெய்ஞ்ஞானிகளும் மனத்தை ஒருமுகப்படுத்தியே அவரவர் துறைகளில் அரிய பெரிய உண்மைகளைக் கண்டு பிடித்தனர். மனதை ஒருமுகப்படுத்தி அகத்தேயும் புறத்தேயும் அவர்கள் ஆழ்ந்து போனதால் இயற்கை தன்னுடைய ரகசியங்களை அவர்களுக்குக் காட்டித் தந்தது. அவர்களைப் போன்று நாமும் மன ஒருமைப்பாட்டுடன் உண்மையாக உழைத்து வந்தால் நாடுகிற இலட்சியத்தை நிச்சயம் அடைய முடியும் என்பதில் சந்தேகமில்லை. தளராமனம், ஒருமுகப்பட்ட மனம், ஊக்கத்தோடு கூடிய மனம், எடுத்துக்கொண்ட காரியத்தில் மகிழ்ச்சியும் விருப்பமுடைய மனம் — இத்தகைய மனம் அமையும்பொழுது உழைப்பு வீண் போவதில்லை.

ஸ்ரீ ஸாரதா ஸமிதி

தீவிரமாகக் கடவுள்நாட்டம்கொள்வதுமானுடப் பிறவியின் சீரிய குறிக்கோள் ஆகும். ஆண்பாலர் பெண்பாலர் ஆகிய இருபாலார்க்கும் இது ஒப்ப முடிந்த லட்சியமாகும். கடவுள் நாட்டம் அதிகரிப்பதற்கு ஏற்ப உலக ஆசைகள் தாமாக மறைந்துபட்டுப் போகின்றன. உலக ஆசைகளை அறவே ஒழித்தவர் துறவியர் ஆகின்றனர். பெண்பாலர்க்கிடையில் இக்காலத்தில் தீவிரமான துறவியாகத் திகழ்ந்தவர் அன்னை ஸ்ரீ ஸாரதா தேவியார் என்பது உலகு அறிந்த விஷயமாகும். அவரைத் துறவறத்துக்கென்றே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆயத்தப்படுத்தினர். அன்னையாரின் பாரமார்த்திகப் பெருவாழ்வு உலகமக்களுக்கு ஓர் ஒப்பற்ற அருள் விருந்து ஆகிறது. அருள் கனிந்த இந்த ஞானத்தாயின் பெயரில் சேலம் ஸ்ரீ ஸாரதாஸமிதி நிறுவப் பெற்றுள்ளது. ஸமிதி என்னும் சொல் திருக்கூட்டம் எனப் பொருள்படுகிறது.

பழங்காலத்தில் பாரமார்த்திக வாழ்வு வாழ விரும்பிய பெண்பாலர்க்குக் கன்னிமாடம் என்னும் ஸ்தாபனம் அமைத்துவந்தனர். அக்காலத்தில் பண்பட்டிருந்த பெற்றோர்கள் அதற்கு முற்றிலும் சம்மதம் கொடுத்து வந்தனர். ஆனல் இடைக்காலத்தில் சமுதாயத்தின் சூழ்நிலை கன்னிமாடத்துக்குப் பிரதிகூலமாயிருந்தது. ஆதலால் அந்த ஸ்தாபனம் மறைந்துபட்டுப் போயிற்று. மகளிர் மணம்புரிந்தே ஆக வேண்டும் என்னும் கட்டுப்பாடு வந்தது. ஆனல் திருவருளின் சகாயத்தால் பழைய அனுகூலமான நிலைமை மீண்டும் வந்துகொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துவது மக்களின் கடமையாகும்.

இக்காலத்தில் கத்தோலிக்ககிறிஸ்தவர்களுக்கிடையில் துறவு பூண்டுள்ள மகளிர் ஸ்தாபனம் (nunnery) உலகெங்கும் நன்கு நடைபெற்றுவருகிறது. அம்மதத்தைச் சேர்ந்த தாய் தந்தையர் மனமுவந்து தங்கள் புதல்வியர்களுள் ஒருத்தியைக் கன்னிமாடத்துக்குச் சீதனம் கொடுத்து ஒப்படைக்கின்றனர். கல்வித்துறையிலும் மருத்துவத் துறையிலும் அம்மகளிர் கூட்டம் அரும் பணியாற்றி வருகிறது. ஹிந்து சமுதாயத்திலும் அத்தகைய ஸ்தாபனம் விரைவில் வருவது இன்றைக்கு அவசியமாகிறது.

பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ விரும்புகிற ஆடவர்களுக்குத் திருப்பராய்த்துறையில் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் வசதியளிக்கிறது. அதேபாங்கில் மகளிர்களுக்குச் சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதி வசதியளிக்கிறது. இந்த

ஸமிதியைத் தாய்மார்கள் சிலர் நிர்வகித்து வருகிறார்கள். அவர்கள் உலக பந்தபாசங்களி லிருந்து முற்றும் விடுபட்டவர்கள் ஆகிறார்கள். சேலம் ஸ்ரீஸாரதா மகளிர் கல்லூரி, ஸ்ரீஸாரதா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஸ்ரீஸாரதா பெண் கள் உயர்நிலைப்பள்ளிக்கூடம், ஸ்ரீ ஸாரதா பால மந்திர் ஆகிய கல்விச்சாலைகளின் நிர்வாகங்கள் அவர்கள் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் எத்தகைய மாதர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதன் விளக்கம் வருமாறு:—

(1) விவாகம் செய்துகொள்ள விருப்பமில் லாத வனிதைகள் இதில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். அதற்கு அவர்கள் தங்கள் பெற் றோரின் அனுமதி பெறவேண்டும்.

(2) குழந்தைகள் இல்லாத கைம்பெண்கள் தங் கள் வசத்தில் இருக்கிற செல்வத்தை ஸமிதியில் சேர்த்துவிட்டு அதில் சேர்ந்துகொள்ளலாம்.

(3) கணவன்மார்களால் கைவிடப்பட்டபெண் கள்ஸமிதியில்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஸமிதியில் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் வரலாறுகளைப் பற்றிக் கடிதம் எழுத வேண்டும். அம்முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மாத்திரமே ஸமிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் சேர்ந்து கொண்டவர் களுக்கிடையில் ஜாதி மத வேற்றுமை கிடை யாது.

ஸமிதியில் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டவர்களுக்குப் பாரமார்த்திக வாழ்வு, கல்வி, ஸ்தாபன நிர்வாகம் ஆகியவைகளில் தக்க பயிற்சியளிக்கப்படும்.

அங்கத்தினர்களை ஆயுட்காலம் முழுதிலும் நன்கு பரிபாலித்துவர ஸமிதி கடமைப்பட்டி ருக்கிறது.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியானது திருப் பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத் தின் லட்சியத்தைக் கடைப்பிடித்து வருகிறது. அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அருள் அன்னை ஸ்ரீ ஸாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய பெருமக்கள் புகட்டிய பெருநெறியை வாழ்க்கையில் நடை முறையில் கொண்டுவருவது இந்த இரண்டு ஸ்தாபனங்களின் லட்சியமாகும்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் கீழே கண்டுள்ள விலாசங்களுக்கு எழுதலாம்.

1. யதீஸ்வரி சாரதாப்ரியா
தலைவி, ஸ்ரீ ஸாரதா ஸமிதி,
அளகாபுரம், சேலம்-4

2. சுவாமி சித்பவானந்தர்
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்,
திருப்பராய்த்துறை-639115, திருச்சி ஜில்லா.

செய்திகள்

நிகழ்பவை

ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி வியாழக்கிழமை யன்று ஈரோடு தாலூகா, காளமங்களம் கிராமம் கணபதிபாளையத்தில் உள்ள ஸ்ரீ வாகீசர் சைவ சித்தாந்தசன்மார்க்க சபை யில் மாலை 3 மணியிலிருந்து 5-30 மணி வரை யில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் அந்தர் யோகம் நடாத்துவார்கள்.

ஏப்ரல் மாதம் 17ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக் குறிச்சியிலும் ஏப்ரல் 24ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலியிலும் ஸ்ரீமத் பரா னந்த சுவாமிகள் ஒரு நாள் அந்தர்யோகங் கள் நடாத்துவார்கள்.

ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமைமாலை 3 மணிக்குமேல் ஸ்ரீவிவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் கோடை விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப் படுவார்கள்.

மே மாதம் 6ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணியிலிருந்து 8-30 மணி வரையில் தர்மபுரி புதூர் மாரியம்மன் கோவில் தெருவி லிருக்கும் ஸ்ரீ வாசவாம்பாள் கல்யாண மண்ட பத்தில் "பகவத்கீதை" என்பது பற்றி ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் சொற் பொழிவு ஆற்றுவார்கள்.

மே மாதம் 7ஆம் தேதி சனிக்கிழமை யன்று வடஆற்காடு ஜில்லா மதனப்பள்ளியில் இரவு 7 மணிக்கு ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் பொதுமக்களுக்கு அருளுரை வழங்குவார்கள்.

DHARMA CHAKRAM Regd. No. M. 6022

EIGHTH IMPRESSION

THE BHAGAVAD GITA

COMMENTARY BY

SWAMI CHIDBHAVANANDA

Original Stanzas-Split up Reading-Transliteration-Word for Word Translation-A Lucid English Rendering and Commentary.

The Commentary expounds this Immortal Philosophy of Life in a simple, rational and soul-elevating method of presentation. This book is a constant companion to those who want to be fixed in a spiritual mooring.



Appropriate sayings of Sri Ramakrishna are profusely quoted.

DEMY 8VO — 1008 PAGES — CALICO BOUND

Nominal Price Rs. 15-00

Inland Postage Rs. 3-25 Foreign Postage Rs. 15-00

SRI RAMAKRISHNA TAPOVANAM
(PUBLICATION SECTION)

TIRUPPARAITTURAI-639115. TIRUCHIRAPALLI DT., SOUTH INDIA.

Edited by SWAMI NITHYANANDA,
Printed&Published by Swami Yogananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.